
பூங்கொடி பதிப்பகம்
லக்ஷ்மி
கை மாறிய போது

# கை மாறியபோது...

புனிதா நர்ஸிங்ஹோமின் கேட்டைத் தாண்டி நடைபாதையில் வேகமாக நடந்து முன்புறத்துக் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு டாக்டர் சம்யுக்தா உள்ளே நுழைவதற்குள் காலை ஏழரை மணியை வரவேற்பறை கடிகாரம் பளிச்சென்று உணர்த்தியது.

'குட்மார்னிங் டாக்டர்' அவளுக்கு சில நொடிகள் முன்னதாக வந்துவிட்டிருந்த ரிஸப்ஷனிஸ்ட் வசந்தி சன்மைகா மேஜைக்குப் பின்னால் அலங்காரமாக பொம்மையாக நின்றபடி புன்முறுவலித்தாள்.

பதில் வணக்கத்தை முணுமுணுத்துவிட்டு சம்யுக்தா அருகிலிருந்த லிஃப்ட்டை நோக்கி விரைந்தாள்.

அன்று காலையிலிருந்து பூவாகத் தூறிக் கொண்டிருந்த மழையில் தெரு சேறாகியதுதான் மிச்சம். அந்தச் சேற்றில் புதைந்த அவள் செருப்புகள் அழுக்காகி விட்டிருந்தன. காலை வேளை பஸ் கூட்டத்திலே அவள் கட்டியிருந்த புடவை அலங்கி விட்டிருந்தது. கூந்தல் கலைந்து நெற்றியில் புரண்டு கொண்டிருந்தது.

சரியாக எட்டு மணியளவில் தமது பென்ஸ் காரில் வந்து இறங்கிவிடுவார் ஆஸ்பத்திரியின் தலைவர் டாக்டர் பரமசிவம். பெயருக்கேற்ப ஒரு நெற்றிக்கண் இருந்து

விட்டிருந்தால் போதும். ஆசாமிக்கு அவ்வப்போது வரும் பயங்கரமான முன் கோபத்திலே எதிரே டாக்டர் - நர்ஸ் அத்தனை பேரையும் பார்வையாலே சாம்பலாக்கி விடுவார். அப்படிப்பட்ட கோபக்காரர் - கண்டிப்பான மனிதர்.

அவருக்குச் சில சங்கதிகள் பிடிக்கவே பிடிக்காது. அதை மாபெரும் தவறாக நினைப்பவர்.

நேரம் கடந்து மருத்துவமனைக்கு யாரும் தமது வேலைக்கு வருவதை அவர் வெறுத்தார்.

மழை, வீட்டில் தொல்லை, உறவினர் இறந்து போய் விட்டார் என்ற கதைகளை அவர் காதில் போட்டுக் கொள்ள மறுத்தார்.

அவருக்கு வேண்டியது கடமை தவறாத கண்ணிய மான உழைப்பு. அதற்காகத்தானே அவரது மருத்துவ மனையில் வேலை பார்க்கும் டாக்டர்கள், நர்ஸ்கள்... மற்ற அலுவலர்கள், தரையைப் பெருக்கித் துடைக்கும் ஊழியர்கள்வரை எல்லாருக்கும் கூடுதலாக சம்பளம் கொடுக்கிறார். நகரத்திலே பல மருத்துவ வசதிகள் கொண்ட அந்தப் பிரபல நர்ஸிங்ஹோமில் வேலை பார்ப்பதே பெருமைக்குரிய விஷயம்.

அலங்கிய புடவையும்... ஒழுங்காக வாரப்படாத கூந்தலுமாக பெண் டாக்டர்களும்... மழிக்கப்படாத முகத்துடன் ஆண் வைத்தியர்களும் வேலைக்கு வருவதை தலைவர் கட்டாயம் அனுமதிக்கமாட்டார்.

வேலையை அங்கே துவங்கு முன்னரே தலை வரைப் பற்றி சகலமும் தெரிந்துகொண்டு விட்டிருந்த சம்யுக்தா மிகவும் எச்சரிக்கையாகவே இருந்தாள்.



பெண் வைத்தியர்களுக்கு ஓர் ஒய்வு அறையும் - ஆண் வைத்தியர்களுக்கு ஓர் ஒய்வு அறையும் வெவ்வேறு தளங்களில் பரமசிவம் ஒதுக்கி வைத்திருந்தார்.

இரவு - பகல்... முழுநேர வேலையின்போது அவ்வப்போது அந்த அறைக்குள் வந்து வைத்தியர் சிறிது நேரம் சிரம பரிகாரம் செய்து கொள்ளப் படுக்கையும் - தமது சாமான்களை வைத்துக்கொள்ள சுவற்றில் பதித்த அலமாரிகளும்... இரவு வேலைக்குப்பின் காலையில் பல்விளக்கி குளிக்க... உள்ளடங்கிய கழிவறை... குளிய லறை இத்யாதி கொண்டதொரு வசதியான அறை அது.

அங்கே வேலை பார்த்த நான்கு பெண் வைத்தியர் களும் அந்த அறையைப் பொதுவாக உபயோகித்தனர். ஆனால் அவர்கள் உபயோகத்திற்கு நான்கு தனி அலமாரிகள் இருந்தன.

தன்னுடைய அலமாரிக்குள் அவள் வாரம் முழுதும் தேவைப்பட்ட புடவை - ரவிக்கை - துவாலைகள் - உள் ஆடைகள், ஒப்பனைப் பொருள்கள் எல்லாவற்றையும் வீட்டிலிருந்து தயாராகக் கொண்டு வந்து வைத்து விடுவது வழக்கம். அத்துடன் ஒரு புதிய ஜோடி செருப்பும் அந்த அலமாரியின் கீழ் தட்டில் பத்திரமாக வைத்திருந்தாள். தியாகராய நகரில் இருந்த தங்கள் வீட்டிலிருந்து அந்த மருத்துவமனைக்கு பஸ்ஸில் போவதற்குள் கூட்டத்தில் இடிபட்டு... அலண்டு போவது வழக்கம். மருத்துவ மனைக்குள் நுழைந்ததும் அவள் முதல் வேலையாகத் தங்களின் அறைக்குள் சென்று முகம், கை கால்களைக் கழுவிக்கொண்டு - முடியை வாரிக் கட்டிக் கொண்டதும் முகத்தில் லேசாகப் பவுடரை ஒத்திக்கொண்டு பொட்டு வைத்து ஒப்பனையை முடித்துக்கொள்வாள். பின்னர்

அலமாரியைத் திறந்து ஏற்கெனவே தான் கொண்டு வந்து வைத்திருக்கும் சுத்தமான, தோய்த்துக் கஞ்சி போட்டு பெட்டி போட்ட வாயில் சேலை ஒன்றை அதனுடைய ஜோடி ரவிக்கையுடன் அணிந்துகொண்டு, அலங்கிப் போன தன் சேலையை மடித்துக் கீழ்தட்டில் வைத்து விட்டு, நர்ஸ் அந்தந்த டாக்டருக்கு என்று அங்கு தயாராக வைத்திருக்கும் சலவை செய்த கோட்டைப் பிரித்து அணிந்துகொண்டு, தன் பெயர் பொரித்த பிளாஸ்டிக் பட்டையை கோட்டுப் பைக்குள் திணித்துக்கொண்டு - புதிய செருப்புகளைக் காலில் மாட்டிக்கொண்டு தன்னுடைய வார்டுக்குக் கிளம்பி விடுவாள். முதலில் அவள்வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் வார்டில் உள்ள நோயாளிகள் அனைவரையும் கவனித்துவிட்டு... இரவு பணி செய்த டாக்டர் மேஜைமீது விட்டுப்போகும் தகவல்களைப் படித்து அறிந்துகொண்டு, பின்னர் தனி அறைகளில் தங்கியுள்ள மற்ற நோயாளிகளைக் கவனிக்கப் புறப்படுவாள். மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பரமசிவம் தமது உதவி வைத்தியர்கள் - நர்ஸ்கள் புடைசூழ தமது மேற்பார்வைக்கு ஒவ்வொரு வார்டை யும் பார்வையிட வருமுன் அவள் தன் கவனிப்பில் உள்ள அத்தனை நோயாளிகளைப்பற்றிய எல்லா விவரங் களையும் மனப்பாடமாக்கிக் கொண்டுவிடுவாள்.

'ராத்திரி... இந்த நோயாளிக்கு என்னென்ன மருந்துகள் கொடுக்கப்பட்டன? ஏழாம் நம்பர் கேஸிற்கு காலை தையல் பிரிக்கவேண்டிய நாளாச்சே' டாக்டர் பரமசிவம் வாயைத் திறக்குமுன் டக்கென்று பதில் கொடுப்பாள். தன் வேலையில் அவளுக்கு அப்படி ஒரு ஈர்ப்பு - அதன் உதவியால்தானே அவள் தன் வயதான பெற்றோருடன் தன் அண்ணன் வீட்டில் தன் சம்பாத்தியத்



தில் கௌரவமாக வாழமுடிகிறது. கூடப்பிறந்த சகோதரன் வீடுதான் என்றாலும், அவர் அங்கே அவர்களுடன் வசிப்பதற்காகவும், தன் சாப்பாட்டிற் காகவும் ஒரு கணிசமான தொகையைத் தன் அண்ணியிடம் சம்பளம் வாங்கிய அன்றே வீடு திரும்பியவுடன் கொடுத்து விடுவது வழக்கம். அண்ணி நர்மதா மிகவும் கண்டிப்பானவள். தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு என்ற கொள்கையுடையவள்.

வேலையிலிருந்து ஓய்வடைந்து விட்டிருந்த மாமனாருக்குக் கிடைக்கும் சொற்ப பென்ஷனிலிருந்து அவள் வீட்டுச் செலவுக்கு ஒரு பகுதியை வாங்கிக் கொண்டு விடுவாள். மாமியார் பாவம் அதிகம் படித்தவள் இல்லை... அந்தக் காலத்தில் ஐந்து வகுப்பு படித்தவள். தமிழ் எழுதப் படிக்க ஓரளவு அறிந்தவள். மருமகள் போடும் ஒரு பிடி சோற்றுக்கு அந்தம்மாள் நாள் முழுவதும் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டி யிருந்தது.

அப்பாவிடம் மிஞ்சும் பென்ஷன் பணத்தைக் கொண்டு அவரால் மாதம் முழுதும் சமாளிக்க இயலாது.

அவர் ஒரு புத்தகப் பிரியர். ஊரில் உள்ள அத்தனை நூல் நிலையங்களிலும் அவர் உறுப்பினராக சேர்ந்து விட்டிருந்தார். நாளைக்கு ஒரு நூலகத்திற்கு என்று பஸ்ஸில் கிளம்பிச் சென்று புத்தகங்களை வாரிக் கொண்டு வந்து வாசல் வராந்தாவில் உட்கார்ந்து கிடைக்கும் பொழுதில் படித்துக் கொண்டிருப்பார். மாத முடிவு பெறுமுன் கையில் உள்ள காசு தீர்ந்து விட்டால் தமது டாக்டர் மகளிடம் அப்பா கையேந்திக் கொண்டு வந்து நிற்பார்.

'குழந்தை! ரீடர்ஸ்டைஜஸ்ட் கண்டென்ஸ்டு வால்யூம்களை அந்த நூல் நிலையம் பாதிவிலைக்குப் போடுறாங்க. இடத்தை ரொம்ப அடைக்கிறதுன்னு அதுகளை விக்கிறாங்க... இரண்டு நாமும் வாங்கிக்கலா மேன்னு ஆசைப்படறேன். ஒரு இருபது ரூபாய் கொடுத்து உதவ முடியுமா?'

'குழந்தே! அண்ணா நகரில் உள்ள என் சிநேகிதன் சம்பத் உடம்புக்கு முடியாம படுத்துக் கிடக்கானாம். கேள்விப்பட்டேன். ஒரு நடைபோய்ப் பார்க்க ஆசையா யிருக்கு. பஸ் செலவுக்குக் கூட பணம் இல்லை... மாதக் கடைசி இல்லையா... எல்லாம் தீர்ந்து போச்சு. ஒரு பத்து ரூபாய் கடனா கொடுத்து உதவ முடியுமா?'

'என்னப்பா இப்படிக் கேட்கறீங்க?... உங்களுக்குக் கொடுக்காம பின் வேறே யாருக்கு நான் தரப் போறேன்...'

'இல்லேம்மா... உனக்குன்னு ஒரு பிற்காலம் இருக்கே. இப்போ பிடிச்சு நீ சேத்து வச்சுக்க வேணாமா அதனாலே... அப்பாவின் குரல் தழுதழுக்கும்.

பிற்காலம்... அப்படி ஒன்று அவளுக்கு இருக் கிறதா? அந்தக் கேள்வி பாறாங்கல்லாக நெஞ்சை இறுக்க அவள் பதிலளிக்காது வறட்சியாக முறுவலித்து விட்டு மெல்ல அங்கிருந்து சென்று விடுவது வழக்கம்.

அவளுக்குப் பெற்றோர்களைப் பற்றி இருந்த கவலையும் அக்கறையும் அண்ணன் சந்திரனுக்கு இருக்க வில்லை.

நர்மதாவைக் கல்யாணம் செய்து கொண்ட பின்னர் அண்ணன் பெண்டாட்டி தாசனாக மாறிவிட்டிருந்தார். தான் ஒரு பெரிய நிறுவனத்தில் உயர்மட்டத்து



அலுவலராகப் பணி புரிவதைப்பற்றி உள்ளூர ரொம்பவே கர்வம். அந்தப் பதவிக்கு அடிநாளில் பாடுபட்டவர்கள் பெற்றோர்கள் என்பதை அடியோடு மறந்து போய் அலுவலகத்து அதிகார தோரணையை வீட்டிலும் காட்டினார்.

''நான் வேலைக்குப் போகிறவன் - நான் படிச்சு முடிச்ச பிறகு நீங்க பேப்பரைப் பார்க்கலாமே - அதுக்குள்ளே என்ன அவசரம்?'' மிரட்டும் குரலில் அப்பாவையே அதட்டும் மனிதர் அண்ணன்.

அந்தப் பிரபல நிறுவனத்தில் அண்ணன் கணக்கு வழக்குப் பகுதியின் தலைவராக இருந்தார். கைநிறைய சம்பளம்... வசிக்க பல வசதிகள் கொண்டதொரு வீடு - கார் - இத்யாதிகள் கம்பெனியின் உபயம். அடிக்கடி அவனைப் பார்க்க பல பெரிய மனிதர்கள் வருவது வழக்கம். வீட்டையும் தோட்டத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அம்மாவுடையது என்ற எண்ணம் அவருக்கு.

நகத்தில் அழுக்குப்படாது நாசூக்காக காரை ஓட்டிக் கொண்டு கடைத் தெருவிலிருந்து வீட்டுச் சாமான்களை வாங்கிப்போட்டு விடுவாள் நர்மதா. அதுதான் அவள் செய்யும் மாபெரும் காரியம்.

மின்விசை பில், தொலைபேசி பில்... இத்யாதி களைக் கட்டிவிட்டு, பேரன் கௌதமை அருகிலிருந்த பள்ளியில் காலையில் கொண்டுவிட்டு - மதிய உணவை டிபன்செட்டில் தூக்கிச் சென்று கொடுத்துவிட்டு - மாலை பத்திரமாக அவனை வீட்டுக்கு அழைத்து வரும் வேலை அப்பாவுடையது.

தோட்டக்காரனுடன் வளைய வந்து பூச்செடிகளின் பராமரிப்பைக் கவனித்து, தண்ணீர் ஊற்றி - எருப் போடுவதிலிருந்து அடுப்பருகில் நாளின் பெரும்பொழுது நின்று அத்தனை பேருக்கும் சமைத்துப் போடுவது அம்மாவின் வேலை. தனது பெற்றோர்களின் கொத் தடிமைத் தனத்தை எண்ணி சம்யுக்தா உள்ளூரக் குமைந்தாள். வேதனைப்பட்டாள். ஆனால் அவளுக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை.

அண்ணன் கம்பெனி காரியமாக மாதத்திற்கு இருமுறையாகிலும் - பம்பாய், கல்கத்தா, டெல்லி என்று பறந்து போய்வர நேரிட்டது. பைவ் ஸ்டார் ஓட்டலில் கணவன் அனுபவிக்கும் சலுகைகளைத் தானும் பகிர்ந்து கொள்ள ஏதாவது சாக்கு சொல்லிவிட்டு நர்மதாவும் அவனுடன் சிலமுறைகள் புறப்பட்டுக் கூடவே துணையாகப் போய்விடுவாள்.

அப்போதெல்லாம் வீட்டையும் - குழந்தையையும் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு முழுதும் வயதாகிவிட்ட அப்பாவின் தலையில்தான் விழும்.

அந்த வார ஆரம்பத்திலே அண்ணனும், அண்ணி யும் கல்கத்தாவுக்குப் போயிருந்தனர். ஐந்து வயதே நிரம்பிய கௌதம் துடிப்பும், துருதுருப்பும், துஷ்டத்தன மும் ஒருங்கே நிறைந்த சிறுவன். அப்பாவும் அம்மாவும் தன்னைவிட்டு ஊருக்குப் போய்விட்டார்கள் என்ற ஆத்திரம் வேறு. காலையில் படுக்கையினின்று எழுந்ததி லிருந்து அவன் பாட்டிக்கும் - தாத்தாவுக்கும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். குளிக்க அடம் பிடித்தான். சாப்பிட மறுத்தான். சீருடை தரித்துக்கொள்ள இடக்கு செய்தான். கெஞ்சி, கொஞ்சி அவனை அப்பா



எப்படியோ பாடுபட்டு பள்ளிக்கூடம் போகத் தயார் செய்து விட்டார்.

முன்போல வேகமாக வீட்டு வேலைகளை அம்மா வால் செய்ய முடியவில்லை. 'இருங்க... இப்பத்தானே... இட்டலி பானையை அடுப்பிலே வச்சேன். பால் கொதிக்க வேணாமா?' ... காலை காப்பி, பலகாரம் தாமதமாவதின் காரணத்தை உள்ளேயிருந்தபடி அவள் கூப்பாடு போட்டாள்.

அன்று தண்ணீர் வரும் நாள் வேறு... விடியற்காலை மூன்று மணிக்கே எழுந்திருந்த சம்யுக்தா, பெற்றோர் களுக்கு உதவியாக... தானும் கூட தண்ணீர் அடித்துக் கொடுத்திருந்தாள். அம்மாவுக்கு இரத்த அழுத்தம். பம்பு செட்டை அடித்தால் அதனால் ஏதாவது கோளாறு ஏற்படலாம் என்ற கவலை. வீட்டுக் கிணற்றில் சேறுதான் தங்கியிருந்தது. அதனால் எல்லாவற்றிற்கும் அவர்கள் கார்ப்பரேஷனின் தயவையே நம்பவேண்டியிருந்தது. எத்தனையோ நாட்கள் அவளுக்கு ஓர் அல்ப ஆசை. 'காலையில் வெகு சீக்கிரமாக நர்ஸிங் ஹோமுக்கு வந்து விட்டு அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள அறை யிலேயே தன் குளியலை முடித்துக் கொண்டால்?' மருத்துவமனையையும் தண்ணீர் பஞ்சம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. காசு கொடுத்து - தேவைப் பட்ட தண்ணீரை தலைவர் வாங்கி, கட்டிடத்தின் உச்சி யிலிருந்த பெரிய தொட்டிகளில் நிரப்பிக் கொண்டிருந் தார். இரவு பணி செய்யாதபோதும் சம்யுக்தா தினசரி அங்கேயே குளியலை முடித்துக் கொள்கிறாள் என்பதை அறிந்து கொண்டால் தலைவர் அவளுக்குத் தூக்கு தண்டனை விதிப்பதற்குப் பதில் வேலைக்கு சீட்டுக் கிழித்துவிடுவார்.

காலையில் தண்ணீருக்காகப் பம்புசெட்டை அடித்த தில் தோள்பட்டை வலித்துக் கொண்டிருந்தது... கையை உதறி விட்டுக் கொண்டு தங்கள் அறைக்குள் அவசரமாக நுழைந்தவள்... வேகமாக வார்டுக்குச் செல்லத் தயாராகி விட்டாள்.

எல்லா நோயாளிகளையும் கவனித்து விசாரித்து விட்டு, அவள் தேவைப்பட்ட மருந்துகளுக்கு நர்ஸ் நீட்டிய மெமோவில் கையெழுத்துப் போட்டுத் தந்து விட்டு... மெள்ள தனியறையிலிருந்த நோயாளிகளைக் கவனிக்கப் புறப்பட்டாள்.

அவளது வார்டை ஒட்டிய இரண்டு தனியறை நோயாளிகளின் கவனிப்பு அவளது பொறுப்பில் விடப்பட்டிருந்தது.

ஏழாம் அறையிலிருந்த கௌரியம்மாவையும், எட்டாவது எண்ணில் படுத்துக் கொண்டிருந்த சிவகாமி அம்மாளையும் அவள் நன்றாகவே கவனிக்க வேண்டும் என்பது டாக்டரின் உத்தரவு. ஏழாம் எண் கௌரிக்கு ஐம்பது வயதிற்குக் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். நரை ஓடிய கூந்தலை சாயத்தில் மறைத்துக் கொண் டிருந்தாள். உதட்டுச் சாயம் - நகப்பூச்சு இத்யாதிகள் கொண்ட நாகரிகப் பெண்மணி. கணவர் விட்டுப் போன சொத்துக்களை கண்டபடி செலவழிக்க விரும்புகிறவள் போல ஒரு சின்ன தொந்திரவுக்கு தனி அறையில் அந்த நர்ஸிங்ஹோமில் வந்து படுத்துக்கிடக்கிறவள். பிள்ளை குட்டி இல்லாததினாலோ என்னவோ பொறுமையே இல்லாதவள். நர்ஸ்களுக்கும் - ஆயாக்களுக்கும் - மருத்துவமனை பணியாட்கள் அனைவருக்கும் டாக்டர் சம்யுக்தாவுக்கும் சதா தொந்திரவு கொடுப்பவள். ஏழாம்



அறை இண்டர்காம் ஒலித்தால் நர்ஸ்கள் தோளை அசட்டையாகக் குலுக்கிக்கொண்டு 'ஆரம்பிச்சுட்டாங்க கௌரியம்மா... வார்டுலே எனக்கு வேறே நோயாளிகளே கிடையாது - இவங்க ஒருத்தர்தான்னு நினைப்பு'

'பணக்கார நோயாளியில்லையா...'

'அட இவங்க பணம் இவங்களோட - சாகும்போது யாரும் எதையும் எடுத்துக்கிட்டுப் போகமுடியாது. பணக்கார நோயாளியும் பிச்சைக்கார நோயாளியும் முடிவில் - ஒரு பிடி சாம்பல்தானே... போ! போ! மறுபடியும் அந்தக் கௌரியம்மா இண்டர்காமில் அலறுது. ஓடு, போய்க் கவனி' - என்று வார்டின் முக்கிய நர்ஸ் - தன்கீழ் உள்ள பணிப்பெண்ணை ஏவுவாள். கௌரிக்கு அப்படி உயிர் போய்விடும் எந்தவிதமான அபாயமும் நேர்ந்திருக்காது. முதல் நாள் போட்ட படுக்கை விரிப்பின் ஓரத்தில் கொஞ்சம் அழுக்குத் தெரிகிறதாம்... மறுபடி அவளது படுக்கைக்கு சுத்தமான விரிப்புத் தேவையாம்.

இதற்காக - மூன்று தரம் இண்டர்காமில் வார்டையே கலக்கி விட்டிருப்பாள் அவள்.

இரத்தப் பரிசோதனைக்கு டாக்டர் சம்யுக்தா அவளது விரல் நுனியில் மெல்ல ஊசியால் குத்தி விட்டால் போதும்; தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டது போலக் கூச்சலிடுவாள். மருந்துகளை சாப்பிட முகம் சுளிப்பாள். பச்சைக் குழந்தை போல அடம் செய்வாள். ஊசி மருந்துடன் டாக்டர் வந்து அணுகினால் போதும், ஐயோ வலிக்கிறதே என்று குத்துவதற்கு முன் ஆர்ப்பாட்டம் செய்வாள்.

இத்தனைக்கும் அவளுக்கு அப்படி பெரிய வியாதி ஏதும் இல்லை. தன் முதுகு வலியின் காரணத்தைக் கண்டு பிடிப்பு செய்யத்தான் அந்தத் தனியார் மருத்துவமனையில் ஏ.சி. அறையில் பணத்தை வாரிக் கொட்டிக்கொண்டு சொகுசாகப் படுத்துக் கிடந்தாள்.

அவளைக் கண்டாலே அங்கிருந்த நர்ஸ்களுக்கோ - மற்ற பணிப்பெண்களுக்கோ - வைத்தியர்களுக்கோ பிடிக்கவே பிடிக்காது. அனாவசியமாக அலட்டிக் கொள்ளும் நோயாளிகளை டாக்டர்கள் விரும்புவதில்லை.

கௌரியின் விஷயமே வேறு - அவளது மறைந்து போன கணவர் - டாக்டர் பரமசிவத்திற்கு நண்பர். மேலும் அவள் தனியறையில் மாசக் கணக்கில் தங்கி சிகிச்சை பெறத் தகுதியுடைய பெரும் பணக்காரி - இரத்தப் பரிசோதனையிலிருந்து - எக்ஸ்ரே, இ.சி.ஜி. இருதய நோய் நிபுணர். நரம்புகள் கவனிப்பு - மனவியல் நிபுணர் என்று நாளைக்கு ஒரு ஸ்பெஷலிஸ்ட்டுகளின் பார்வையில் அவள் இருந்தாள். வந்து மூன்று வாரங்கள் ஆகியும் இன்னமும் முதுகு வலி போகவில்லை என்று ஓலமிட்டாள். எப்பொழுதும் எரிச்சலும்... கத்தலுமாக ஆர்ப்பாட்டம் செய்யும் நோயாளியாக... பிரசித்தி பெற்று விட்டிருந்தாள்.

எட்டாம் நம்பர் சிவகாமியம்மாள் அதற்கு நேர் எதிராக சாந்தமே உருவானவளாக இருந்தாள். இரத்த அழுத்தம் அதிகமானதினால் லேசான மாரடைப்பு வந்து தீவிர கவனிப்புப் பகுதியிலிருந்து... அந்தத் தனியறைக் குள் அனுமதிக்கப்பட்டவள். அறுபது வயதைத் தாண்டி விட்டவள். தலையில் பட்டை பட்டையாக நரை தெரிந்தது. முகத்திலே முதுமையின் திரைகள்... ஆனால்



உதட்டில் எப்போதும் மெல்லிய புன்னகை... கண்களில் கனிவு... மெல்லிய குரலில்தான் பேசுவாள். 'வெந்நீர் பையிலிருந்த மூடி கழன்று படுக்கையில் தண்ணீர் ஓடி படுக்கையை நனைச்சுவிட்டதே. இண்டர்காமில் எங்களைக் கூப்பிட்டிருந்தால் வந்து மாற்றி விட்டிருப் போமே. இராத்திரி முழுதும் காலடியில் படுக்கை சில்லுனு ஆகி உங்களை ரொம்பத் தொந்திரவு செய்திருக்குமே?'

'உங்களுக்கு வார்டில் எத்தனையோ வேலை. இதெல்லாம் ஒரு தொந்திரவா?' என்று மெலிதாக சிரிக்கும் அமைதியான பெண்மணி அவள். அங்கிருந்த எல்லோருக்கும் அவளை ரொம்பவே பிடித்திருந்தது.

டாக்டர் சம்யுக்தாவுக்கும் அவளை மிகவும் பிடித்து விட்டிருந்தது. நேரங்கிடைத்த போதெல்லாம் தானே போய்... அவள் அறையில் கிடந்த பார்வையாளர் நாற்காலியில் அமர்ந்துகொண்டு அவளுடன் பேசுவது வழக்கம்.

சிவகாமி அம்மாளின் நோய் தனது அபாய கட்டத்தைத் தாண்டி விட்டிருந்தது. அவள் மெல்ல எழுந்து நடமாடவும்... மறுபரிசீலனைக்கு வருமளவு கண்காணிப்பில் இருக்கவுமேதான் அந்த மருத்துவ மனையில் இடமில்லாத காரணத்தால் தனியறையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். அந்தக் கவனிப்புக்கு அவள் தரப்போகும் தொகை அவளது பொருளாதார நிலைக்குக் கொஞ்சம் அதிகம்தான்.

ஆனால் அவள் பணம் அவளது சுகத்திற்கு இல்லாது பின் வேறு யாருக்கு? அவள் திருமணமாகாதவள். கூட

துணையாகத் தனியாக அவர் விட்டுப்போன அந்தப் பெரிய பழையகால நுங்கம்பாக்கத்துப் பங்களாவில் தனியே வசிப்பவள்.

'தனியாக இருக்க உங்களுக்குப் பயமாக இல்லையா அம்மா?' அவளைக் கவனிக்க வந்த நர்ஸ் வேடிக்கை யாகக் கேட்டபோது...

'பயமா?... அப்படி ஒரு பழம் இருக்கிறதா?'... என்று சிரித்தாள், 'சரிதான். நீங்கள் நிறைய இங்கிலீஷ் படிச்சவங்க... மேலை நாட்டு வீரர் ஒருவர் தன் சிறுவயதிலேயே அப்படித்தான் தன் பாட்டியிடம் கேட்ட தாகக் கதை ஒன்று வாசித்திருக்கிறேன்.' நர்ஸ் விழுந்து விழுந்து சிரித்தாள்.

ஏழாம் எண் கௌரியின் தொண தொணப்பிலிருந்து மெல்ல விடுவித்துக்கொண்டு, மிகவும் உற்சாகத்துடன் எட்டாவது எண் அறைக் கதவை மெல்ல தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள் டாக்டர் சம்யுக்தா...

''யார் அது! டாக்டர் சம்யுக்தாவா...'' முகத்திலே மகிழ்ச்சி பொங்கக் கேட்டபடி தலையணைக் குவியலில் சாய்ந்துகொண்டிருந்த சிவகாமி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''வெள்ளை வெளேரென்ற இந்தக் கோட்டில்... நீல வாயில் புடவை, புத்தம் புது மலர் கீழே கவிழ்ந்து விட்ட குடையாகப் பரக்க... நீ உள்ளே வரும்போது... எனக்குப் பார்க்க எத்தனை சந்தோஷமாக இருக்கும் தெரியுமா டாக்டர்?''... நீங்கள் என்றதிலிருந்து - சம்யுக்தா கேட்டுக் கொண்டதின் பேரில் நீ என்று ஒருமையில் அழைக்கு மளவு சிவகாமி நேசத்தில் நெருங்கி விட்டிருந்தாள்.



'இன்னிக்கு ஒண்ணு உன்னை கேட்கப் போறேன்... பதில் சொல்லணும்... சொல்லுவியா?' சிரித்தபடி காலை மெல்லப் படுக்கை மீது தொங்கவிட்டுக் கொண்டு முறு வலித்தாள்.

''நான் கேட்பதைக் கேட்டு முடித்துவிடறேன் - பிறகு நீங்க கேட்கலாம். இராத்திரி நல்லா தூங்கினீர்களா, உடம்பில் ஏதாவது வலிகிலி இருக்கா? பெரிய டாக்டர் சொன்னபடி... தினமும் எழுந்து கொஞ்சம் வராந்தாவிலே நடக்கறீங்களா... நேத்து நடக்கலை போலிருக்கே? இந்த ஆஸ்பத்திரி உணவைப்பத்தி உங்களுக்கு ஏதாவது குறை உண்டா.''

''நல்லா தூங்கினேன் - வலி ஏதும் கிடையாது. இப்போ வீட்டுக்கு அனுப்பிச்சாலும்... நானே வீட்டு வேலைகள் எல்லாத்தையும் சமாளிச்சுடுவேன். அப்படி உடம்பில் தெம்பு கூடியிருக்கு. தினமும் இருதய நிபுணர் சொன்னபடி எழுந்து வராந்தாவில் இருபது நிமிடம் மெள்ள நடக்கிறேனே. நேத்துகூட நடந்தேன். அந்த அறை நோயாளி கௌரியம்மாளைப் பார்க்க அவங்க தங்கச்சி மகன் வந்தபோது நடந்து கொண்டிருந்தேன். என்னைப் பார்த்து அவன் எப்படியிருக்கீங்க, இப்போ உடல் நலம் தேவலையான்னு கூட கனிவோட விசாரிச்சானே.'

டாக்டர் சம்யுக்தாவின் முகம் லேசாக சிவப்பதைப் பார்த்து அனுபவித்த வண்ணம் சிவகாமியம்மாள் பேசினாள்.

''சரி என்னை விசாரிச்சு முடிச்சுட்டே. உன்கிட்ட ஒரு கேள்வி கேட்க நான் ஆசைப்படறேன்னு சொன்னேனே - அதை இப்போ கேட்கலாமா?''

''ஓ! தாராளமாகக் கேட்கலாம்.''

''உனக்கு சம்யுக்தான்னு அந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற பெயரை உன் அப்பா வச்சிருக்கார். அவர் சரித்திர ஆசிரியராக ஒரு கல்லூரியில் வேலை பார்த்தவர்னு சொன்னே... நான்கூட கணக்கு ஆசிரியராக வேலை பார்த்து ஓய்வடைந்தவள்தான். அதனால்தான் மனம் ஒண்ணும் ஒண்ணும் இரண்டுன்னு சதா கணக்குப் போட்டுக் கொண்டே இருக்கு...''

''அப்படியா?'' சிரித்தாள் சம்யுக்தா.

''ஒண்ணும் - ஒண்ணும் மூணுன்னு நான் சொல்றேன். அதுக்கு நீங்க என்ன பதில் சொல்லப் போறீங்க?''

''அது கல்யாணத்துக்குப் பிறகு...''

சிவகாமி அம்மாள் ரொம்ப நாசூக்காக... நகைச்சுவை மிளிரப் பேசத் தெரிந்தவள்.

களுக்கென்று சிரித்தாள் சம்யுக்தா... அவளது கன்னத்தில் விழுந்த அழகிய குழியை ஆர்வத்துடன் பார்த்த சிவகாமியின் நெஞ்சு கரைந்து போனது. எத்தனை அழகான பெண்... இளமையின் பிடியில் இன்னமும் இருக்கிறாள். புத்திசாலியாகவும் இருக்கிறாள்... இவளை... ''ஆமாம் அந்த சரித்திர பிரசித்தி பெற்ற சம்யுக்தாவை ஒரு பிரிதிவிராஜ் காதல் வசப்பட்டு தூக்கிக் கொண்டு போனானே... அதுபோல... டாக்டர் சம்யுக்தாவைக் கொத்திக்கொண்டு போக இன்னும் யாரும் வரலையா?''

''நான் கல்யாண வயதைத் தாண்டி விட்டவள்... எனக்கு இப்போது வயது என்ன தெரியுமா?.. இருபத்தேழு.''



''எம்.பி.பி.எஸ். படித்து ஹவுஸ் சர்ஜன் வேலையை முடித்து - பின்னர் ஏதாவது ஒரு பகுதியில் மேற்படிப்பு படித்து முடித்துவிட்டு, இங்கு உள்ளது போன்ற தனியார் மருத்துவமனையில் வந்து வேலைக்கமர்ந்து இரண்டு ஆண்டுகளைக் கடத்தி விட்டால், வயதும் மேலே ஏறிக் கொண்டுதான் போகும். இந்தக் காலத்தில் இது ஒரு வயதல்ல... ஞாயிற்றுக்கிழமை வரும் பிரபல நாளேடு ஒன்றை எடுத்துப்பார். மணமகள் தேவை என்கிற பகுதியில் தம்மைப் பற்றி தெரிவித்துக் கொள்ளும் மணமகன்களுக்கெல்லாம் குறைந்தது முப்பது முப்பத்தைந்து வயதாவது ஆகிவிட்டிருக்கின்றது.''

''கல்வியும் - மற்ற தகுதிகளும் ஏற்பட்டு கல்யாணம் செய்து கொள்ள நினைக்கும் போது வயது மளமளன்னு கூடி வருகிறது. பிருதிவிராஜன் ஒருவன் தயாராக இருக்கிறான் - சம்யுக்தாவின் சம்மதந்தான் தேவை'' சிவகாமி மர்மமாகச் சிரித்தாள். ''யாராம் அது?'' சம்யுக்தா சிரித்தபடி கேட்டாள்.

''அடுத்த அறைக்கு தன் பெரியம்மாவைப் பார்க்க வருகிறானே தினமும் கரும் பச்சை பியட்டிலே... ஏதோ ஒரு பிரபல நிறுவனத்திலே தலைமை என்ஜினியராகப் பணி புரிகிறானாமே... அந்த வாலிபன். அவனுக்கு வயது முப்பதுக்கு கூடுதலாக இருக்கும் - முகம் சொல்கிறது - ஆனால் களையான முகம்... நல்ல கச்சிதமான தோற்றம். பெயர் கூட சொன்னானே... ஆமாம்... ரங்கராஜன்... உண்மையில் அவன் உனக்கேத்த ராஜன்தான். ஒவ்வொரு தடவையும் அவன் வரும்போது எதேச்சையா நீ வராந்தாவிலே நடந்து போகும் போது உன்னை அணுகி, தன் பெரியம்மாவைப்பத்தி விசாரிக்கும்போது நான் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே? அவன்

பெரியம்மாவையா விசாரிக்க அப்படி அவசரமா காரை நிறுத்தி விட்டு ஓடி வருகிறான். இந்த சம்யுக்தா அம்மாவின் அழகு முகத்தைப் பார்த்து... அவளது உணர்வுகளை தானே விசாரித்துக் கொள்ளத்தான் ஓடி வருகிறான். சம்யுக்தா அவன் உனக்கேத்த பிருதிவி ராஜன்... என்ன சொல்றே?...''

''ஆண்ட்டி! நீங்க ரொம்ப பொல்லாதவங்க''... தோளைத் தட்டிவிட்டு காதும் மூக்கும் சிவக்க - நெஞ்சம் இன்பத்தில் பூரிக்க அவள் அந்த அறையைவிட்டு வேகமாக வெளியே வந்தாள்.

''ஹலோ!''... என்ற குரல் அவளுக்கு பெருத்த அதிர்ச்சியைத் தந்தது. கட்டாயம் அவனுக்கு ஆயுசு நூறு தான். சற்று முன்தான் அவனைப்பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

''அலுவலகத்திற்குப் போகும் வழியில் இதை என் சித்தி இவங்களுக்குக் கொடுக்கச் சொன்னாங்க... எடுத்திட்டு வரேன். பெரியம்மாவின் அறைக்குள் புகுந்தால் லேசில் வெளியே வரமுடியாது. நான் என் அலுவலகத்திற்கும், தொழிற்பேட்டைக்கும் போக வேண்டிய வேலை இருக்கு... அதனாலே தயவு செய்து இந்த டிபன் செட்டை அவங்க அறைக்கு அனுப்பிடு நீங்களா? ஏழாம் எண் கௌரியம்மாளின் தங்கை மகன் நான் - பெயர் ரங்கராஜன். ஏற்கெனவே சில தடவைகள் நாம் இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறோம். அறிமுகம் அதிகமில்லை, நீங்கள் தானே டாக்டர் சம்யுக்தா...?''

''ரொம்ப அழகான பெயர்.'' டிபன் செட்டை வாங்க நீட்டிய அவள் விரல்மீது எதேச்சையாகவோ, வேண்டுமென்றோ... அவனது விரல் ஒன்று பட்டது.



கோபத்திற்குப் பதில் அவள் உடல் இன்பத்தில் சிலிர்த்தது. 'சம்யுக்தா அவன் உனக்கேற்ற பிருதிவிராஜன்' - சிவகாமி அம்மாள் சிரிப்பது இன்னமும் காதுகளில் கேட்டது.

''அப்படியே செய்கிறேன்... ஆமாம் என் பெயர் தான் சம்யுக்தா' என்றபடி அவள் சட்டென்று திரும்பி நடந்தாள். மறுபடியும் ஒரு முறை அவனைத் திரும்பிப் பார்க்க வேண்டும் போன்ற ஆவலில் மனம் துடித்தது.

ஆமாம் அவளுக்கு இப்போது என்ன வந்து விட்டது? இத்தனை காலமும் இல்லாத புதிய உணர்வு - புயல் போல நெஞ்சை ஆட்டிப்படைக்கிறதே... முன்பின் தெரியாத ரங்கராஜனைப் பார்த்த நாளிலிருந்து ஒருவித பரவச உணர்வு...சே! அப்படிப்பட்டதற் கெல்லாம் மனதில் அவள் இடம் கொடுக்கக் கூடாதே... ஊகும்... ரொம்ப வைராக்கியமாக இருக்க வேண்டியவள்.

யார் சொன்னது? அவளும் அண்ணி நர்மதாவைப் போல் கணவனுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டிய இளமை வயதுதானே அது?

நர்ஸ் ஒருத்தியிடம் அவள் அந்த ஸ்டீல் டிபன் பாத்திரத்தைக் கொடுத்து ஏழாம் எண் அறைக்குள் அனுப்பி வைத்தாள். பின்னர் மெள்ள வரவேற்பறைக்குள் வந்து கண்ணாடிக் கதவருகே நின்றபடி கார்கள் நிறுத்தப்பட்டிருக்கும் பகுதியை நோக்கிப் பார்வையைத் திருப்பினாள். தன்னுடைய காரைத் திறக்க முயன்று கொண்டிருப்பவன் போல அவனும் அவள் பக்கமே பார்த்துக்கொண்டு நிற்பதை உணர்ந்து திடுக்கிட்டுப் போனாள்.

உடம்பெல்லாம் - ஒரு புதிய உணர்வில்... கிடுகிடு வென்று நடுங்குவதை அறிந்தாள். இன்னமும் கொஞ்சம் பார்த்துக்கொண்டு நிற்க வேண்டுமென்ற இனம் விளங்காத ஆவலில் நெஞ்சு துடிப்பதை அறிந்து அவளுக்கு வெட்கமாக இருந்தது. இப்படி அவள் இதுவரை யாரைப்பற்றியும் அக்கறை கொண்ட தில்லையே... இதென்ன... இப்படி ஓர் ஆசை?

## 2

காலை முழுவதும் மேக மூட்டத்துடன் காணப் பட்ட வானத்திற்கு மாலைப்பொழுது, அலுவலகம் முடிவடையும் நேரத்திலே உற்சாகம் பிய்த்துக்கொண்டு புறப்பட்டு விட்டது.

சோ! என்ற கோஷத்துடன் மழை, இடை இடையே மின்னலும் இடியுமாகக் கொட்டத் தொடங்கியது.

''இப்படி நாலு மழை பேஞ்சா தண்ணிக் கஷ்டம் ஒழிஞ்சுபோகும்'' தலையில் முக்காடு போட்டுக் கொண்டு மழைக்காகக் கட்டடத்தின் ஓரத்திலே ஒதுங்கிய ஒரு பெண்மணி சொன்னதும் சம்யுக்தாவுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

மழை வேண்டும் - கட்டாயம் வேண்டும். ஆனால் அலுவலக ஊழியர்கள் வீட்டுக்குத் திரும்பும் நேரத்திலா இப்படிக் கொட்டித் தொலைக்க வேண்டும்... மின்னலும் இடியுமாக வேறு பயமுறுத்த வேண்டுமா... அவளுக்கு என்றைக்குமே இடியோசையைக் கேட்கப் பிடிக்காது - பயம். இரவு வேளையில் பலத்த இடியுடன் மழை



கொட்டத் தொடங்கினால் போர்வையைக் காதுவரை வழியவிட்டுக் கொண்டு கண்களை இறுக்கி மூடியபடி தூங்க ஆரம்பித்து விடுவாள். ''மானத்துக்கு அடியிலே வாழ்றோம் - மின்னலுக்கும் இடிக்கும் பயப்படுவது சாத்தியப்படுமா? நம்ப வாழ்க்கையிலே விழுந்திருக்கும் அந்த இடிக்கு மேலே இனி மானத்திலிருந்து புதுசா என்ன வந்துடப் போவுது?''

அம்மா அவளை அடிக்கடி செல்லமாகக் கோபிப்பது வழக்கம். ''டாக்டருக்குப் படிச்சிருக்கே... விஞ்ஞான அறிவு இருக்கு. இடியோசை கேட்டு இப்படிப் பச்சைக் குழந்தையாய் பயப்பட்டா'' அப்பாவும் கூடச் சேர்ந்து கொண்டு அதட்டுவார்.

டாக்டர் பட்டத்திற்கும் சில பயங்களுக்கும் சம்பந்தம் ஏதுமில்லை என்பதை அவள் பட்டென்று சொல்லத்தான் விரும்புவாள்.

இத்தனை காலம் மௌனமாக - பொறுமையாக அவள் தன் பெற்றோர்களிடம் அனுசரணையுடன் நடந்து கொண்டவள்.

கடந்துபோன அந்தக் கசப்பான சங்கதியை நினைவு மூட்டி அவர்களை நிலைகுலையச் செய்வதில் யாருக்கு என்ன பயன்?

குடிநீர் வழங்கும் ஏரியிலும், தேக்கத்திலும் நீர் நிரம்பியதோ இல்லையோ அந்த மழையால் தெருவின் இருபுறமும் ஆறாக நீர் ஓடியது. மழை இன்னமும் அதே ரீதியில் கொட்டிக் கொண்டிருந்தது. இன்னும் சில நிமிஷங்களில் அவள் தினமும் மாலையில் பிடிக்கும் அந்த பஸ் புறப்பட்டுப் போய்விடும்... மழை இருட்டில்... கசகசவென்று சேறும் சகதியுமாகிவிட்ட

தெருவில் தன்னந்தனியே அவள் நடந்து சென்று நிலையத்தில் அடுத்த பஸ்ஸிற்காகக் காத்திருக்க வேண்டும். எண்ணிக் கவலையுடன் அவள் தன் தோள் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். காலையில் வரும்போது அழுக்காகிவிட்ட புடவையையும் மற்ற ஆடைகளையும் ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு அடைத்து இடது கையில் பிடித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுதுதான் நினைப்பு வந்தது. திடுக்கிட்டு தோள் பைக்குள்ளிருந்த மணிபர்சை மெல்ல எடுத்துத் திறந்தாள்.

இப்படி ஒரு முட்டாள் காரியத்தை அவள் செய்யலாமா? காலையில் கிளம்பும் அவசரத்தில்... தினமும் தயாராக எடுத்து வைத்துக்கொள்ளும் அதிகப்படி சில்லரையை அவள் அன்று எடுத்துவர மறந்து விட்டாளே. பஸ் பயணச் சீட்டு வாங்க பத்து பைசா குறைகிறதே... நர்ஸ் அல்லது ரிஸப்ஷனிஸ்ட்டிடம் கேட்டு கடனாக ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டு நாளை திருப்பி விட்டால்...

சே! அவர்கள் அவளைப்பற்றி என்ன நினைத்துக் கொள்வார்கள்? மறுபடி உள்ளே சென்று எட்டாம் எண் நோயாளி சிவகாமி அம்மாளைக் கேட்டால்?

அதுதான் சரி... என்றபடி அவள் திரும்பவும் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைய முற்பட்டபோது மோதிக்கொண்டு விடுகிறவன் போல ரங்கராஜன் வெளிப்பட்டான்.

''மன்னிக்கவும்... நான் பார்க்கலை...'' என்று அவன் மெல்ல சிரித்தபோது வரிசையாக மின்னலடித்த அந்தப் பற்கள் அவன் முகத்திற்கு களை கட்டியதைக் கவனித்தாள்.



''வேலை முடிந்துவிட்டது இல்லையா? வீட்டுக்குத் தானே போறீங்க. வெளியே நல்ல மழை, உங்களுக்கு மறுப்பு இல்லைனா நான் என் காரில் கொண்டு விடுகிறேன். எங்க பெரியம்மாவைப் பத்திரமா பார்த்துக்கற டாக்டர் நீங்க - இந்தச் சின்ன உதவியை உங்களுக்கு செய்யக் கூடாதா நான்?'' சிரித்தபடி அவன் கேட்டான்.

பார்வையாளர்கள் வரும் நேரம். மறுபரிசீலனைக்கு வந்த சில நோயாளிகள் உதவி டாக்டர்களின் பார்வைக் காக தங்களின் பெயர் கூப்பிடப்படும்வரை வரவேற் பறையில் உட்கார்ந்திருந்தனர்.

அவனை மேலே பேச அனுமதித்தால்... அவர்கள் எல்லோரும் திரும்பிப் பார்ப்பார்கள்... யார் அவர்கள் என்று ஆராயப் புகுவார்கள் - பின்னர் வீண் கதைகள் பரவத் தொடங்கும் என்று சட்டென்று முடிவெடுத்தாள் சம்யுக்தா...

''உங்களுக்கு சிரமம் இல்லையென்றால்... என்னை உங்கள் காரில் ஏற்றிக் கொள்ளலாமே...'' அவளும் சிரித்தாள்.

ஓட்டமாக மழைக்குள் புகுந்து கார் நிறுத்தத்தி லிருந்த தனது காரைத் திறந்து முன் இருக்கையின் பக்கமிருந்த கதவை அவளுக்காகத் திறந்து விட்டான்.

தலை மீது புடவைத் தலைப்பைப் போட்டுக் கொண்டு... சம்யுக்தா விரைவாக அவன் காட்டிய இருக்கையில் அவன் பக்கத்தில் ஏறி உட்கார்ந்தாள்.

''உங்களை நான் கூப்பிட்டபோது எனக்குள்ளே ஒரு சிறு சந்தேகம். முன்பின் அதிகப் பழக்கமில்லாத என்னுடன் நீங்கள் காரில் வர மறுக்கலாம். மழையில்...

காரில் ஏறிப் போவது என்பது உங்களுக்கு அந்தக் கதையை ஞாபகப்படுத்தலாம்.

''சில நேரங்களில் சில மனிதர்கள், என்பதில் வரும் கதாநாயகிக்கு ஏற்பட்ட ஆபத்து நமக்கு ஏற்படுமோ என்று யோசிக்கலாம் இல்லையா?'' மறுபடியும் அந்த வரிசைப் பற்கள் பளிச்சிட முகத்தில் களை மின்னலடிக்க அவன் சிரித்தான். காரைக் கிளப்பினான்.

''நான் பனங்காட்டு நரி. சில நேரங்களில் சிலமனிதர்கள் நடந்து கொள்ளும் விதத்தைக் கண்டு அஞ்சமாட்டேன். படார் என்று கன்னத்தில் ஓங்கி அறைந்து விடுவேன். என்னைக் காத்துக் கொள்ள எனக்குத் தெரியும்.'' அவள் பதிலுக்குத் காத்திராமல் சிரித்தாள்... ஆனாலும் மனம் பக் பக் கென்று ஒருவித இன்பமும் திகிலும் கலந்த கலவை உணர்வில் அடித்துக்கொண்டது.

''கராத்தே - குங்ஃபூ எல்லாம் கத்துக்கொண்டிருக் கிறீர்களா?''...

''அதெல்லாம் தெரியாமலேயே ஒரு பெண் தன்னைத் தானே காத்துக் கொள்ள முடியாதா?'' கேட்டபடி அவள் மெள்ளச் சிரித்தாள்.

காரை சாலைக்குள் செலுத்திக் கொண்டே அவன் கடைக்கண்ணால் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''நீங்கள் சிரிக்கும்போது கன்னத்திலே விழும் குழி உங்கள் முகத்திற்கு ரொம்ப அழகாக இருக்கு''... புகழ்ந்தான்.

''நீங்கள் சிரிக்கும்போது உங்கள் பல் வரிசை முகத்தின் களையைக் கூட்டி விடுகிறது'' சொல்ல நா துடித்தது அவளுக்கு.



ஊகும்... அதற்கு மேல்... அவளைப் பறறிய அபிப்பிராயம் தொடரத் துவங்கும்... பின்னர் அது எங்கே போய் நிற்குமோ?

மௌனமாக அவள் முறுவலித்து விட்டு இன்னமும் பெய்து கொண்டிருந்த மழையை வேடிக்கை பார்க்க லானாள்.

''உங்கள் வீட்டில் தண்ணீர் கஷ்டம் எப்படி?'' அவன் கேள்வி வேறு திசைக்குச் சென்றது.

''எங்கள் வீட்டிலும் ஏன் எல்லார் வீட்டிலும் தண்ணீர் கஷ்டம் இருக்கத்தான் இருக்கு. உங்கள் வீட்டில் இல்லையா?''

''அவ்வளவு இல்லை, ஆகாச கங்கை என்று, எங்கள் பங்களாவில் உள்ள பழைய கிணற்றை வீட்டு ஆட்படைகள் ரொம்ப அன்புடன் அழைக்கிறாங்க. அதில் இன்னமும் ஊற்று வற்றவில்லை. குடிக்கக்கூட அந்தத் தண்ணீர் ரொம்பவும் நல்லாவேயிருக்கு. அதனால் நாங்க வீட்டு சகல உபயோகத்திற்கும் அதையே நம்பிக் கொண்டிருக்கிறோம். இப்ப சத்தியாக் கவலை இல்லை.''

''நாங்கள் கார்ப்பரேஷன் தயவையும் - தெருவில் போட்டிருக்கும் போர் பம்பையும் நம்புகிறோம். கிணற்றில் சேறுதான் மிஞ்சியிருக்கு. ஒரு சமயம் மழையால் ஏதாவது நிலைமை மாறாதான்னு நம்பிக்கை.''

பலத்த குரலில் அவன் சிரித்தான். ''இதைப் போல பத்துமடங்கு மழை பத்துநாள் ஓயாது அடிச்சாதான் நிலைமை ஒருவாறு சீர்திருந்தும். இயற்கை சதி செய்தால் யார் என்ன செய்ய முடியும்? மனிதர்கள் சதி செய்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்க இயலும்.''

''ஆமாம் நீங்க எங்கே இருக்கிறீங்கன்னு நான் கேட்காமலேயே வந்து காரில் ஏறிக்கொண்டு விட்டேன்... என் பொருட்டு நீங்க அதிக தூரம் வீணாகக் காரை ஓட்ட வேண்டியிருந்தால்...''

''நாங்கள் நுங்கம்பாக்க வாசிகள்... நீங்க மாம்பலந் தானே?''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''ஒருத்தரைப்பத்தி தெரிஞ்சு வச்சுக்கணும்னு முயற்சி பண்ணினா எல்லாம் தெரிஞ்சு போகுது''...

அவளைப் பற்றி அவன் ஆராய்ந்து தெரிந்து கொள்ள முயன்றிருக்கிறான்.

அப்படியென்றால்?

காது சூடாகி - முகம் முழுவதும்... நெருப்பாக எரியும் ஓர் உணர்வில் நெஞ்சு வேகமாகத் துடிக்க அவள் திணறிப் போனாள்.

''சுகந்தநாதன் தெரு இது. இப்படியே... இந்த வீட்டுக் கருகில் நிறுத்தினால் போதும்'' என்றாள் அவள்.

மழை நின்று லேசாகத் தூறிக் கொண்டிருந்தது. நல்லவேளை அண்ணி வழக்கம் போல வாயில் வராந்தாவில் உட்கார்ந்துகொண்டு பத்திரிகை படித்துக் கொண்டிருக்கவில்லை. மழைக்காக எல்லோருமே வீட்டுக்குள் அடங்கி விட்டிருந்தனர். சாரலுக்குப் பயந்து ஜன்னல்கள் கூட மூடப்பட்டிருந்தன.

''உங்க அண்ணா சந்திரன்... திவாகர் அண்ட் ஸன்ஸின் பெரிய ஆடிட்டர் இல்லையா?''



''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எங்கள் கம்பெனி ஆடிட்டர் சிவராமனுக்கு ரொம்ப நெருங்கிய நண்பர் அவர். சினேகிதனைப் பார்க்க சில சமயம் எங்கள் அலுவலகத்திற்கு வருவதுண்டு. அப்பொழுது பார்த்திருக்கிறேன்.''

''அப்படியா?'' கேட்டபடி அவள் காரிலிருந்து இறங்கினாள். ''மத்தவங்களைப் பத்தியே துப்பு துலக்கிக் கொண்டு இருப்பது இவன் வேலை போலிருக்குன்னு தானே நினைக்கிறீங்க. இதெல்லாம் எதேச்சையாக, என் காதில் பட்டவை. சில நானே கண்டுபிடிப்பு செய்தவை. ஆனால் நான் எங்களது ஜீவன்தாஸ் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியில் முக்கியமானதொரு என்ஜினியராக வேலை பார்க்கிறேன். வேலையில் உங்களைப் போல கண்ணும் கருத்துமாக இருப்பவன்தான்'' சிரித்தபடி கார் கதவை இழுத்து மூடிக்கொண்டு அவளைக் கண்களால் கனிவுடன் பார்த்து, விடை பெற்றுக்கொண்டு நகர்ந்து விட்டான்.

செய்யக் கூடாத ஒரு தவறைச் செய்து விட்டது போன்ற குற்ற உணர்வுடன் அவள் மெல்ல அழைப்பு மணியை அழுத்தினாள். வழக்கம்போல் அம்மாதான் அடுப்பு வேலையைவிட்டு வந்து கதவைத் திறந்தாள்.

''மழை கொட்டரதே. இந்தப் பெண் எப்படி வீடு வந்து சேரப் போகிறாளோன்னு கவலையா இருந்தது. நல்ல வேளை நனையாம கொள்ளாம வீடு வந்துட்டே.''

'இல்லேம்மா... மனது... ஒரு இளைஞனின் காதல் மழையில் நனைந்து - திணறிக் கொண்டிருக்கு' சொல்ல முடியாத வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள் சம்யுக்தா.

உள்ளே சாப்பாட்டறையில் அப்பொழுதுதான் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்த அண்ணன் காலிலிருந்த ஷூவையும் மேஜோட்டையும் மட்டும் கழற்றி விட்டு, அலுவலக உடையிலேயே ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

அண்ணி நர்மதா... அந்த மழையில்கூட எங்கேயோ வெளியே போகத் தயாராகிவிட்டவள் போல முகத்திலே மிதமிஞ்சிய ஒப்பனையுடன் அண்ணனுக்குத் தன் கையால் காப்பியும் டிபனும் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

''மெது பக்கோடாவா? நீயா செய்தே? அம்மா செய்தாங்களா... நீ கொண்டு வந்து வச்சதுமே அதுக்குத் தனி ருசி கூடிவிட்டது.'' கொஞ்சிக் கொண்டே அண்ணன் அண்ணியின் கன்னத்தைக் கிள்ளுவதைக் கடைக்கண்ணால் பார்த்து விட்டாள் சம்யுக்தா.

சுரீர் என்று நெஞ்சில் ஒரு வேதனை. இல்லை இல்லை; ஒருவிதப் பொறாமை உணர்வு என்றே சொல்ல வேண்டும்.

அண்ணனுக்கு வாழ்க்கை அளித்த உரிமை... இன்பமான திருமண வாழ்வில் திளைக்க அவருக்கு அளிக்கப் பட்ட அந்தச் சலுகை - அவருடன் கூடப் பிறந்த தங்கையான அவளுக்கு ஒதுக்கப்படாததேன்? ஆணுக்கு ஒரு நீதி - பெண்ணுக்கு ஒரு நீதி என்ற பார்வை இன்னமும் சமூகத்தினின்று அகலவில்லையே...

ரோகிணியை விண்வெளிக்கு அனுப்பிவிட்டு - விஞ்ஞானம் முன்னேறிக் கொண்டிருக்கலாம். விஞ்ஞான முன்னேற்றத்தின் அறிகுறியான அந்த ராக்கெட்டிற்கும் பெண்ணின் பெயர். .



நடைபாதையிலே அவர்கள் வசித்த தெருவில் உருவாகி இப்போது அமர்க்களப்பட்டுக் கொண்டு பக்தர்களைக் க்யூவில் நிற்க வைத்துக் கொண்டிருக்கும் அந்தத் தெய்வத்திற்கும் பெண்ணின் பெயர்தான். அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்மன் - மனிதர்கள் நடக்கும் நடைபாதையின் ஒரு பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டவள்.

வீட்டில் மனைவியையும் - தங்கையையும் - அம்மாவையும் பெண்கள் என்ற மதிப்பில்... குறைவாக நினைக்கும் மனிதன் கூட... அந்த அகிலாண்டேஸ்வரியிடம் பயபக்தியுடன் நெருங்குகிறான்.

''அம்மா தாயே!... எனக்கு சீக்கிரம் வேலை உயர்வு ஏற்பட அருள் பாலிக்க வேண்டும்.''

''அம்மா... ஜகன்மாதா!... இந்தப் பரீட்சையில் நான் தேர்ந்துவிட அருள் பாலிக்கவேண்டும்.''

''தாயே ஜகதீஸ்வரி... இந்த இண்டர்வியூவிலாவது நான் வெற்றி பெற வேண்டும். அந்த வேலை கிடைக்க வேண்டும்.''

இப்படிப் பல வேண்டும் என்பதற்கு... ஒரு பெண் தெய்வத்திடம் புலம்ப வெட்கப்படுவதில்லை - வேதனைப்படுவதில்லை.

வீட்டில் மனித உருவில் இருக்கும்போது ஆணுக்கு சரிசமமாக இருக்க முடியாத... பத்தாம் பசலிகள் பெண்கள் என்பது அவர்கள் கருத்து. அந்தப் பெண் கல்லுருவில் தெய்வமாகிப் போய்விட்டால் - அப்பப்பா - பால் அபிஷேகம் செய்து பாதத்தில் விழுந்து கெஞ்சுமளவுக்கு உயர்ந்துவிடுகிறாள்.

இந்த மாதிரி போலித்தனங்களை சம்யுக்தா உள்ளூர வெறுத்தாள். அவள் எந்த வகையில் அண்ணனுக்கு சளைத்தவள்?

அண்ணன் ஆடிட்டர் பரீட்சைக்குப் படித்துத் தேர்ந்தார். பல ஆண்டுகள் கடினமாக உழைத்து இப்போது ஓர் உயர் மட்டத்து அதிகாரியாக இருக்கிறார்.

அவள் மட்டும் சோடையா? - எம்.பி.பிஎஸ். பட்டம் பெற்று முடித்ததும் - மேலே எம்.டி., பட்டம் பெற்று பெண்களுக்கு வரும் நோய்கள் - பிள்ளைப்பேறு சம்பந்தப்பட்ட மருத்துவத்திலே மிகவும் தேர்ந்தவளாக இருந்தாள்.

அந்தப் பிரபல மருத்துவமனையில் சிகிச்சை முறைகளை நன்றாகப் பயின்று கொள்ளும் நிமித்தம்தான் வேலையை ஏற்றுக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச காலத்திற்குப் பின்னர், நவீன சிகிச்சை முறைகளை நன்றாகக் கற்றுத் தேர்ந்த பின்னர், தானே சொந்தமாகத் தொழிலைத் துவக்கி ஒரு சிறு நர்சிங்ஹோம் ஆரம்பித்து நடத்த வேண்டுமென்ற அபார ஆசை மனதிற்குள் இருந்தது.

இப்போது சில நாட்களாக... அந்த ஆசையின் குறுக்கே ரங்கராஜன் என்ற இளைஞனைப் பற்றிய சிந்தனைகள் புகுந்து குழப்பிக் கொண்டிருந்தது உண்மை.

சிவகாமி அம்மாள் ''அவன் உனக்கேத்த பிருதிவிராஜன்'' என்று வேப்பிலை அடித்து அவளது ஆசையைத் தூண்டி விட்டிருந்தாள்.

அன்று அவன் அருகே கார் அசையும்போது பட்டும் படாமலும் அவன் தோள் அவள் மேல் இடித்தபோது,



மின் விசைத் தாக்குதல் போன்ற ஒரு புதிய உணர்விலே அமிழ்ந்து போய் - மனதில் ஆயிரம் இன்பக் கனவுகளுடன் உள்ளே புகுந்தவள் - அண்ணியுடன் விளையாடு வதைக் கண்டு ஆத்திரப்பட்டாள்.

இவர்களுக்குக் கொத்தடிமையாக பெற்றோர்கள் இருப்பது போதும். அவள் இருக்கப் போவதில்லை. தனக்குள்ளே கோபத்துடன் முனகியபடி அவள் தன் அறைக்குள் சென்று தோள் பையை மேஜைமீது வீசிப் போட்டாள்.

மெல்ல கதவைத் திறந்து கொண்டு அம்மா உள்ளே எட்டிப் பார்த்தாள். ஜன்னல் பக்கம் வெறித்தபடி, பெண் இன்னமும் குளித்து - மாற்றுடை அணியாது அப்படியே கட்டிலின் மீது பிரமித்து உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

''சம்யுக்தா? வெந்நீர் எடுத்து விளாவி அண்டாவில் வச்சிருக்கேன். இப்பத்தான் கீஸர் வேலை செய்கிற தில்லேன்னியே... சீக்கிரம் குளிச்சிட்டு வாம்மா. காப்பி, டிபன் ஆறிப்போகுது...''

முன்பெல்லாம் வேலையினின்று வந்ததும் அவள் நேரே குளியலறைக்குள் ஓடி... முதலில் குளித்துவிட்டு, வீட்டில் அணியும் ஒரு சாதா சேலையை அணிந்து கொண்டு, மெல்ல தலையை வாரி முடித்துக்கொண்டு... பொட்டு... வைத்து... தோட்டத்து ரோஜா ஒன்றைக்கிள்ளி கொண்டையில் ஒரு பக்கம் செருகிக் கொண்டு, காப்பி, பலகாரத்தை விரைவாக முடித்துக் கொண்டு வெளியே கிளம்பிடுவாள்.

''வந்ததும் வராததுமா அப்படி என்னத்துக்கு வெளியே ஓடணுமாம்'' அண்ணி, நர்மதா முணு முணுப்பது வழக்கம்.

''தெருக்கோடியிலுள்ள அகிலாண்டேஸ்வரி கோயிலுக்குப் போயிட்டு வரா. சினிமா... டிராமான்னு அலையாம, ஏதோ கோயில் குளம்னு மனதை அடக்கி வச்சுக்கிட்டிருக்காளேன்னு நான் சந்தோஷப்படறேன்'' அம்மா பதில் அளிப்பாள். ''எதுக்கும் ஒரு கண் அவ மேலே வச்சுக் கொண்டிருங்க. இப்ப நான் சொன்னா குத்தமாகப்படும் - பிறகு நமக்கு வீண் அவமானம் வரும்போது ரொம்பவே துன்பப்படுவோம்.'' அண்ணி எச்சரிக்கை செய்வது வழக்கம்.

ஒருநாள் அரைகுறையாக அவள் காதில் அண்ணியின் பேச்சு பட்டபோது ஆத்திரத்தில் அவள் பொங்கிப் போனாள்.

அண்ணி நர்மதா அவளை என்ன என்று நினைச்சுக் கொண்டிருக்காங்க? விரலை சூப்பும் பச்சைக் குழந்தைன்னு நினைப்பா?

காலம் முழுவதும் இவங்களுடைய கட்டுக் காவலில் வாழப்போகிறாள் என்கிற திமிரா?

ஊகும்! இதற்கு ஒரு முடிவு கட்டணும்.

அந்த முடிவு, ரங்கராஜன் மூலம் வந்துவிட்டது போன்றதொரு வியப்பில் அவள் அப்படியே தன்னை மறந்து உட்கார்ந்திருந்தாள்.

''ஏம்மா, இன்னிக்கு கோயிலுக்குப் போகலையா?'' அம்மா கேட்டபோது திடுக்கிட்டு எழுந்து பரபரப்புடன் செயல்பட்டாள்.

சாதாரண நாட்களில் அவள் வெளியே கோயில் வரை போவதற்கு, தனிப்பட்ட விசேஷ அலங்காரம் ஏதும் செய்து கொள்வதில்லை. மழை பெய்து ஓய்ந்துவிட்ட தெரு, ஈரக் கசிவில் நடக்க மிகவும் சிரமமாக இருந்தது.



ஆனாலும் அவளுக்கு அன்று கோவிலுக்குப் போக வேண்டுமென்ற அவா கழுத்தைப் பிடித்து உந்தியது.

அலமாரியில் அடுக்காக வைத்திருந்த புடவைகளில் ஒரு நைலான் புடவையை எடுத்து ஜோடியான ரவிக்கையுடன் அணிந்து கொண்டாள். தோட்டத்திலே பூத்துக் குலுங்கிய சிவப்பு ரோஜா ஒன்றைக் கிள்ளித் தன் கொண்டை ஓரத்தில் செருக்கிக்கொண்டு உள்ளங்கையில் தன் சிறு மணிபர்சை இடுக்கிக்கொண்டு கோயிலுக்குப் புறப்பட்டாள்.

தீபாராதனைத் தட்டில் பத்து பைசாவைப் போட்டு விட்டு கண்களில் ஜோதியை ஒத்திக் கொண்ட போதே அவள் மனதில் அந்த வேண்டுதலை உதயமாகியது...

''அகிலாண்டேஸ்வரி தாயே! எனக்கு வளமான தொரு வருங்காலத்தைத் தந்தருள் அம்மா!''

திடீரென்று அவளது கண்கள் கலங்கிப் போயின. இமைகளை மீறி வெளியே கொட்டிவிடத் துடித்த கண்ணீரை சமாளித்துக்கொண்டு, குங்குமப் பிரசாதத்தை வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள். நன்றாக இருட்டிப் போனதால் தெரு குழல் விளக்குகள் பளிச்சிட்டு எரியத் தொடங்கின. கோவில் அருகேயிருந்த விளக்குகளும்... கோயில் விளக்கும் குபீரென்று பளிச்சிடவே... அது ஒரு நல்ல அடையாளம் போல் அவளுக்குத் தோன்றியது...

கடவுள் சந்நிதானத்திலே கண்ணீர் விடும் அளவுக்கு அவளுக்குத் திடீரென்று ஒரு துன்ப உணர்வு ஏற்பட்டதின் காரணம் அவளுக்குத் தெரியும்.

அவள் மனம் ரங்கராஜனை மிகவும் விரும்பியது.

பார்க்கக் கச்சிதமாக - களை பொருந்திய முகமும்... கண்ணியமான பேச்சும் உள்ள அந்த உயர் மட்டத்து அதிகாரியை விரும்பி மணந்து கொள்ள எத்தனையோ பேர் முன் வருவார்கள் என்பது திண்ணம்.

ஒரு நாள் ஏழாம் நம்பர் நோயாளிக்கு ஊசி போட உள்ளே போனபோது, அந்தம்மாள் சொன்ன விவரத்தில் அவன் கல்யாணமாகாத ஒத்தைக் கட்டை. வீட்டுக்கு ஒரே மகன்... இரண்டு தமக்கைகளுக்கும் கல்யாண மாகி ஒருத்தி அமெரிக்காவிலும்... இன்னொருத்தி ஆஸ்திரேலியாவிலும், தம் கணவர்களுடன் வாழ்கிறார் கள் என்ற விவரம் தெரிய வந்தது. தன் நோயைப் பற்றிப் புலம்பி முடித்துவிட்ட கௌரியம்மாள் தன் தங்கை மகனைப் பற்றி அங்கலாய்த்துக் கொள்ள ஆரம்பித்தாள். ''என் தங்கைக்கு மட்டும் என்ன சுகம்? அத்தனை பெரிய பங்களாவில் கொட்டு கொட்டுனு தனியே உட்கார்ந்திருக்கா. பேரனைத் தூக்கிக் கொஞ்ச வேண்டிய காலம். இந்தப் பிள்ளை சட்டுனு கல்யாணத்துக்கு ஒப்புதல் கொடுத்தால்தானே... நிறைய சம்பாதிக்கிறான். சொந்த வீடு. ஏகப்பட்ட சொத்து... இந்த வயசில் கல்யாணம் செய்துக்காம ஒத்திப் போட்டா பிறகு நல்ல இடமே கிடைக்காது...''

''அப்படியா?'' என்று மட்டும் கேட்டுவிட்டு, தன் வேலையை முடித்துக் கொண்டு அவள் வெளியே வந்து விட்டாள். ரங்கராஜனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்ற உண்மையை அறிந்ததாலோ என்னவோ... அவள் மனதில் அவன்பால் - பார்த்த நாளிலிருந்து ஏற்பட்டதொரு ஈர்ப்பு... மிகவும் அதிகமாகிக்கொண்டு போனது.



வேடிக்கையாகப் பேசிக்கொண்டு அவனுடன் கூட காரில் வந்த நிகழ்ச்சி அவளது உணர்வுகளுக்குத் தூபம் போட்டுவிட்டது.

அவனுக்கும் அவள் மேல் ஈர்ப்பு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கரும சிரத்தையாக அவளுக்கு காரில் இடமளித்து வீடுவரை கொண்டு போய்விடுவானா?

எதற்கும்... அவள் அவனது மனதைப் புரிந்து கொள்ளாது வீணான ஆசைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

இத்தனை காலம் வைராக்கியமாக வாழ்ந்தவளுக்கு இப்போது திடீரென்று என்ன வந்துவிட்டது?

அன்று இரவு அவளுக்கு உணவு பிடிக்கவில்லை... உறக்கமும் வரவில்லை. பற்பல எண்ணியபடி படுக்கை மீது அவள் புரண்டு கொண்டிருந்தாள்.

## 3

மறுநாள் காலை டாக்டர் பரமசிவம் தமது மேற் பார்வைக்கு வந்தபோது சொல்லிவிட்டார்.

ஏழாம் எண் அறை கௌரியம்மாளுக்கு எல்லாவித பரிசோதனைகளும் செய்தாகிவிட்டது. அவளுக்கு முதுகு வலி - மனப்பிரமை. அதனால் அவளை இன்னும் இரண்டு தினங்களில், கடைசியாக செய்யப் போகும் ஒரு சோதனைக்குப்பின் வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும்.

எட்டாம் எண் அறை சிவகாமியம்மாளுக்கு ஓரளவு உடல் குணமடைந்து விட்டதால் இனி இருக்கத்

தேவையில்லை. அன்று மாலையே அவளை வீட்டுக்கு அனுப்பி விட்டு, மறு பரிசீலனைக்கு எந்தெந்த தேதிகளில் அங்கு வர வேண்டும், எத்தனை முறை வரவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விவரமாக எழுதித் தந்து, ஆஸ்பத்திரிக்குத் தரவேண்டிய பணத்தை வசூல் செய்து கொண்டு அனுப்ப வேண்டும்.

கௌரியம்மாள் போய்விடுவாள் என்றபோது அவள் திடுக்கிட்டுத்தான் போய்விட்டாள்.

கௌரி அம்மாளைப்பற்றி அவள் கவலைப்பட வில்லை. அன்றாடம் வந்து மாலைப் பொழுதில் சந்திக்கும் ரங்கராஜனை அவள் இனி பார்க்க முடியாது போனால்!

சிவகாமி அம்மாள் தன் தலை மாட்டிலேயே காசோலை புத்தகத்தை வைத்திருந்தாள். ஆஸ்பத்திரிக்குத் தரவேண்டிய தொகைக்கு உண்டான பில்லைப் பார்த்துவிட்டு ஒரு காசோலை எழுதிக் கொடுத்துவிட்டு, தன் சிறு பெட்டியுடன் ஒரு டாக்சியை வரவழைத்துக் கிளம்பினாள்.

நோயாளிகள், புறப்பட்டுப் போகும்போது தங்களைக் கவனித்த டாக்டர், நர்சுகளுக்கு ஏதேனும் அன்பளிப்பு அளிக்க விரும்புவது சகஜம். ஆனால் அந்த நர்ஸிங் ஹோமின் தலைவர் அதுபற்றி மிகவும் கண்டிப்பான உத்திரவை விதித்திருந்தார். ஆஸ்பத்திரிக் குண்டான தொகை நோயாளியிடமிருந்து வசூல் ஆனபின், அவர்கள் வெளியே போக அனுமதிச் சீட்டு வழங்கவேண்டிய வேலை மட்டுந்தான் அந்தந்த நோயாளியைக் கவனிக்கும் டாக்டருடையது. நோயாளி யிடமிருந்து அன்பளிப்புக்களை ஏற்கவே கூடாது.



நோயாளியின் உள்ளத்தில் நன்றி உணர்வு இருந்தால் போதும். லஞ்சம் கொடுத்து நம்மை ஆட்கொள்ள அவர்களும் முயற்சிப்பது தவறு - நாமும் ஏற்பது தவறு.

சிவகாமி அம்மாள் கிளம்புமுன் தன் அருகே நின்ற சம்யுக்தையின் கரத்தைப் பற்றி தன் பக்கம் இழுத்துத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

''எனக்கு இந்த ஆஸ்பத்திரியின் கட்டுத் திட்டங்கள் ஓரளவுக்குத் தெரியும். உனக்கு நான் கொடுக்க விரும்புகிறதையெல்லாம்... இன்னும் கொஞ்ச நாளே துடிக்கப் போகிற இந்தப் பழுதுபட்ட இருதயத்துக் குள்ளே அடக்கி வச்சுக்கிட்டிருக்கேன். என் வீட்டு முகவரியையும், தொலை பேசி எண்ணையும் தந்துட்டுப் போறேன். போன் செய்துட்டு ஒரு முறையாவது என் வீட்டுக்கு வந்துபோ... நாம வெளியே சந்திச்சு உறவாடுவதை இந்த மருத்துவமனையின் சட்டங்கள் அடக்க முடியாதே! அது ஒன்றும் தவறு இல்லையே?'' என்று கூறிவிட்டு, தயாராக ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதி வைத்திருந்த முகவரியை அவளிடம் கொடுத்துவிட்டுக் கிளம்பினாள்.

யாரோ மிகவும் நெருங்கிய உறவுக்காரரைப் பிரிகிறது போன்ற துயரம் சம்யுக்தாவின் மனதை இறுக்கியது.

''அப்படியே செய்கிறேன் அம்மா...'' என்று கனிவுடன் விடை கொடுத்தனுப்பினாள்.

அறையின் வாயிற்படிவரை சென்று விட்ட சிவகாமி அம்மாள் திரும்பி சம்யுக்தாவைப் பார்த்தாள். அவளது பெட்டியை வார்டு ஆயா சுமந்துகொண்டு போய்

விட்டாள். நர்ஸ் பில்லுடன் காசோலையை வாங்கிக் கொண்டு ரசீதை தபாலில் அனுப்புவதாகக் கூறிவிட்டுப் போய்விட்டாள். இப்போது அவர்கள் இருவர் மட்டுமே இருந்தனர். ''மறக்காதே சம்யுக்தா. உன் பிருதிவிராஜன் உன்னை அணுகினால் சரி என்று ஒப்புதல்கொடு. நான் ஒரு கல்யாண சாப்பாட்டுக்குக் காத்திருப்பேன்.'' ஜிவ்வென்று முகம் சிவந்து போனாள் சம்யுக்தா. இந்தப் பொல்லாத அம்மாளுக்கு அவளது மனதில் அடங்கி யிருக்கும் இரகசியம் எப்படியோ தெரிந்திருக்கிறதே... ரங்கராஜனை அவள் விரும்புகிறாள் என்கிற சங்கதி அவள் முகத்தில் அப்படி எழுதியா ஒட்டியிருக்கிறது? திகைத்துப் போனாள்.

அதற்குப் பின்னர் இரண்டு தினங்களில் ஏழாம் எண் அறையைக் காலி செய்து கொண்டு தமக்கை மகன் காரில் ஏறிக்கொண்டு கௌரியம்மாள் புறப்பட்டு விட்டாள்.

''இருங்க, ஏதாச்சும் அறையில் நம் சாமான்கள் விட்டுப் போனதான்னு பார்த்துட்டு வரேன்'' என்று கிழவியை சமாதானப்படுத்திவிட்டு உள்ளே வேகமாக ஓடிவந்தான் ரங்கராஜன்.

வராந்தாவிலே மெல்ல நடந்து சோதனைச் சாலை பக்கம் திரும்பிக் கொண்டிருந்த அவளிடம் மூச்சிறைக்க ஓடி வந்தான்.

''டாக்டர் சம்யுக்தா! என் பெரியம்மாவை நன்றாகக் கவனிச்சுக் கொண்டதற்கு ரொம்ப நன்றி'' அருகில் நடந்த நர்ஸ்கள் காதில் விழும்படி உரத்த குரலில் கூறி விட்டு, மிகவும் மெல்லி குரலில், ''இன்று மாலை நீங்கள் வெளியே வரும்போது நான் எதிர்ப் பக்கத்து புத்தகக்கடை ஓரம் காரை வச்சுக்கொண்டு காத்திருப்பேன். மறுப்பு



சொல்லாது என்னோடு வரவேணும். அதுக்கு, இப்பவே நன்றி சொல்லிவிட்டுப் போறேன்'' என்று படபட வென்று கூறிவிட்டு வேகமாக வெளியேறினான்.

முடியும் - முடியாது என்ற பதிலைக்கூட கேட்கக் காத்திராது அவன் ஓடியதை நினைத்து சம்யுக்தாவுக்கு ஒரு பக்கம் கோபமும்... அவளை அவன் அத்தனை தூரம் விரும்புகிறான் என்கிற எண்ணத்திலே மகிழ்ச்சியும் மாறி மாறி ஏற்பட... எதற்காக சோதனைச் சாலை பக்கம் வந்தோம் என்ற நினைப்பின்றி கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்று பிரமிப்புடன் நின்றாள்.

பூதக்கண்ணாடியில் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்த டாக்டர் மைதிலி நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

''ஹலோ டாக்டர். உங்களைத்தான் பார்க்கணும்னு காலையிலிருந்து நான் ரொம்ப ஆவலாக இருக்கேன்'' என்றபடி அவள் தன் கோட்டின் பைக்குள் கையைவிட்டு ஓர் அழைப்பு இதழை எடுத்து அவளிடம் நீட்டினாள்.

''என்ன இது? திருமண அழைப்பு மடலைப் போலத் தெரிகிறதே?''

''திருமண அழைப்பு மடல்தான். எனக்கு அடுத்த வாரம் கல்யாணம். மாப்பிள்ளையும் ஒரு டாக்டர்தான். அமெரிக்காவில் ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கிறார். அமெரிக்க குடிமகன். அதனாலே நானும் அங்கே புறப்பட்டுப் போய்விடுவேன். அங்கே போய் வேலை செய்ய பரீட்சைகள் எழுத வேண்டும். தேன் நிலவுக்குப் பிறகு புத்தகங்கள்தான் என் துணையாகப் போகின்றன. என்ன செய்கிறது. வெளிநாடு போக

ஆசைப்பட்டால்'' களுக்கென்று சிரித்தாள். அவளது கண்களில்தான் எத்தனை கனவுகள்?

சில மாதங்களுக்கு முன் இப்படித்தான் டாக்டர் நீலாவதிக்குத் திடீரென்று கல்யாணம் நிச்சயமாகியது. மாப்பிள்ளை பம்பாயைச் சேர்ந்தவர். அவர்கள் குடும்பத்தில் அத்தனை பேரும் டாக்டர்கள். மாதுங்கா அருகில் அவர்களது மருத்துவமனை இயங்கிக் கொண்டிருந்தது. திருமணத்திற்குப் பின் டக்கென்று ஒரு மருத்துவமனையில் உத்தியோகம்.

இப்படிக் கூட வேலை செய்கிற பெண் மருத்துவர்கள் எல்லாரும் திருமணம் செய்து கொண்டு போய் விடுவதை அவள் இந்த இரண்டு வருஷத்தில் நான்கு முறை பார்த்து விட்டிருந்தாள். அவர்கள் இருந்த இடத்திற்கு அடுத்த படியாக டாக்டர்கள் வரத் துடித்தார்கள். வந்தவர்களும் சில மாதங்களில் திருமணம் என்ற சாக்கில் கிளம்பி விட ஆரம்பித்தனர்.

தலைவர் கூட ஒரு நல்ல மன நிலையில் இருக்கும் போது வேடிக்கையாக சொல்லிவிட்டார்.

''இங்கே இந்த இரண்டு வருஷங்களில் வந்து வேலைக்கமர்ந்த பெண் டாக்டர்களின் எண்ணிக்கை சுமார் ஆறு இருக்கும். அத்தனை பேரும் கல்யாணம் என்று கிளம்பி விட்டார்கள். டாக்டர் சம்யுக்தாதான் சீராக ஒரே இடத்தில் இரண்டு ஆண்டுகாலம் வேலை பார்க்கிறாங்க. இவங்க எப்போ நமக்கு அந்த அதிர்ச்சியைத் தரப்போறாங்களோ தெரியவில்லை.''

''அது மாதிரியான எண்ணம் ஏதும் இல்லை ஸார்.'' முகம் சிவந்து நெஞ்சு படபடக்க வார்த்தைகளை சொல்லி முடிக்கத் திணறிப் போய் விட்டாள். உண்மையில் அவள் மனதில் அந்த ஒரு ஏக்கம் இருந்தது உண்மைதான். கல்யாணம் என்ற துணையுடன் இவர்கள் எல்லாரும் போய் விடுகிறார்கள். அவள் வாழ்வில் அந்த மாதிரியான நிகழ்ச்சி இனி நேரப் போகிறதா?'' கட்டாயம் என் கல்யாணத்துக்கு லீவு போட்டுட்டு வந்துடுங்க டாக்டர். அமெரிக்காவுக்கு நான் போய்விட்டால் பிறகு எப்போ சந்திப்போமோ, வருவீங்களா?'' மைதிலி ஆனந்தத்துடன் பற்கள் அத்தனையையும் காட்டியபடி கேட்டாள்.

'''மாலை ரிஸப்ஷனுக்கு வரேன். டாக்டர் பரமசிவம் ஏற்கெனவே டாக்டரை இழக்கப் போகிறோம் என்கிற கோபத்தில் இருப்பார். அவரிடம் கல்யாணத் திற்குப் போக லீவு கேட்டால் என்ன நடக்கும் தெரியு மில்லையா?''

இருவரும் சிரித்தனர். சற்றுத் தொலைவில் டாக்டர் பரமசிவம் பூமியதிர நடந்தபடி சோதனைச் சாலையை நோக்கி வருவதைக் கண்டதும் சட்டென்று டாக்டர் மைதிலி தன் பரிசோதனையைத் தொடர்ந்தாள்.

அப்பொழுதுதான் சம்யுக்தாவுக்கு நினைவுக்கு வந்தது. கடைசியாக கௌரியம்மாளின் இரத்தத்தை எடுத்து பரிசோதனைச் சாலைக்கு அனுப்பி இருந்தாள். அதன் விவரத்தைக் கண்டு போகத்தான் அங்கு வந்தாள்.

அறையிலிருந்த இன்னொரு தடுப்பைத் தாண்டி... அங்கிருந்ததொரு சிறிய அறையில் தனிப்பட்ட முறையில் சோதனைகளில் ஈடுபட்டிருந்த ஆஸ்பத்திரியின் பரிசோதனையின் தலைவர் டாக்டர் ரவியைப் பார்த்து நோயாளியின் இரத்த பரிசோதனையின் முடிவைக் கொண்ட காகிதத்தை வாங்கிக் கொண்டு, டாக்டர் பரமசிவத்தின் அனாவசியக் கேள்விகளுக்கு இடமளிக்காது வேகமாகத் தன் வார்டை நோக்கி நடந்தாள்.

ஆனாலும் மனம் கனத்தது. டாக்டர் மைதிலிக்கு அடுத்த வாரம் கல்யாணம்... கணவனுடன் அமெரிக்கா வில் சென்று குடியேறப் போகிறாள். கைநிறைய சம்பாதிப்பாள். கார் - வீடு - என்று பல வசதிகளுடன் இருக்கப் போகிறாள் - இத்தனைக்கும் அவள் எம்.பி.பிஎஸ். மட்டுமேதான் முடித்துவிட்டு இருந்தாள். அவளுக்கு அப்படி ஒரு யோகம்.

அன்று வேலை அவளுக்கு சுவாரஸ்யமாகவே இருக்கவில்லை. கடனுக்காக பற்களைக் கடித்துக் கொண்டு, செய்ய வேண்டியவற்றை சரிவர செய்து முடித்துவிட்டு, தன் வேலை நேரம் முடிந்ததும் தோள் பையை மாட்டிக் கொண்டு, பிளாஸ்டிக் பையில் அழுக்காகிவிட்ட துணிகளுடன் வீட்டுக்குக் கிளம்பினாள். போகுமுன் சொல்லியது போல் எதிர்ப்பக்கத்து புத்தகக்கடை ஓரம் அவனது கரும்பச்சை பியட் கார் நின்று கொண்டிருந்தது. காந்த சக்தியால் ஈர்க்கப்பட்டவள் போல, அவள் சாலையைத் தாண்டி எதிர்ப்பக்கம் வந்தாள்.

மௌனமாக அவன் முன்பக்க இருக்கை கதவைத் திறந்துவிட்டான். அவள் ஏறி உட்கார்ந்து கொண்டாள். கார் கடற்கரையை நோக்கி விரைந்தது.

கடற்கரை ஓரத்திலே ஒரு பக்கமாக காரை நிறுத்தினான் ரங்கராஜன். ''இந்தா! இப்படி வா!'' என்று பூக்காரப் பையன் ஒருவனைக் கைதட்டி அழைத்து இரண்டு முழம் மல்லிகைப் பூவை வாங்கினான்.

''என் மேற்படிப்பிற்காக நான் ஜெர்மனியில் இரண்டு ஆண்டுகாலம் தங்கியிருந்தவன். பின்னர் எங்கள் கம்பெனி சார்பில் இங்கிலாந்தில் ஆறுமாத காலம் பயிற்சி



மேற்கொண்டேன். அப்படியே ஒரு சுற்றுலா பயணமாக அமெரிக்காவையும் ஆஸ்திரேலியாவையும் பார்த்து விட்டு வந்தேன். போன மாதம் ஒரு வார காலம் நான் ஜப்பான் போக நேர்ந்தது.''

''நீங்கள் உலகத்தில் உள்ள முக்கிய இடங்களுக் கெல்லாம் போய் வந்தவர். அதனால் தொழில் நுட்பங்களைப் பற்றி அதிகம் அறிந்தவர். அத்துடன் உலக அனுபவமும் அதிகம் பெற்றவர் என்று புரிகிறது. அதற்கும் இப்போ நாம் இங்கே வந்து காரில் உட்கார்ந்திருப்பதற்கும் என்ன சம்பந்தம்?''

''இருக்கிறது. அந்த நாடுகளில் கொஞ்ச காலம் தங்க நேரிட்டதால் சில பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொண்டு விட்டிருக்கேன். அவர்கள் எல்லாம் ஏதாவது ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல ஆசைப்பட்டால் ...ஸே இட் வித் தி ஃப்ளவர்ஸ் - 'மலர்கள் கொடுத்து சொல்' என்பார்கள். அந்த வழக்கம் எனக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு. அத்துடன் என் மனதில் உள்ளதை இந்த மல்லிகை சரத்தோடு சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து இதை உன் தலையில் வச்சிக்குவியா?'' அவளிடம் பூச்சரத்தை ஆவலுடன் நீட்டினான்.

சம்யுக்தாவின் கரங்கள் நடுங்கின. இரண்டு கைகளையும் நீட்டி அதை மிகவும் பணிவுடன் பெற்றுக் கொண்டு தலையில் மடித்து வைத்துக் கொண்டாள். என்ன சொல்லப் போகிறான் என்பதை அவளால் எதிர்பார்க்க முடிந்தது. எனினும் அந்த இன்ப அதிர்ச்சியில் மார்பு துடியாய்த் துடித்தது. முகமெல்லாம் சிவந்து, நெற்றியில் முத்துக்களாக வியர்வை பூத்து விட்டது.

''சம்யுக்தா இனி ஒருமையில்தான் உன்னை அழைக்கப் போகிறேன். உன்னைக் கண்ட நாளிலிருந்து நான் உன் வசமாகிப் போனேன். உன்னை நான் ரொம்பவே விரும்புகிறேன். உன்னை மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன். உன் பதில்?''

காய்ந்து போன உதட்டை நாவால் தடவிக் கொண்டாள். ''நானும் உங்களை ரொம்பவும் விரும்புகிறேன். உங்கள் மனைவியாக வாழ்வதை மிகவும் பெரிய பாக்கியமாகக் கருதுவேன்.'' அதற்கு மேல் பேச முடியாது திணறிப் போனாள். அவள் கண்களில் கண்ணீர் புரண்டது.

''சந்தோஷமான இந்தச் சமயம் ஏன் இந்தக் கண்ணீர்?'' ஷேவிங் லோஷனில் மணத்த தனது கைக்குட்டையை சட்டைப் பையினின்று அவன் எடுத்து அவளிடம் கொடுத்தான்.

கண்களில் புரண்ட நீரை மெல்ல ஒத்திக் கொண்டாள். 'சம்யுக்தா, உனக்குக் கல்யாணமா?... உன்னையும் ஒருவன் மணக்கவா முன் வந்திருக் கிறான்?...'

'உன்னைப் பற்றி அவனுக்கு எல்லாம் தெரியுமா?'

உள் மனம் ஓலமிட்டது. ஆனாலும் அவன் அவளை விரும்புகிறான். மனைவியாக ஏற்க ஆசைப்படுகிறான் என்ற உண்மை அவளை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தி விட்டது.

அவர்கள் தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருந்தனர்.



## 4

**கௌ**ரியம்மாள் ஆஸ்பத்திரியிலிருந்து வெளி யேறி இரண்டு மாதங்களுக்கும் மேலாகி விட்டன. ஆனால் ஒரு நாள் கூட தவறாது ரங்கராஜன் மாலை வேளையில் தன் வேலைக்குப் பின் அவள் வழக்கமாக வரும் பஸ் நிலையத்திற்குக் கொஞ்சம் தள்ளி சாலையின் ஓரத்தில் அவளுக்காகக் காத்திருப்பதை வழக்கமாக்கிக் கொண் டிருந்தான்.

முழு நேரப் பணி நாளின்போது கூட அந்த மாலை நேரத்தை தன் ஓய்வு நேரமாக மாற்றிக்கொண்டு, அவனது காரில் ஏறிக் கொண்டு கடற்கரைவரை சென்று வருவதில் அவளுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி!

இரவுப் பணி செய்ய... மாலை வேளையே வீட்டை விட்டுப் புறப்பட்டு வருவதையும் வழக்கமாக்கிக் கொண்டு விட்டிருந்தாள்.

மாலை ஏழு மணி அளவில்தான் இரவுப் பணி மருத்துவமனையில் துவங்குவது வழக்கம். அதற்கு முன்னதாகவே வந்து அவனை சந்தித்து, காரில் ஊரைச் சுற்றி விட்டுத்தான் மருத்துவமனைக்குச் சென்றாள்.

வீட்டவர்களுக்குத் தெரியாது. தெரிந்தவர்களின் கண்களில் படாமல் இப்படி அவள் அவனுடன் சுற்று வதில் ஒரு தனி இன்பமும் ஓர் உற்சாகமும் அடைந்தாள்.

மணிக்கணக்கில் கடற்கரை ஓரத்தில் காருக்குள் மறைவாக அமர்ந்து அவர்கள் இருவரும் தங்கள் வருங் காலத்தைப் பற்றி வண்ண வண்ணமான கனவுகளை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

அவன் விரைவில் அமெரிக்கா போக விரும்புகிறான்.

அவள் அதற்கான பரீட்சைகளை எழுத இசைந்தால், இருவரும் அந்த நாட்டில் போய் ஏராளமான பணத்தை சம்பாதித்து மிகவும் வசதியாக வாழலாம். அவனது தமக்கை ஒருத்தி அங்கே ஏற்கெனவே தங்கியிருப்பதால் தனிமை அவர்களை அதிகம் பாதிக்காது.

அண்ணியின் தொண தொணப்பை - அண்ணனின் அதிகப்படியான அதிகாரத்தை யெல்லாம் உதறிவிட்டு பரமசிவத்தின் கடுமையான பார்வைக்கு முழுக்குப் போட்டுவிட்டு, அவள் மிகவும் சுதந்திரமாக... வேறு நாட்டில் தன் இன்ஜினியர் கணவனுடன் வாழப் போகிறாள்.

சும்மா சொல்லக்கூடாது. அருள்மிகு அகிலாண்டேஸ் வரி மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம்தான்!

இவ்வளவு விரைவில் அவள் வருங்காலத்திற்கு ஒரு வழி அமைத்துத் தந்து விட்டாளே, தேவி!

அம்மாவுக்கு எப்பொழுதும் கூர்மையான கண்கள். சாதாரண வீட்டு விஷயங்களே அவளது பார்வையி லிருந்து தப்புவதில்லை. ''காத்ரிஜ் பூட்டை இங்கே தானே வைக்கிற வழக்கம். எப்படி இடம் மாறிப்போச்சு?'' என்று உடனுக்குடன் கேட்பவள்.

அதிகப்படி இல்லாவிடினும் கண்டுபிடிப்புகளில் ரொம்ப புத்தி கூர்மை. மகளின் முகத்திலே கொஞ்ச நாட்களாகக் காணப்படும் இந்தப் புதிய களை அவளது சந்தேகத்தைக் கிளப்பி விட்டிருந்தது.



''ஆமாம், சம்யுக்தா! கண்ணாடிக்கு முன்னாடி எத்தனை நாழி உட்கார்ந்திருப்பே... வீட்டில் வேறே வேலை ஏதும் இல்லையா?''

அம்மா கேட்கும்போது சம்யுக்தா கோபத்தில் கொதித்துப் போனாள். அதுகூட ஒரு தவறா? சீறி யெழுந்தாள்.

''சின்னப் பொண்ணு - பூவும் பொட்டுமாக இருக் கட்டும்னு அண்ணா அனுமதிச்சிருக்கார். அதுக்குமேலே நீ ஏதாச்சும் ஏடாகூடமாகச் செய்தால்...''

''அலங்காரம் செய்து கொள்கிறது ஒவ்வொருத் தருடைய பிறப்பு உரிமை. அதில்கூட அண்ணா தலையிட்டால் நான் பொறுக்க மாட்டேன். ஏடாகூடமா நான் எதாச்சும் செய்துட்டதாக வச்சுக்குவோம். அப்போ நீங்க என்ன பண்ணப் போறீங்க?'' கோபத்துடன் ஒரு நாள் கேட்டுவிட்டாள்.

''இரைந்து பேசாதே. அண்ணன் காதில் பட்டால் ஆபத்து.''

''அம்மா, உங்களுக்குப் பிறகு நான் எப்படி வாழணும்னு நீங்க நினைக்கறீங்க?''

''உன்னையொத்தப் பெண்கள் எப்படி வாழணும்? அண்ணன் இருந்தால் அவன் ஆதரவில்... அவனது குழந்தைகளை எடுத்து அத்தை என்ற உறவில் கொண்டாடிக் கொண்டு அவன் பாதுகாப்பில் இருப்பதுதான் உலக நியாயம்.''

''அதெல்லாம் உங்க காலத்து சங்கதி; நான் யாருடைய அடிமையாகவும் இருக்கப் போவதில்லை...''

''என்னவோ என் மனதை ரொம்பக் குழப்பறே. எனக்குப் பயமா இருக்கு. உங்கப்பா கூட காலத்தை ஓட்டி நடந்துக்குவார். ஆனால் உன் அண்ணியும் அண்ணனும் நீ ஏதாவது தப்புச் செய்தா மன்னிக்கமாட்டாங்க. அவங்க ஆதரவிலே இருக்கிற எங்களுக்குப் பேச வாய் இல்லையம்மா.''

''அம்மா நீங்க ஒரு பெண்தானே. என் வயசில் உங்க மனதில் எத்தனை விதமான கனவுகளும் ஆசைகளும் இருந்திச்சுன்னு யோசிச்சுப் பார்த்தீங்களா?''

''நான் தினமும் உன்னைப் பற்றி யோசிச்சுதான் உருகிட்டு இருக்கேன். உங்க அண்ணனுக்கு மனம் மாறணுமே?''

''அவங்களுக்கு என் சம்பாத்தியம் தேவை. அதுக்குப் பதிலாக என் இளமைக்குப் பாதுகாப்புத் தர முன் வராங்க. நான் படிக்காது, தொழில்கல்வி அறிவில்லாத ஒரு மட்டிப் பெண்ணாக இருந்தால்?''

''அண்ணன் வீட்டைவிட்டு துரத்திவிடமாட்டார். என்ன இருந்தாலும் இரத்த பாசம் விடுமா?''

''ஆட்டுக்கல்லை நாள் முழுவதும் பிடிக்க வச்சிருப்பார். வீட்டு வேலைக்காரியாக மாத்தியிருப்பார். இப்படி அண்ணன், தம்பி இவங்களது ஆதிக்கத்திலே தனியாகிவிட்ட பெண் அடங்கி வாழணும் என்கிற காலம் மலையேறிப் போச்சு. அவங்க அவங்களுக்குத் தனியாக வாழ உரிமை இருக்கு.''

''என்னவோ அம்மா நீ என்னை ரொம்பவே குழப்பறே. உங்கப்பா கிட்டகூட நான் நீ சொல்றதை சொல்ல விரும்பமாட்டேன். எனக்கு இந்த வீட்டு



ஆம்பிள்ளைகள் கிட்டே ரொம்பவும் பயம். அப்படி இதுவரை வாழ்ந்துட்டேன்.'' அம்மா அழமாட்டாத குறையுடன் சொன்னாள்.

தன் விருப்பத்தை வெளிப்படையாக அம்மாவிடம் சொல்லி அவள் ஆலோசனையைக் கேட்கவும் முடியாது. அண்ணன் ஒப்புதல் தர மறுத்து ஆர்ப்பாட்டம் செய்யலாம்.

ஆமாம். நல்லது பொல்லாது எல்லாத்தையும் மனம் விட்டுப் பேசி தெளிவு பெற அவளுக்குத் தாய் போன்ற சிவகாமி அம்மா இருக்கிறார்களே. வீட்டுக்கு வந்து போகும்படி உபசரிச்சாங்களே. மறுபரிசீலனைக்கு அவங்க நர்சிங்ஹோம் வந்தபோது அவள் பிரசவ அறையில் ஒரு கேசைக் கவனித்துக் கொண்டிருந்ததால் பார்க்க முடியவில்லை. ஆனால் என்ன, அவங்களைத் தொலைபேசியில் கூப்பிட்டுவிட்டு, நேரே வீட்டுக்குப் போனால்?

சிவகாமியின் குரலில் அன்பு தொனித்தது. ''இன்று பகல் உனக்கு வேலையில் ஓய்வா. நேரே சாப்பிடவே நம்ப வீட்டுக்கு வந்துடு. உனக்குன்னு தனியா ஏதும் நான் சமைக்கமாட்டேன். கூட சமையலுக்கு ஒரு பெண் உதவறாங்க; கவலைப்படாதே. நான் வீணாக உனக்காக உடம்பை அலட்டிக்க மாட்டேன். நீ வந்தாலே என் நோய் பாதி ஓடி மறைஞ்சுடும்.''

தாயன்புடன் மிகவும் பரிவாக மறுபக்கம் தொலைபேசியில் சிவகாமி பேசினாள். ரங்கராஜனை எதிர் கடையிலிருந்த தொலைபேசி மூலம் அழைத்து அன்று மாலை அவன் தனக்காகக் காத்திருக்க வேண்டாம்.

ஒரு முக்கிய வேலை இருக்கிறது என்று கூறிவிட்டு பகல் வேலைக்குப்பின் அவள் கிளம்பிவிட்டாள்.

அந்த வீடு அவள் எண்ணியது போல ஒரு சின்ன வீடாக இருக்கவில்லை. கவனிக்கப்படாத பெரிய முன் புறத் தோட்டத்துடன் எட்டு கிரவுண்ட் விஸ்தரிப்பிலே அந்தக் காலத்தில் கட்டப்பட்ட போர்ட்டிகோ இத்யாதி கொண்டதொரு பங்களா...

கேட்டை காவல் காக்க கூர்க்கா இருக்கவில்லை. திறந்து கொண்டு உள்ளே சென்றாள். வீடு சாயம் இழந்து, போர்ட்டிகோவைத் தாங்கிய தூண்களில் காரை பெயர்ந்து பழுதடைந்து காணப்பட்டது.

கோபுர வாசல் கதவு போன்ற தேக்கு மரக்கதவின் முகப்பிலிருந்த அழைப்பு மணியை அழுத்தினாள்.

சிவகாமி அம்மாளே வந்து கதவைத் திறந்தாள்.

''கண்டு பிடிச்சுட்டு வந்துட்டியே'' என்று கூறிவிட்டு, ''ஆசிரியர் வேலையிலிருந்து ஓய்வடைந்த இவளுக்கு இத்தனை பெரிய பங்களாவான்னு கேட்டுடாதே! அப்பா எனக்கு விட்டுப்போன சொத்து. இப்போ பெரும் சுமையாக இருக்கு. எனக்குப்பின் இதை அனுபவிக்கக் கூட எனக்குன்னு யாரும் இல்லை! அந்தச் சோபாவில் உட்காரு. இங்கே கிடக்கும் எல்லா சாமானும் ஹைதர் காலத்திலே வாங்கினது. யாராவது ஆன்டீக் பொருள் வாங்க ஆசைப்படுகிறவங்ககிட்டே வித்தா கொஞ்சம் பணம் கிடைக்கும். அப்பா ஐ.சி.எஸ் ஆபீசராக கொடி கட்டிப் பறந்த காலத்துல பல சாமான்களை வாங்கி நிரப்பி வச்சுட்டார்'' சிரித்தபடி உபசரித்தாள் சிவகாமி.

மாரடைப்பிலிருந்து பிழைத்து எழுந்தவள் என்ற சாயை சிறிதும் அவள் முகத்தில் இல்லை. மிகவும் உற்சாகத்துடன் பூரண ஆரோக்கியத்தை அனுபவிக்கிற ஒரு இளம்பெண் போல மகிழ்ச்சியான குரலில் பேசினாள்.



''முதலில் சாப்பிடுவோம்... அந்த வேலைக்காரப் பெண் பாத்திரங்களை கழுவிப் போட்டுவிட்டு மீதி சாப்பாட்டை தூக்குச் சட்டியில் போட்டுக் கொண்டு கிளம்பி விடுவாள்.''

''நீங்க இத்தனை பெரிய வீட்டில் தனியாவா இருக்கிறீங்க.''

''ரெக்ஸி இருக்கான். அவனை உனக்காகப் பின்னால் அவுட் ஹவுசில் கட்டிப் போட்டிருக்கேன். இதோ லேசா குரைக்கிற சத்தம் கேட்கிறதில்லையா. நீ போனதும் அவனை அவிழ்த்து வீட்டுக்குள் விட்டு விடுவேன். அவன் பக்கத்திலே இருக்கும்போது எனக்குப் பயமே இல்லை. தனியாக இருக்கிறோம் என்ற எண்ணமே இல்லை. உனக்குத் தெரியாதா, ஒரு மனிதனுடைய உண்மையான நண்பன் அவனுடைய நாய்தான். என் ரெக்ஸி என்னை பத்திரமாக இரவு முழுவதும் பார்த்துக்குவான். மேலும் திருடிக்கொண்டு போக என்னிடம் வீட்டில் நகை ஏதும் கிடையாது. வீட்டில புழங்கும் சாமான்கள் எல்லாம் குறைவு'' - என்று பேசிக் கொண்டே காஷ்மீர் தட்டியால் தடுக்கப்பட்ட பகுதியில் கிடந்த பெரியதொரு தேக்கு மேஜையருகே அழைத்துச் சென்றாள். வேலைக்காரி அவர்களுக்கு வாழை இலையில் வேகமாக உணவு பரிமாறினாள்.

''இதென்ன, வடை பாயசம் ரொம்ப தடபுடல் படுத்தியிருக்கீங்களே'' வியப்புடன் கேட்டாள் சம்யுக்தா.

"நீ என்னை பார்க்கணும்னு சொன்னப்பவே, ஒரு நல்ல முடிவோட நீ வரப்போறே. என் யோசனையைக் கேட்கப் போறேன்னு புரிஞ்சுப் போச்சு. கொஞ்சம் பாயாசமும் வடையும் செய்யச் சொன்னேன். கல்யாண சங்கதியாச்சே! அதனால்." குறும்புத்தனமாக சிவகாமி சிரித்தாள். லேசாக சிவந்து போனாள் சம்யுக்தா. அந்த அம்மாளிடம் மனம் திறந்து பேச எந்தவிதமான தடங்கலும் இருக்காது என்பதற்கு இதைவிட வேறு சான்று என்ன வேணும்?"

சாப்பாட்டிற்குப் பின்னர் வேலைக்காரி புறப் பட்டதும் அவர்கள் இருவரும் அந்தப் பெரிய முன்னறையில் எதிர் எதிராக சோபாக்களில் சாய்ந்து கொண்டனர்.

"இப்போ நான் தயார். நீ ஆரம்பிக்கலாம்" கோடி காட்டி விட்டாள் சிவகாமி.

"அம்மா, நான் முதலில் என் வாழ்க்கையில் நடந்த ஒரு முக்கிய நிகழ்ச்சியைப் பற்றி சொல்லணும்... பொறுமையாக நீங்க கேட்கணும்" என்று ஆரம்பித்தாள் சம்யுக்தா.

அவர்கள் குடும்பம் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மங்கல மேட்டிலிருந்து சென்னைக்கு வந்தது. அவளது அப்பாவுக்கு கிராமத்தில் சொந்தமாக ஒரு ஓட்டுவீடும் கொஞ்சம் நஞ்சை பூமியும் சொந்தமாக இருந்தன. நஞ்சை நிலத்தை பங்காளி மகன் பார்த்துக் கொண்டான். வீட்டில் அவர்களின் தூரத்து உறவுக்காரப் பாட்டி குடியிருந்தாள். பள்ளிக்கூட நாட்களில் அவர்கள் அனைவரும் கோடை விடுமுறைக்கு அங்கே கிராமத்தில் தங்கியிருக்க போய் விடுவார்கள்.



கரை தெரியாது புரண்டோடிய காவிரியில் அவள் குளித்து மகிழ்ந்த நாட்களை இப்பொழுது நினைத்தாலும் மனம் இன்பத்தில் பூரித்துப் போகிறது.

பாவாடை குடை விரிக்க, வரப்பு மேலே ஓடிக் கொண்டு, காற்று வாக்கில் தலையசைக்கும் நெற்பயிரைத் தொட்டுப் பார்த்து விளையாடுவதில் அவளுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி? அண்ணன் சந்திரனுக்குப் பிறகு பிறந்த இரண்டு பெண்களும் ஒருவர் பின் ஒருவராக சிறு வயதிலேயே இறந்து விட்டதால், அவள்மீது பெற்றோர்களுக்கு மிகவும் ஆசை. பல ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் பத்தரைமாத்துத் தங்க விக்கிரகம் போலப் பிறந்த அவளுக்கு அண்ணனும் பெற்றோர்களும் ரொம்பவும் செல்லம் கொடுத்தனர். அவர்கள் மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றாலும், இளவயதிலேயே அவள் தேவை என்பதையே அதிகம் உணராது மிகவும் செல்லமாகத்தான் வளர்க்கப்பட்டாள்.

அவள் சென்னையில் ஒரு கான்வெண்ட் பள்ளிக் கூடத்தில் மெட்ரிக் படித்து முடித்துவிட்டு, வீட்டிலே பூ வேலை, சமையல் இத்யாதிகளைக் கற்றுக்கொண்டு இருந்த சமயம். அண்ணனுக்கு முதலில் திருமணமாகியது. மருமகளாக அண்ணி நர்மதா வீட்டுக்கு வந்ததுமே அண்ணன் குணத்திலே மாறுதல்கள் நிறையவே தெரிந்தன. அந்தச் சமயம் அண்ணன் சார்ட்டட் அக்கௌண்டெண்ட் படிப்பையும் முடித்துக்கொண்டு ஒரு பிரபல நிறுவனத் தில் முக்கிய அக்கௌண்டெண்டின் கீழ் உதவியாளராக அமர்ந்திருந்தார். தான் சம்பாதிக்கிறோம் என்ற நினைப்பு வேறு. அவரது குணத்தில் சில மாறுதல்களை உண்டாக்கி விட்டிருந்தது. மகளை மேலே படிக்கை வைக்க வேண்டும் என்று அப்பா பிரியப்பட்டார்.

''போதும் படிப்பு; கல்யாணம் செய்து கொடுத்து விட்டால் தொல்லை விடும்'' என்பது அண்ணனின் அபிப்ராயம். அப்பா ஓய்வடையும் வருத்தத்திலே இருந்தார். அண்ணன் சம்பாத்தியம் அவர்கள் குடும்பத்தை நடத்தப் பெரிதும் உதவியது. தாய்க்கு தலைப்பிள்ளை அவர். அவரை எதிர்த்துக் கொள்ளவோ, அவர் பேச்சைத் தட்டிக்கழிக்கவோ அப்பாவுக்கோ அம்மாவுக்கோ அந்த நாளிலேயே துணிவு கிடையாது.

அவளுக்கு அப்போது பதினெட்டு வயது இருக்கும். உறவினர் ஒருவர் வீட்டுக் கல்யாணத்திற்கு வந்திருந்தவர் களில் கைலாசமும் அவனது விதவைத் தாயும் இருந்தனர். கைலாசம் பி.ஏ. படித்தவன். அத்துடன் தட்டெழுத்து இத்யாதிகளில் தேர்ந்து விட்டிருந்ததால் சென்னையில் ஒரு கம்பெனியில் அவனுக்கு கணக்கர் வேலை கிடைத்திருந்தது. ''பார்க்க லட்சணமாக இருக்கான் பையன். கூடிய சீக்கிரம் வேலையில் சேரும்படி உத்திரவு வந்திருக்கு. இவனை நம் சம்யுக்தாவுக்குப் பேசி முடித்தால்?'' அண்ணாவின் யோசனை இது.

அம்மாவும், அப்பாவும் தலையசைத்தனர். பையன், அவர்கள் அந்தஸ்திலே கொஞ்சம் குறைந்த இடத்தி லிருந்து வந்ததால் சீர் வரதட்சிணை எதுவும் எதிர்பார்க்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை அண்ணாவுக்கு. அது வீண் போகவில்லை. உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்கு நான்கு நாள் முன்னதாகவே எல்லோரும் கிராமத்தில் கூடியிருந்ததால், சம்யுக்தாவின் கல்யாணத்தைப் பற்றிய பேச்சு வார்த்தைகள் பெரியவர்கள் இடையே மிகவும் துரிதமாக நடந்தன.

''இதோ பார் சந்திரன்! இப்போ நடக்கிற கல்யாணத்தோட சேர்த்து இதையும் வச்சுக்கிட்டா செலவு



ரொம்பவும் ஆகாது. இரண்டு வீட்டுக்காரர்களும் ஆளுக்குப் பாதியாக போட்டுக்கலாம். கல்யாணம் நம்ப சிவன் கோவில் மண்டபத்திலே வச்சுக்கப் போகிறோம். ஊராருக்குப் போடப்போற சாப்பாட்டை ஒரே நாளில் இரண்டு கல்யாண வீட்டுக்காரரும் போட்டு முடிச்சுடப் போறோம். கொஞ்சம் யோசிச்சுப் பார்.'' அண்ணனுக்கு இது நல்லதொரு ஆலோசனையாகப்பட்டது. ''கூறை எடுக்கணும்... மாங்கல்யம் செய்யச் சொல்லவேணும். எத்தனையோ விஷயமிருக்கே'' அம்மா தயங்கியபோது எதிர் வீட்டுப் பெரியவர் ஒரே அதட்டலில் அவளை அடக்கிவிட்டார்.

''என்ன கூறை? திருச்சிக்கு ஒரு பஸ்சில் போய் யாராச்சும் புடவை துணி மணி வாங்கி வந்திடலாமே. மாங்கல்யம் கூட தயாரா சுகுமார் கடையிலே செஞ்சு வச்சிருப்பாங்க. வாங்கிக்கிறது. ஜாதகம், பொருத்தம் இதெல்லாம் பார்க்கவாணாம். மனம் பொருத்தம்னு ஆயிட்டா அதெல்லாம் தேவையில்லை. தம்பி, நல்ல காரியம் கூடும்போது மசமசன்னு யோசிச்சுகிட்டு இருப்பது தப்பு. சட்டுனு சூட்டோட சூடா எல்லாத்தையும் முடிச்சுடணும். அப்படி ஓர் அவசரத்தில் காலில் சூடான கஞ்சியை ஊத்திக்கொண்டது போன்ற தவிப்பில் உறவுக்காரப் பையனுடைய கல்யாணப் பந்தலில் அவளுக்கும் இளைஞன் கைலாசத்திற்கும் பத்திரிகை அச்சடிக்காது, பலர் வீட்டுப்படிகளை ஏறி இறங்கி அழைப்பு வைக்காது, புரோகிதர் எழுதிக் கொடுத்த திருமணச் செய்தி அடங்கிய காகிதத்தை மட்டும் கோயிலில் பிள்ளையார் பாதத்தில் வைத்து அர்ச்சனை செய்து எடுத்துக்கொண்ட திருப்தியில், பெற்றோர்கள் தமது செல்வ மகளை கைலாசத்திற்குக் கட்டிக்

கொடுத்தனர். மணமக்கள் கல்யாணமான மறுநாள் ஒரு சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டனர். தேன் நிலவுக்காவது போய்வரட்டும் என்பது அண்ணனின் யோசனை. தஞ்சாவூர்வரை சென்று அங்கே ஒரு ஹோட்டலில் தங்கியிருந்து கோவில்களுக்குப் போய்விட்டுப் பின்னர் வீடு திரும்ப வேண்டுமென்று கட்டளை.

ஒரு வார காலத்திற்குப்பின் அவர்கள் கிராமத்திற்குத் திரும்ப வேண்டும். பின்னர் எல்லோருமாக ஒரே கூட்டமாக சென்னைக்குக் கிளம்புவது என்று ஏற்பாடு.

ஏழு நாட்களுக்குப் பின்னர் கணவனும் மனைவியும் கிராமத்திற்குத் திரும்பி வந்தனர். தன் மனைவியிடம் கைலாசம் மிகவும் அன்பாகத்தான் நடந்து கொண்டான். திருமணம் என்றால் இப்படித்தான் இருக்கும் என்ற அளவுக்கு அவள் வாழ்க்கையைப் புரிந்து கொண்டிருந் தாள் அந்த ஏழு நாட்களில்...

மாலை சாப்பாட்டிற்குப் பின்னர் திருச்சிக்குப் பஸ் பிடித்து ஜங்ஷன் போய்ச் சேர, பரபரப்புடன் அம்மாவும் மற்றவர்களும் மூட்டைகளைக் கட்டிக் கொண்டிருந்த போது, மாப்பிள்ளை கைலாசம் வயிற்றுவலி தாங்க முடியாது துடித்துப் போய்த் துவண்டு மயங்கி விழுந்து, கெஞ்சாத குறையாக அப்பா வேண்டிக் கொண்டதின் பேரில் தனது காரை எடுத்துக்கொண்டு வந்து உதவினார் மனிதன்.

திருச்சி ஜங்ஷனுக்குப் போக வேண்டிய கும்பல் முக்கால் வாசிபேர் பஸ்ஸிலும், சில முக்கியமானவர்கள் கைலாசத்துடன் காரிலும் நகரத்து ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர்.



ஆஸ்பத்திரியில் உடனடியாக அனுமதிக்கப் பட்டான் கைலாசம் - பெரிய டாக்டர் வந்து பார்த்து விட்டு, அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும், அப்பெண்டிசைடிஸ் என்று கையை விரித்தார்.

அண்ணனும், அப்பா, அம்மாவும், கைலாசத்தின் தாயும் ஒப்புதல் கொடுக்கவே அவசர அறுவை சிகிச்சைக்கு உள்ளே எடுத்துச் செல்லப்பட்டான் கைலாசம்.

நேரம் நத்தையாக... நகர, பயத்தில் உறைந்து போய் ஆஸ்பத்திரி வராந்தாவிலே கிடந்த பெஞ்சுமீது சம்யுக்தா தாயின் தோளைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

டாக்டர் அறுவை சிகிச்சையை முடித்துவிட்டு, துவாலையால் கைகளைத் துடைத்துக் கொண்டு, தலையில் தொப்பியும் கழுத்தில் மாஸ்க்குமாக வெளியே வந்தார்.

அப்பவே அவரது முகம் உண்மையை அவர்களுக்கு சொல்லிவிட்டது.

''ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்தேறிவிட்டது. ஆனால்...''

''ஆனால்'' என்று அத்தனை பேரும் அலறினார்கள்.

''நோயாளி மேசை மீதே சில நிமிஷங்களுக்கு முன் இறந்து போய்விட்டார்.''

''அம்மா'' என்று கத்திய சம்யுக்தா தாயின் தோளை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு அழுகையில் குலுங்கி னாள்.

''எங்க தலையில் இப்படி ஒரு இடி விழனுமா?'' அம்மா இரைந்து புலம்பியபோது உள்ளேயிருந்த நர்ஸ் ஓடிவந்து அவர்களை அனைவரையும் அதட்டினாள்.

''இது ஆஸ்பத்திரி. உங்க துயரம் எங்களுக்குப் புரிகிறது. இரைஞ்சு அழக்கூடாது. மத்த நோயாளிங்க பயந்துடு வாங்க.''

அப்பா வாயிற்குள் துண்டை அடைத்துக்கொண்டு முகம் சிவக்க கண்களிலிருந்து மாலையாகக் கண்ணீர் வழிய நெஞ்சு வெடித்துவிடும் போல அழுதார்.

பணத்தைச் சிக்கனம் பண்ண தமது ஒரே ஒரு அருமை மகளை விதவையாக்கி விட்டோமே என்ற குற்ற உணர்விலே அவர் ஒடுங்கிப் போய்விட்டார். கைலாசம் காவிரிக் கரையிலே சாம்பலாகி அந்த நீருடனே கலந்து மறைந்து போனான்.

''காற்றடித்தது தூசு படிந்தது என்பது போல ஒரு கல்யாணம் நடந்தது. ஒரே வார வாழ்வில் பெண் விதவையாகிவிட்டாள். இனி அவளை வச்சுக்கிட்டு'' அம்மா அடிக்குரலில் புலம்பி அழத்தொடங்கியபோது அண்ணா அவர்களை அதிகமாக அதட்டினார்.

''இப்படி நடக்கணும்னு நான் ஆசைப்பட்டேனா. சம்யுக்தாவின் தலைவிதி அது. சின்ன வயசிலேயே விதவையாகிடணும்னு இருக்கு. இப்ப ஒண்ணும் குடி முழுகிப் போயிடலை. அவள் காலேஜிலே சேர்ந்து படிக்கட்டும்'' என்று இரைந்தார்.

''ஆமாம் சந்திரன். அதுதான் சரின்னு எனக்குப் படறது.'' அப்பா முணுமுணுத்தார்.

''கிராமத்திலே நடந்த சங்கதி இங்கே சென்னையில் உள்ளவங்களுக்குத் தெரிய நியாயமில்லை. அதனால் சம்யுக்தா எப்போதும் போலப் பூவும் பொட்டுமாக வண்ணச் சேலையுடுத்திகிட்டு இருக்கட்டும். கல்லூரியில் குமாரி சம்யுக்தான்னே சேர்த்துடுவோம்.''



''யாராவது தெரிஞ்சவங்க இருந்துட்டா?''

''தலையைச் சீவிவிடமாட்டாங்க. நம்பவீட்டு துக்கம் நம்மோட இருக்கட்டும். ஊர் உலகத்துக்கெல்லாம் தம்பட்டம் அடிக்க வேண்டாம்'' அண்ணா கண்டிப்பாகப் பேசினார்.

காரியங்கள் அனைத்தும் முடிந்ததும் அண்ணா தன் குடும்பத்துடன் சென்னைக்குத் திரும்பிவிட்டார்.

அதற்குப் பின்னர் சம்யுக்தா மிகவும் மாறிப் போனாள். இனி தனக்குத் துணை கல்விதான் என்ற மன உறுதி ஏற்பட்டது. பி.யு.சி முடித்ததும் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தாள், உபகாரச் சம்பளம் கிட்டியது. கல்விமீது மிக்க ஆர்வத்துடன் படித்து, வகுப்பிலேயே முதன்மையாகத் தேறி தங்கப்பதக்கத்தை பரிசாகப் பெற்றாள். பின்னர் மேற்படிப்பை முடித்துக்கொண்டு பலத்த சிபாரிசுகளின் பேரில் பரமசிவத்தின் நர்ஸிங்ஹோமில் அவள் வேலைக்குச் சேர்ந்தாள்.

இதற்கிடையில் மகனது அகால மரணத்தினால் வேதனையே வியாதியாகி அவளது மாமியாரும் சில வருஷங்களில் இறந்து போகவே, இருந்த பந்தமும் அவர்களை விட்டு அகன்று விடவே, அந்த நினைவு மெல்ல மனதின் அடியில் மூழ்கிப் போனது.

படிப்பு - வேலை - இவைகளில் அவள் தனது பேரிழப்பை மறந்து ஒரேயடியாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு விட்டிருந்தாள்.

எப்பொழுதாவது ஞாபகம் வரும். வராது போகாது. அப்பொழுது வேதனையில் துடித்துப்போவாள். ஆனால் தன் துயரத்தை யாரிடமும் பகிர்ந்து கொண்டதில்லை. அவளது வருங்காலம் எப்படி இருக்கும் என்றதொரு

பயம் மட்டும் அவளை சதா உறுத்திக் கொண்டிருந்தது உண்மை.

வேலை மும்முரத்தில் தனது துயரமான கடந்த காலத்தை மறந்து விட்டு, அவள் மருத்துவமனையில் வளைய வந்து கொண்டிருந்த போதுதான், கௌரி அம்மாளைக் காண வந்த அவளது தங்கை மகன் ரங்கராஜனை சந்திக்க நேர்ந்தது. முதல் பார்வையிலேயே அவர்களிருவருக்கும் ஒருவரை ஒருவர் பிடித்துவிட்டது. இப்போது நெருக்கமாகப் பழகியதின் விளைவாக ஒருவரையொருவர் காதலிக்கின்றனர். கல்யாணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவித்தான் ரங்கராஜன். சம்யுக்தா தனது ஒப்புதலையும் கொடுத்துவிட்டிருக்கிறாள்.

படபடவென்று பேசி முடித்த சம்யுக்தா தரையைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தாள்.

சட்டென்று எழுந்து சிவகாமி அவள் அருகே சென்று உட்கார்ந்து கொண்டு அவளது முகத்தை நிமிர்த்தி னாள். கன்னங்களில் கோடிட்டு ஓடிக் கொண்டிருந்த கண்ணீரைத் தன் முந்தானையினால் மெல்ல துடைத்து விட்டாள்.

''இந்தக் கதையை நான் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. இத்தனை புத்திசாலியான பெண் கல்யாணம் என்ற நினைப்பின்றி வேலையிலேயே மூழ்கிப் போயிருக்கிறாயேன்னுதான் நான் உன்னைப் பார்த்த போதெல்லாம் கேலி செய்து கொண்டிருந்தேன். ஒரு வழியில் நானும் குற்றம் செய்திருக்கிறேன். மண வாழ்க்கையைப் பற்றி சிந்திக்காத உன் மனதில் நான் ஆசையைத் தூண்டிவிட்டிருக்கிறேன் இல்லையா?'' என்று பரிவுடன் கேட்டாள்.



''உங்களது ஆலோசனையைக் கேட்கத்தான் நான் இன்னிக்கு இங்கே ஆவலுடன் வந்திருக்கேன். என் உணர்ச்சிப் போராட்டங்களை இப்படி மனம்விட்டு என்னைப் பெத்த தாய்கிட்டக்கூட என்னால் பேச முடியலை'' சம்யுக்தா லேசாக விசும்பினாள்.

சிறிது நேரம் அழுது, இதுவரை இதயத்திற்குள் பூட்டி வைத்திருந்த உணர்ச்சிக் குமுறலைக் கண்ணீர் மூலம் வெளியே சிந்திவிட்டுத் தானே சமாதானம் அடையட்டும் என்று சிவகாமி சில நிமிடங்கள் மௌனமாக ஆனால் தனக்குள்ளே பலத்த சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தாள். சம்யுக்தா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு விசும்பலைத் தானே நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''உண்மையை உங்க கிட்ட சொல்லிவிட்டேன். நீங்கதான் எனக்கு தக்க புத்திமதி சொல்லணும். நான் கல்யாணம் செய்துக்க ஆசைப்படுகிறதும், ரங்கராஜனைக் காதலிப்பதும் பெரும் தவறா?''

''யார் அப்படிச் சொன்னது? இது பாரதியுகம். ஆணுக்குப் பெண் சமம் என்ற ரீதியில் படிக்கவும், வேலை பார்க்கவும், சமூகத்தின் முக்கிய பொறுப்புக் களை ஏற்கவும் நாம் முன் வந்து விட்டோம்.

''மனைவியை இழந்த ஓர் ஆணுக்கு மறுமணம் செய்துக்க எத்தனை உரிமை உண்டோ, அத்தனை உரிமை ஒரு விதவைப் பெண்ணுக்கும் உண்டு. மறுமணமா? என்று கேட்பது பத்தாம் பசலித்தனம். எந்தக் காலத்துக்கும் ஒவ்வாது. அதனால் நீ ரங்கராஜனை விரும்பியதில் தவறு

ஏதுமில்லை. அவனை மணக்க ஒப்புதல் கொடுத்ததிலும் தவறு இல்லை. உன் அண்ணனைப் போல நீயும் குடியும் குடித்தனமுமாக இருக்கத் தகுதியுடைவள்தான்.''

''தாங்க்யூ ஆண்ட்டி. ஆனால் இப்போ நான் என்ன விதமான வழியில் இந்தப் பிரச்சினையை அணுக வேணும் என்பதைப் பற்றி யோசிச்சுச் சொல்லுங்க. எங்க வீட்டில் அம்மாகிட்டே சொன்னால் போதும். ஓவென்று புலம்பி வீட்டைக் கூட்டி அமர்க்களப்படுத்தி விடுவாங்க.''

அவுங்க இன்னமும் கிராமத்துப் பழக்க வழக்கங்களை ஒரேயடியாக ஒதுக்கவில்லை. கிராமத்து மக்கள் ஒன்றும் நம்மைப் போல முட்டாள்கள் இல்லை. ஒரு பெண்ணை அவள் கணவன் சரியாக நடத்தவில்லை. பாதுகாக்கவில்லை என்ற முறையீடு பஞ்சாயத்தின் முன் வைக்கப்பட்டால், ஊரே கூடி நியாயம் பேசி அவன் கட்டிய தாலியை அகற்றிவிட்டு, அவளை வேறு ஒருத்தனுக்கு வாழ்க்கைப்படுத்த முயலுகிறார்கள். அறுத்துக் கட்டிய தாலி என்றதொரு வழக்கம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கேன். இளம் விதவைப் பெண்களுக்கும் சில குடும்பத்தாரிடையே மறுவாழ்வு வழங்கும் பழக்கமும் இருக்கு. அதனால் இது ஒன்றும் அதிசயமான மாபெரும் புரட்சிகரமான சங்கதியல்ல. ஓர் ஆண் மகன் திருமணமாகி மனைவியுடன் சில ஆண்டுகள் வாழ்ந்து, இரண்டு குழந்தைகள் பெற்றுக் கொண்ட பின் மனைவியை இழந்து விட்டால் திருமணம் செய்து கொள்கிறானே, அவனை யாரும் மட்டமாகப் பேசுவதில்லையே? ஒரு சில நாட்கள் மனைவி என்று வாழ்ந்துவிட்டு சின்னஞ்சிறு வயதில் விதவையாகிவிட்ட



ஒரு பெண்ணைப் பற்றி ஏன் இழிவாகப் பேசணும்? ஏதோ ஒதுக்கப்பட்ட, தீண்டத்தகாத பொருள் போல நினைக்கணும்? இந்த மாதிரியான காட்டுமிராண்டித்தனமெல்லாம் படித்தவர்கள் இடையே கூட இருப்பது வெறுக்கத்தக்கது'' மிகவும் ஆவேசமாகப் பேசினாள் சிவகாமி.

''அப்போ நீங்க என் காதலுக்கும் கல்யாணத்திற்கும் ஒப்புதல் கொடுக்கறீங்க.''

''கட்டாயம் ஒத்துக்கிறேன். நியாயம்னு சொல்வேன். ஆனால் ஒண்ணு, உன் கடந்த காலத்து நிகழ்ச்சியை ரங்கராஜனிடம் முதலிலேயே சொல்லி விடுவது நல்லது.''

''சொன்னால்'' சம்யுக்தாவின் நெஞ்சு பயத்தில் இறுகியது.

''உண்மையை யாரும் மறைப்பது தவறு. இன்று சொல்லாமல் கல்யாணம் செய்துகொண்டு விடுகிறாய் என்று வச்சுக்குவோம். உண்மை அவனுக்குத் தெரிஞ்சதும் மன அதிர்ச்சியும் வெறுப்பும் அடையலாம் அல்லவா? உண்மை தெரிஞ்சா பரவாயில்லை... நான் உன்னை உண்மையாகவே உயிருக்கு மேலாகக் காதலிக்கிறேன். நாம் திருமணம் செஞ்சுக்குவோம், கவலைப்படாதேன்னு அவன் புரட்சிக்கரமான உணர்வுடன் முன்வந்தால் கட்டாயம் நீ கொடுத்து வைத்தவள். இருவரும் பல்லாண்டு பல்லாண்டு இனிதே வாழுங்கள் என்று வாழ்த்துவேன்.''

''ஒரு சமயம் அவர் உண்மையைக் கேட்டதும் வெறுப்படைந்து போனால்?''

''ஆரம்பத்திலேயே கல்யாணத்துக்கு முன்னாலேயே அவன் எப்படிப்பட்டவன் என்பதைத் தீர்மானிக்க இந்த உண்மையை நீ அவனிடம் சொல்ல வேண்டும். ஒரு இளம் விதவையைத் துணிவுடன் கல்யாணம் செய்து கொள்ள மனமில்லாதவன் என்றால், இந்தக் காதலை நீயும் மனதிலிருந்து உதறிவிட வேண்டும். அதனால் என்ன? என்று பெருந்தன்மையோடு முன் வந்தால் ஏற்க வேண்டும்.''

''அப்போ நான் நாளை அவரை சந்திக்கும்போது உண்மையைச் சொல்லட்டுமா ஆண்ட்டி.''

''அதற்கு முன்னால் உங்க வீட்டவர்களிடம் உன் தீர்மானத்தைச் சொல்லு. கொஞ்சம் ஆர்ப்பாட்டம் நடக்கும். அச்சப்படாதே. நான் உன்பக்கம். ஏதாவது சிரமமிருந்தால், பண உதவி தேவைப்பட்டால் நான் கடனாகக் கொடுத்து உதவி உங்கள் திருமணத்தை ஜாம் ஜாமுன்னு நடத்தி வைப்பேன்.''

''இத்தனை யோசனை சொல்லும் நீங்க ஏன் மனம் செய்து கொள்ளாமலே இருந்துட்டீங்க?''

''அதுவா? படிப்பின் மேல் இருந்த ஆர்வத்தில் மேலும் பட்டங்கள் பெற துடித்துக் கொண்டு, பதவி ஆசை பிடித்து நான் கல்யாணத்தைப் பற்றி மறந்து விட்டிருந்தேன். கொஞ்சநாள் கழித்து நான் திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டபோது அந்த வயதும், இளமையும் என்னை விட்டு மறைந்துவிட்டிருந்தன.''

''பிறகு?''

''பிறகு என்ன? வேலையை நான் திருமணம் செய்து கொண்டு உண்மை உணர்வுடன் உழைக்கத் தொடங்கினேன். திரும்பிப் பார்ப்பதற்குள் வயோதிகம் என்னை வேகமாக வந்து பற்றிக்கொண்டு விட்டது. 'மிஸ் டு த போட்' என்பார்களே... அது போல கல்யாண காலத்தைத் தவறவிட்டவள் நான். அந்த மாதிரியான தவறை நீ செய்யக்கூடாது என்பதற்காகத்தான் நான் ரங்கராஜனைப் பார்த்தபோது உன் மனதில் கல்யாண ஆசைக்குத் தூபம் போட்டேன்'' சிவகாமி சிரித்தாள்.

பாறாங்கல்லாகக் கனத்த மனதின் சுமை லேசாகிப் போனதொரு உணர்வில் சம்யுக்தா அவளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு சிறிது நேரத்தில் கிளம்பினாள்.



## 5

உள்ளே வந்ததும் வராததுமாக அண்ணா அவளிடம் அந்தக் கேள்வியை அன்று கேட்டார்.

''இன்னிக்கு உனக்கு பகலோடு வேலை முடிஞ்சு போச்சே, வீட்டுக்குவர ஏன் இத்தனை நாழி?''

''ஒரு சிநேகிதியின் வீட்டுக்கு சாப்பிட போயிருந்தேன்.''

''ரொம்ப முக்கியமான சிநேகிதியோ?''

''நீதி மன்றத்துக் கூண்டிலே நிக்க வச்சு குறுக்குக் கேள்வி கேட்கிறாப்பல கேக்கறீங்களே, உங்களுக்கு இன்னிக்கு என்ன வந்துடுச்சு?'' கோபமாக முறைத்தாள் சம்யுக்தா.

''ஒரு விஷயம் கேள்விப்பட்டதாலேதான் இப்படி உன்னைக் குறுக்குக் கேள்வி கேட்கிறேன். ஜீவன்தாஸ்

பிரதர்ஸ் என்கிற நிறுவனத்திலே எனக்கு சிவராமன்னு ஒரு சிநேகிதன் இருக்கான்னு தெரியுமில்லையா?''

''கேள்விப்பட்டிருக்கேன். உங்க சிநேகிதர் அத்தனை பேரையும் எனக்கு தெரிஞ்சிருக்க நியாய மில்லியே?''

''ரொம்ப படிச்ச திமிர் - பட்பட்ன்னு பேசறே. தகப்பனுக்குச் சமமான அண்ணன் என்கிற மரியாதை போச்சு.''

மௌனமாக சம்யுக்தா தன் தமையனை வெறித்தாள்.

''அந்தக் கம்பெனியின் முக்கிய என்ஜினியர் ரங்கராஜன் என்பவனோட காரில் நீ சுத்தறயாமே?''

''அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். ஒருவரை ஒருவர் தெரிஞ்சுக்க சுத்தறோம் தவறா?''

''கல்யாணமா? உனக்கா?''

''ஏன், நான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறது தப்பா? உங்களுக்குத்தான் அந்த வாழ்க்கையின் சகல சுகபோகமும் கொடுத்து வச்ச உரிமையோ?''

''அதிகம் பேசாதே! எனக்குக் கோபம் வருகிறது.''

''அண்ணா! நான் பச்சைக் குழந்தையில்லை. கையை ஓங்கிட்டு என்னை அடிக்க நீங்க வரமுடியாது. எப்பவோ மேஜராகிவிட்ட பெண். என் சம்பாத்தியத் திலே, என் உழைப்பிலே என்னால் தனியா வாழ முடியும். அந்தத் தகுதியிலே என் வாழ்க்கையைப் பத்தி முடி வெடுக்க எனக்கு உரிமையுண்டு.''



''என்ன சொன்னே?'' அண்ணன் ஓங்கிய குரலில் கத்தியதைக் கேட்டு அப்பாவும், அம்மாவும், அண்ணியும் முன்னறைக்குள் ஓடிவந்து குவிந்து விட்டனர். ''என்னப்பா, என்ன நடந்தது?'' அப்பா மெல்லிய குரலில் கேட்டார்.

கண்களில் நீர் பொங்க அம்மா மகனை பரிதாபமாகப் பார்த்தாள்.

சம்யுக்தாவின் நெஞ்சு ஒருவிதக் கலவரத்தில் வேகமாகத் துடித்துக் கொண்டது. சிங்கம் புலிகளை ஒருங்கே சந்தித்து விட்டது போன்ற ஓர் அச்சம் மனதை ஆட்கொண்டது உண்மைதான். ஆனாலும் தலையை நிமிர்த்திக் கொண்டு துணிவை எல்லாம் திரட்டிக் கொண்டு மௌனமாக எல்லோரையும் பார்த்தாள்.

''இரண்டாம் கல்யாணம் பண்ணிக்க உத்தேசிச் சுட்டாளாம். நம்ப குடும்ப கௌரவம் என்ன ஆவது?''

''இதில் குடும்ப கௌரவம் எப்படி வீணாகும்? புரட்சிகரமாக தங்கைக்கு மறுவாழ்வு வாங்கித் தந்தார்னு ஊர் உலகம் மெச்சுக்குவாங்க.''

''ஷட் அப்! ரொம்பவே பேசறே! அந்தப் பயலுக்கு நடந்த கால சங்கதி தெரியுமா? நீ ஒரு விதவைங்கிற விஷயம் தெரிஞ்சுமா கட்டிக்க ஒப்புக் கொண்டிருக்கான்.'' அண்ணன் தொண்டை கிழிய கத்தினார்.

உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை கிடுகிடு வென்று ஒரு நடுக்கத்தில் ஆடிப்போனாள் அவள். ஆனாலும் துணிவை உதறாது சமாளித்தாள்.

''என்னைப் பத்தி சகலமும் சொல்லியிருக்கேன். அவருக்கு மறுப்பு இல்லை. நீங்க ஏன் மறுப்பு சொல்லணும். கால முழுதும் நான் இந்த வீட்டுக்கு

உழைச்சுப் போட்டுக்கிட்டு கொத்தடிமையாக இருக்கணும்னு நினைச்சா ஏமாந்து போவீங்க'' கிரீச் சென்ற குரலில் சம்யுக்தா ஆவேசம் வந்தது போலக் கத்தினாள்.

''எக்கேடு கெட்டு எருக்கு முளைச்சுப் போ. கல்யாணத்துக்கு நான் ஒப்புதல் தரமுடியாது. நீயே செஞ்சுக்க. பிறகு இந்த வீட்டுக்குள்ளே காலை வைக்கக் கூடாது.''

''நானே எல்லாத்தையும், சமாளிச்சுப்பேன். கவலைப்பட வேண்டாம்'' வீராப்பாகப் பேசினாள் தங்கை.

அப்பா மௌனமாக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருந்தார். அம்மா மட்டும் யாரோ செத்து விட்டது போல தேம்பித் தேம்பி அழுதாள். அண்ணனும் அண்ணியும் தங்கள் அறைக்குள் போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டனர்.

அன்று இரவு சம்யுக்தா சாப்பிடாது படுத்துக் கொண்டு விட்டாள்.

அவள் யாரிடமும் பேச முற்படவில்லை.

மறுநாள் மாலை வேளை எப்பொழுது முடியும் என்று அவள் மிகவும் பரபரப்புடன் காத்திருந்தாள்.

வழக்கம் போலக் காருடன் அவள் வரவுக்கு சாலையோரத்தில் ரங்கராஜன் காத்திருந்தான்.

கடற்கரைப் பக்கம் கார் வந்து நிற்கும்வரை இருவரும் பேசவில்லை. சிவந்த மேற்கு வானம் கடல் விளிம்பைத் தொட்டுக் கொண்டிருந்த அந்தி நேரம். குளுமையான கடற்காற்று பூக்காரியின் கூடையிலிருந்த மல்லிகை மணத்தை வாரிக்கொண்டு முகத்தில் மோதியது.



''உங்ககிட்ட முக்கியமான சில விஷயங்களைப் பேச நான் பிரியப்படுகிறேன்'' ஆரம்பித்தாள் சம்யுக்தா.

''முதலில் என் வீட்டில் நம் கல்யாணத்திற்கு பலத்த எதிர்ப்பு இருக்கிறது. என் பெற்றோர்கள், அண்ணன், அண்ணி யாருக்குமே இதில் இஷ்டம் இல்லை.''

''சம்பாதிக்கிற பெண் போய் விடுவாளே என்கிற பயம் போலிருக்கு'' என்று சிரித்தான் ரங்கராஜன்.

''அதுவும் ஒரு காரணம் என்றாலும் - இன்னொரு முக்கிய சங்கதிக்காக அண்ணன் மறுப்புத் தெரிவிச்சுட்டார். ஆனால் நான் ஒரே பிடிவாதமாக அவர் பேச்சை ஒதுக்கிட்டுப் புறப்பட்டு வந்திருக்கேன்.''

''என் வீட்டிலும் என் தாயிடம் இதைப்பற்றி நான் மெல்லப் பேச்சுக் கொடுத்தபோது அவங்க ஒரே கூச்சல் போட்டு தொலைபேசியில் தன் சகோதரியைக் கூப்பிட்டு விட்டாங்க. கௌரியம்மாளைக் தெரியுமில்லையா? அவங்க காரில் உடனடியாக வந்து ஒரு பெரிய கோர்ட்மார்ஷலே நடத்தினாங்க. ஆனால் முடிவில் வெற்றி என்னுடையது'' மெள்ளச் சிரித்தான் மகிழ்ச்சியுடன் ரங்கராஜன்.

''இருங்கோ நான் சொல்லப் போற இரண்டாவது காரணத்தைக் கேட்டுட்டு, உங்க முடிவைச் சொல்லுங்க. உங்ககிட்ட ஏற்கெனவே சொல்லி விட்டதாக நான் என் அண்ணனிடம் சவால் விட்டு விட்டு வந்திருக்கேன்.''

வியப்புடன் அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

அதைச் சொல்வதற்குள் அவள் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. நெற்றியில் பூத்த வியர்வை காதோரம் வழிந்தது. உடம்பிலே லேசானதொரு நடுக்கம் ஏற்பட்டது.

''நான் ஏற்கெனவே பதினேழாவது வயதில் திருமணமானவள் - ஒரே வாரம்தான் கணவனுடன் வாழ்ந்தேன். அவருக்குத் திடீரென்று அப்பெண்டிசைட்டிஸ் வந்து அறுவை சிகிக்சையின்போது இறந்து போய்விட்டார். நான் ஒரு பாலிய விதவை. ரொம்பப் பேருக்கு அது தெரிய நியாயம் இல்லை. இது எங்க கிராமத்தில் நடந்த சங்கதி. பொட்டும் பூவும்... எனது பிறப்புரிமை என்று நான் வச்சுக் கொண்டு வரதாலே யாரும் என் நிலையை உணர்ந்து கொள்ள முடியலை.'' பேசி முடித்துவிட்டுத் திரும்பி அவனைப் பார்த்த சம்யுக்தா திடுக்கிட்டுப் போனாள்.

பேயறைந்து விட்டவன்போல் ரங்கராஜன் முகம் வெளுத்து இப்படிப் பரக்கப் பரக்க விழிக்கிறானே? ஏன்?

எச்சிலை விழுங்கிக்கொண்டு அவனது கரத்தை மெல்லத் தொட்டாள். ''நான் உண்மையைச் சொல்லி விட்டேன். இனி முடிவு எடுக்க வேண்டியது நீங்க தான்.''

பயங்கரக் கனவினின்று விழித்துக் கொண்டவன் போல அவன் தன் தோள்களைக் குலுக்கிக்கொண்டு தன்னை நிதானப்படுத்திக் கொண்டான்.

''இந்தச் சங்கதியை நீ சொன்ன பிறகு... எனக்கு இன்னொரு சிக்கல் ஏற்பட்டுள்ளது.''

''சிக்கலா?''

''ஆமாம். தாயாருக்கு நான் ஒரே மகன். என் பாட்டன் விட்டுப் போன அத்தனை சொத்துக்கும் நான் தான் வாரிசு... என் தாய் இந்த உண்மையைக் கேட்டு ஒப்புதல் தரவேணும். அதனால் நான் இன்னிக்கே



அவங்ககிட்ட இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூற வேண்டி யிருக்கிறது.''

''அவங்க ஒத்துக்கமாட்டாங்கன்னு பயப்படுகி றீங்களா?''

''சம்யுக்தா, அவசரப்படாதே. இனி நாம் நிதான மாகத்தான் செயல்பட முடியும்'' சொல்லியபடி காரை வேகமாக செலுத்தி அவர்கள் வீட்டு வாசலில் அவளை இறக்கிவிட்டு விரைந்து போய் விட்டான்.

அடுத்த நாள் மாலை வேலைக்குப் பின் அவள் அவனை சந்திக்க சாலையோரத்திற்கு வந்து நின்றபோது அவனது காரை அங்கே காணவில்லை.

ஒரு சமயம் அலுவலகத்தில் அதிக வேலை போலும், தாமதமாக வரக்கூடும் என்று எண்ணியபடி அவள் ஒரு மணி நேரத்திற்கு மேல் கால் கடுக்க நின்றாள். அவளது காதலனைக் காணவில்லை.

அதற்கு அடுத்த நாளும் அவன் வரவில்லை. தொடர்ந்து பல நாட்கள் ஆகிப் போயின. அவன் அவளுக் காகக் காத்திருப்பது திடீரென்று நின்று போயிற்று.

சம்யுக்தாவால் இந்த ஏமாற்றத்தைத் தாங்க முடிய வில்லை.

ஒரு நாள் துணிவுடன் அவனது அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் கூப்பிட்டாள்.

''ஹலோ'' என்று மறுமுனையில் ஒலித்த குரல் அவனுடையதுதான்.

''நான் டாக்டர் சம்யுக்தா பேசுகிறேன்.'' என்றவுடன் போனை டக்கென்று வைத்துவிட்டான்.

அதன் அர்த்தம் என்னவாக இருக்கும்? சிவகாமி அம்மாளுக்குப் போன் செய்து கேட்டால்... ரங்கராஜனின்

பாராமுகத்தின் அர்த்தம் ஒரு சமயம் அவர்களுக்குப் புரிந்து விட்டிருக்குமோ...

சிவகாமி அம்மாள் ஊரில் இருக்கவில்லை என்று தெரிய வந்தது. சில நாட்கள் ஓய்வாக இருக்க பெங்களூருக்குப் புறப்பட்டுப் போயிருப்பதாக வேலைக்காரி தகவல் கொடுத்தாள்.

அவர்கள் திரும்பி வரும்வரை... அவள் அந்த வேதனையை, அவமானத்தைத் தன்னந்தனியே சகித்துக் கொள்ள வேணுமே!

அழமுடியாத ஒரு பெரும் துயரம் மனதைக் கலக்க அவள் வீட்டிலே யாரிடமும் எதுவும் பேசாது தன் வேலையைக் கவனித்துக் கொண்டு வந்தாள்.

ஒரு மாத காலம் இந்த மாதிரியானதொரு விபரீத மௌனத்தில் ஓடிப் போனது. அன்று காலை வேலைக்கு வந்தவள் மருத்துவமனைத் தோட்டத்தில் ஒரு பக்கம் அவனது கரும்பச்சை பியட் நிற்பதைக் கண்டு திகைத்துப் போனாள். அவன் தாயிடம் மன்றாடி ஒப்புதல் வாங்க இத்தனை நாள் பிடித்தது போலும். அவளைச் சந்தித்துப் பேச ரங்கராஜன் அங்கு வந்திருக்கிறான். மகிழ்ச்சியில் ஒருகணம் அவள் தன்னை மறந்து போனாள். அவுட்பேஷண்ட் கிளினிக்கிலிருந்து ஒரு குறிப்புத்தாளை எடுக்க உள்ளே நுழைந்தவள் காதுகளில் கணீரென்று பேச்சுக் குரல் கேட்டது.

அவனுடன் - கௌரியம்மாளும் முதுகுப் பக்கம் காட்டிய வண்ணம் ஒரு மேஜைக்குப் பின் டாக்டர் வரவிற்காக அங்கே அமர்ந்திருந்தனர்.

''சம்யுக்தா'' என்று தன் பெயர் அடிபடுவதைக் கேட்டு அவள் திடுக்கிட்டுப் போய்... அருகிலிருந்த ஒரு



திரையைத் தள்ளிக்கொண்டு - பரிசோதனைத் தடுப்பு ஒன்றிற்குள் மறைவாக நின்று விட்டாள்.

''என்னப்பா ரங்கராஜன்! உன் தாயார் கூட முடிவில் சரின்னு ஒப்புதல் தந்துட்டாங்க. உனக்காக அவங்ககிட்ட நான் எத்தனை பாடுபட்டேன் தெரியுமா? இப்போ நீ அந்தப் பெண் வேணாம் வேறு இடம் பார்க்கலாம் என்கிறே. இப்படித்தான் நீ முன்னே அந்த ராதிகாவோட ரொம்ப நெருக்கமா பழகிட்டு, கல்யாணத்துக்கு நாங்கள் எல்லாம் ஒப்புதல் கொடுத்தபிறகு வேண்டாம்னு உதறியிட்டே! உனக்கு வயது ஏறிட்டுப் போகிறதை மறக்காதே... உங்கம்மாவுக்கு உடம்பு முடியலை. வீட்டுக்கு மருமக எப்ப வரப்போறான்னு என்னைப் பாக்கிறப்பவெல்லாம் ஓலமிடுகிறாங்க.''

''அவங்களுக்கு உடம்புக்கு முடியாட்டா இன்னும் ரெண்டு வேலையாட்களை கூட வச்சிக்கிறது. அதுக்காக நான் பிரியப்படாத ஒருத்தியைக் கட்டிக்க முடியுமா?''

''ராதிகாவுக்கு ஏற்கெனவே ஒரு காதலன் இருந்தான்னு கேள்விப்பட்டுட்டு நீ மனசு கசந்துபோய் அவளை உதறிட்டே... இந்தப் பொண்ணு மேலே என்ன குத்தம்?''

''பெரியம்மா உங்களுக்கு என்னை ரொம்பவே நல்லா தெரியும். சிங்கப்பூரிலிருந்து என் சினேகிதன் ஒரு கடிகாரம் எனக்காக வாங்கிட்டு வந்தான். அதை சட்டைப் பையில் வச்சுக் கொண்டான்னு நான் சொல்லியிருந்தேன். ஆனால் அவன் அதைக் கையில் கட்டிக்கொண்டு வந்திருந்தான். கடிகாரம் வேணாம்னு நான் வாங்கிக்க மறுத்துட்டேன். ஒரு சாதாரண ஜடப் பொருள் கை மாறியபோது எனக்குப் பிடிக்கமாகப் போயிட்டது.

அப்படியிருக்க மனைவின்னு எனக்கு வரவ ஏற்கெனவே கைமாறியவளாக இருந்தாக்க...''

''என்னப்பா உளர்ரே? அந்தப் பொண்ணு சம்யுக்தா ரொம்பப் பதவிசானவ... இந்த நர்ஸிங்ஹோமில் நான் இருந்த வரையில் கவனிச்சிருக்கேன். யார் கிட்டேயும் பல்லிளிச்சுட்டு பேசிக்கிட்டு நின்னதையே நான் பார்க்கலையே.''

''அவ ஒரு விதவை... ஒருத்தனோட வாழ்ந்து முடிஞ்சவ... கை மாறிப் போன சரக்கு. எனக்குப் பிடிக்காது... அதனாலே அப்படியே மெள்ள அவளை என் வாழ்க்கையிலிருந்து உதறிவிட்டேன்.''

நெஞ்சை சம்மட்டியால் யாரோ ஓங்கியடித்துப் பிளந்துவிட்டது போன்ற வேதனையில் துடித்துப் போனாள் சம்யுக்தா.

அவள் விதவை என்று தெரிந்ததும் ரங்கராஜனது காதல் கசந்து போய்விட்டது.

அவள் கேட்க நினைத்த கேள்வியை அடுத்ததாக கௌரியம்மாளே சற்று உரத்த குரலில் கேட்டுவிட்டாள்.

''நீ மட்டும் என்ன கைமாறாத கட்டித் தங்கமா? அந்த ராதிகாவோட மகாபலிபுரத்திலே ஒரு ராத்திரி தங்கிவிட்டு வந்தே... எங்களுக்கு தெரியாதா? இன்னும் எத்தனை பெண்ணோட நீ ஊர் சுத்தினியோ? கடவுளுக்குத் தான் வெளிச்சம்...! நீ செய்கிறது ஒழுங்கா? ஒரு பெண் இளவயதிலே விதவையாகிட்டா அது அவள் செய்த மாபெரும் பிசகா?''

''நீங்க பெண் உரிமை சங்கத்திலே சேர்ந்தவங்க... பெண்கள் உரிமைக்காக ரொம்ப கோஷம் போடறவங்க...



உங்களுக்குச் சொன்னால் புரியாது. நான் ஓர் ஆண் மகன்... எத்தனை ஊர் சுத்தினாலும் எங்கே போய் என்ன செய்தாலும் காலைக் கழுவிக் கொண்டு வீட்டுக்குள் நுழைகிற தகுதியை எனக்குச் சமூகம் வழங்கியிருக்கிறது. நான் என்ன வேணாலும் செய்திருக்கலாம். ஆனால் எனக்கு மனைவியா வரவ... எனக்கு மட்டுமே சொந்தமானவளாக இருக்கணும்... இப்படி கைமாறிப் போன சரக்குகளை நான் கட்டோட வெறுக்கிறேன்.''

அடி வயிற்றிலிருந்து பீறிக் கொண்டு வந்த ஆத்திரத்தை விழுங்கிக் கொண்டு... திரையை மெள்ள தள்ளி அதற்கப்பால் தெரிந்த ஓர் அறைக்கதவு வழியாக சம்யுக்தா வராந்தாவை அணுகி... வேகமாக மாடிப் படிகளில் தாவி தன் வார்டை அடைந்து நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அவளது புடவையும் ரவிக்கையும் வியர்வையில் நனைந்து போய்விட்டிருந்தன. யாரோ நெருப்பு வைத்து விட்டது போன்றதொரு ஆவேசம் நெஞ்சிலே கனலாக எரிந்தது.

''எப்படிப்பட்டதொரு கயவனது பிடியிலிருந்து அவள் தப்பித்துக்கொண்டிருக்கிறாள். இதுவும் அந்த அருள்மிகு அகிலாண்டேஸ்வரியின் கருணைதான். பெண்ணை ஒரு போகப்பொருளாக - குழந்தை பெறும் யந்திரமாக மதிக்கும் இந்த ரங்கராஜனைப் போன்ற மனிதனை மணப்பதைவிட ஆயுள் முழுவதும் ஒரு பெண் கன்னியாகவே இருந்து காலம் கடத்தி விடுவது எத்தனை மேல்.''

விதவையானாலும் பரவாயில்லை என்று முதலில் தலையை ஆட்டிவிட்டு, பின்னர் சாகும்வரை அடிக்கடி

அவளது கடந்த காலத்தைக் குத்திக் காட்டி அவளை சித்திரவதை செய்தாலும் செய்வான். நல்லவேளை... அவள் தப்பினாள். தன் உணர்ச்சிப் போராட்டங்களை, உள்ளக் குமுறலை, ஆத்திரத்தை அடக்கிக்கொள்ள அவளுக்கு வெகு நேரம் பிடித்தது.

ரங்கராஜனது உண்மை உருவத்தை எதிர்பாராத விதமாக அறிந்து கொள்ள ஏற்பட்ட அந்தச் சந்தர்ப்பம் அவளுக்குப் பெருத்த அதிர்ச்சியையும் தந்துவிட்டிருந்தது.

எத்தனை ஆழமாக அவள் அவனை நேசித்தாள்.

பெண் சிரித்தால் போச்சு... புகையிலை விரித்தால் போச்சு என்ற மனப்பான்மை உலக முழுவதும் சுற்றி... அனுபவத்திலும் கல்வியிலும் தேர்ந்து விட்டிருந்த அவனைப் போன்ற படித்தவனைக்கூட விடவில்லை என்றால், நம் சமூக அமைப்பிலே... விரைவாக மாற்றங்கள் ஏற்படுவது எப்போது? அவளைப் போல பேரிழப்புக்கு ஆளான அபலைப் பெண்களுக்குத் திருமணம் - மறுவாழ்வு - ஆணும் பெண்ணும் எல்லா பதவிகளிலும் சரி நிகரானவர்கள் என்றெல்லாம் வாய் கிழிய மேடையில் பேசுவதுடன் சரி... எங்கேயோ அபூர்வமாக ஒரு கண்ணியவான் அவளைப் போன்ற ஒரு பெண்ணைத் தன் மனைவியாக்கிக் கொண்டு அவளுக்கு வாழ்வு தர வருகிறான். மற்றப்படி சராசரி மனிதன்... தனக்குக் கிடைக்கப் போகும் மனைவி... கை மாறியவளாக இல்லாது... தனக்கே சொந்தமானவளாக இருக்க வேண்டும் என்று... நேர்மைக்குத் தன் வரை புது இலக்கணம் வகுத்துக் கொள்கிறான்... சே! இவைகளைப் பற்றி அவள் அதிகம் தெரிந்து கொண்டிருந்தும் - விஞ்ஞான அறிவுடையவளாக இருந்தும்... இளமையின் கோளாறினால், பால் உணர்வின் உந்துதலால் அறிவு



கெட்டுப் போய்... ரங்கராஜனைப் போன்றதொரு கசடனை - அயோக்கியனைப் போய் காதலித்தாளே... வேண்டும் அவளுக்கு இந்த அவமானம்!

தன்னையே பலமுறை அவள் சாடிக்கொண்டாள். வெளியூருக்குப் போயிருந்த சிவகாமி அம்மாளிடம் சொல்லி அழுது ஆறுதல் பெறத் துடியாகத் துடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

## 6

அன்று காலை... ஆஸ்பத்திரியின் எதிர்சாலையிலிருந்த மருந்துக்கடை தொலைபேசி மூலம் அவள் சிவகாமி அம்மாளைக் கூப்பிட்டாள்.

''நேற்றுதான் வந்தேன்... உன்னைக் கூப்பிட முயன்றேன். உங்கள் ஆஸ்பத்திரி போன் ரொம்ப இடக்குப் பண்ணியது... இன்று முயன்று பார்க்கலாம்னு நினைச்சப்போ நீயே கூப்பிட்டுட்டே... வீட்டுக்கு வர ஆவலாக இருக்கா? என் வீடு எப்போதும் உனக்கு'' திறந்து இருக்கிறதே... வா. கேட்கத் தேவையில்லையே...''

''சாயங்காலம் நேரே பஸ் பிடித்து வந்துவிடு. காப்பி, டிபன் சாப்பிட்டு விட்டு... பலவும் பேசி முடித்த பிறகு பத்திரமாக உன்னை நான் பஸ் ஏற்றி அனுப்பறேன். சரி தானே'' சிவகாமியின் பாசம் மிகுந்த குரலைக் கேட்ட போதே அவளது கண்கள் கலங்கிப் போயின.

வீட்டுக்குள் நுழைந்தவளை ஏற இறங்க வியப்புடன் பார்த்தாள் சிவகாமி. அவளைக் கடைசி

யாகப் பார்த்துப் பேசியபின் அவள் பங்களூருக்குப் போய்விட்டு பத்துத் தினங்களில் திரும்பி விட்டிருந்தாள். இந்த சில தினங்களில் இந்தப் பெண் இப்படி சிதைந்து, கருத்து, முகம் வாடி... ரொம்பவே மாறி விட்டிருக் கிறாளே?

''உட்கார் சம்யுக்தா. நீ எனக்கு அதிகம் சொல்ல வேண்டாம். உன் முகமும் கண்களும் எல்லாக் கதையையும் சொல்கின்றன'' என்றாள்.

முகத்தை தன் இரு கைகளாலும் மூடிக்கொண்டு திடீரென்று குமுறிக் குமுறி சம்யுக்தா அழத் தொடங்கினாள்.

பரிவுடன் ஓடி வந்து அவள் அருகில் வந்து உட்கார்ந்து கொண்ட சிவகாமி அன்புடன் அவள் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்தாள்.

''ரங்கராஜனிடம் நீ உண்மையைச் சொன்னதும் அவனது உருவம் உனக்கு வெளிப்பட்டுவிட்டது நல்லதாயிற்று. நீ ஒரு பால்ய விதவை என்பதை அறிந்தவுடனேயே அவனது காதல் தவிடுபொடியாகி விட்டது இல்லையா? இப்படிப்பட்டதொரு மனிதனை நீ மணக்காது அவனது பிடியில் சிக்காது தப்பித்துக் கொண்டது உன்வரை ஒரு நல்ல சங்கதி என்று நினைத்துக்கொள்.

''முதலில் தியாகம் செய்கிறவர்கள் போல முன் வந்து பின்னர் வாழ்நாள் முழுவதும் நீ ஒரு பால்ய விதவை... என் தயவால் மறுவாழ்வு அடைந்தாய் என்று... முகத்திலடித்தாற்போலப் பேசி... குத்திக் குத்தி சித்திரவதை செய்வதைக் காட்டிலும் இப்பொழுதே டக்கென்று



ஒதுங்கிக் கொண்டு விட்டிக்கிறான் இல்லையா? அதுவரை அவன் ஒரு நல்ல மனிதன்.''

அழுகையை நிறுத்தி முகத்தைத் துடைத்துக் கொண்டாள் சம்யுக்தா - ''இதெல்லாம் நடந்தது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''உன் திட்டத்தை உன் பெற்றோர்களிடம் சொல்லி முதலில் அவர்களது மனப் போராட்டத்தைத் தெரிந்து கொள்ளச் சொன்னேன். சம்பாதிக்கும் பெண் கைவசம் இருந்தால் பெற்றோர்களும் உறவினர்களும் ரொம்பவும் சுயநலக்காரர்களாகி விடுகிறார்கள்.

''உன் வீட்டிலும் பெரிய எதிர்ப்பு இருக்கும் என்று எதிர்பார்த்தேன். சரிதானே; அது முதல் கட்டம்... அடுத்தபடியாக நீ உண்மையை அவனிடம் சொல்லிவிட வேண்டும் என்ற நான் வற்புறுத்தியதற்கும் ஒரு நோக்கம் இருந்தது. கிராப்பை அழகாக சீவிவிட்டுக் கொண்டு... கச்சிதமாக உடுத்திக் கொண்டு காரில் வந்து ஆங்கிலத்தைக் கடித்துத் துப்புகிற எல்லாருமே பெரிய ஜென்ட்டில் மேனாகிவிட மாட்டார்கள்.

''கண்ணியமான மனிதன் என்பவன் கல்லூரிப் பட்டங்கள் பெற்றவனாக இருக்கத் தேவையில்லை.''

''மாட்டு வண்டி ஓட்டும் சாதாரண தொழிலாளி யாகக் கூட இருக்கலாம். படிப்புக்கும் - பட்டங்களுக்கும் அப்பாற்பட்டது பண்பு என்னும் நற்குணம். விட்டுத் தள்ளு. இந்த ரங்கராஜ் கந்தல் துணியைக் கழற்றி எறிவது போல உன் காதலை வேண்டாம் என்று ஒதுக்கி விட்டான் இல்லையா?'' சிவகாமி கோபத்துடன் கேட்டாள்.

நடந்ததையெல்லாம் விவரமாக சம்யுக்தா சொன்ன போது அந்தம்மாளின் கோபம் பன்மடங்கா கியது.

''சே! அவன் ஒரு மனிதன்தானா? நீயும் அவன் நினைவை உன் மனதிலிருந்து ஒதுக்கித் தள்ளிவிடு... உன் அன்புக்கு அவன் சிறிதும் தகுதியில்லாதவன். முதலிலேயே அவன் சாயம் வெளுத்துப் போனது நல்லதாகப் போச்சு. இல்லாவிட்டால் கல்யாணம் என்கிற பெரிய விலங்கில் நீ சிக்கிக் கொண்டு தவிச்சிருப்பே. நீ இந்த விபத்திலிருந்து தப்பியதைக் குறித்து சந்தோஷப்படு.''

''என் வருங்காலத்தைப் பற்றித்தான் எனக்குப் பெரும் கவலையா இருக்கு ஆண்ட்டி?''

''நான் சமீபத்தில் பெங்களூருக்குப் போயிருந்தேன் அல்லவா... ஒரு முக்கிய காரியமாகத்தான் போயிருந்தேன். அங்கே தன் மகன் வீட்டில் ஓய்வாகத் தங்கப் போயிருந்த என் குடும்ப வக்கீலிடம் விஷயங்கள் பேச வேண்டியிருந்தது. போயிருந்தேன். முதல் தடவை எனக்கு மாரடைப்பு வந்தபோதே என் வக்கீலைக் கலந்து நான் ஆலோசித்து என் பெயரில் ஒரு டிரஸ்ட் ஏற்பாடு செய்து விட்டிருந்தேன். என் வீடு - என் சொத்து... என் நகைகளை விற்ற பணம் எல்லாம் அந்த டிரஸ்ட்டின் பாதுகாப்பில் இருக்கின்றன. இந்த வீட்டுக்கும் இதில் உள்ள பொருள்களுக்கும் ஒரு நல்ல விலை வந்திருப்பதாக வக்கீல் சொன்னார். விற்றுவிட ஆலோசனை கூறிவிட்டு வந்திருக்கிறேன். இன்னும் சில தினங்களில் வக்கீல் எனக்காக வாடகைக்கு ஏற்பாடு செய்துள்ள ஒரு சிறு வீட்டில் குடியேறப் போறேன்.''



''என் ஆண்ட்டி இப்படியெல்லாம் செய்திருக்கீங்க?''

''அவசரப்படாம கேள். உன்னைச் சந்தித்து உன்னோடு பழகுமுன்னே நான் எடுத்துக் கொண்ட தீர்மானம். சில ஆண்டுகளுக்கு முன் எனக்கு லேசாக ஒரு தடவை மாரடைப்பு வந்தது. அப்பொழுது என் வக்கீல் எனக்குச் சொல்லிய யோசனை இது. சில மாதங்களுக்கு முன்னர் தான் இந்த டிரஸ்ட் உருவாகியது. இந்த வீட்டில் நான் சுதந்தரமாக இருக்க அனுமதிக்கப்பட்டிருந்தேன். அந்தச் சமயம் இரண்டாவது முறையாக மாரடைப்பு வந்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். எனக்கு நீண்டகாலமாக ஓர் ஆசை. எனக்குப் பின் எனது சொத்துக்கள் ஒரு நல்ல காரியத்துக்கு உபயோகமாக இருக்கவேண்டும் என்ற விருப்பம். சிவகாமி டிரஸ்டு என்பதற்கு இந்த வீடு - என் நகை... பங்களூரிலிருந்த ஒரு கட்டிடம்... என் வங்கியிலிருந்த சேமிப்பு எல்லாவற்றையும் கொடுத்து விட்டேன். ஒரு சிறு தொகையை மட்டும் என் காலத்துக்கு ஒதுக்கிக் கொண்டிருக்கிறேன். இந்த டிரஸ்ட், வீட்டை விற்று கணிசமான ஒரு தொகையை எடுக்கப் போகிறார்கள். அந்தத் தொகையைக் கொண்டு திருவான்மியூர் நெடுஞ்சாலையில் ஏழை எளியவர்களின் உபயோகத்திற்காக ஒரு சிறு மருத்துவ மனையைப் புதிதாக விரைவில் கட்டப் போகிறார்கள்.''

''ரொம்ப நல்ல காரியம்தான் செய்யப் போகிறீர்கள் ஆண்ட்டி.''

''நீ நம்பினாலும் சரி. இல்லாவிட்டாலும் சரி. உன்னை நர்சிங் ஹோமில் சந்தித்த அன்றே என் மனதில் இன்னொரு எண்ணமும் உதயமாகியது. இந்தப் புதிய

மருத்துவமனையில் - என்னை நன்றாகப் பரிபாலித்த உனக்கு - அதன் தலைவி பதவியைப் போட்டு, நல்ல சம்பளம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டேன். வக்கீலும் டிரஸ்டின் நிபந்தனைகளுக்குட்பட்ட விஷயமாக இருந்ததால் ஒத்துக்கொண்டு விட்டிருக் கிறார்.''

''ஆண்ட்டி! என்ன சொல்னீங்க. எனக்கு ஒரே பிரமிப்பா இருக்கே.''

''உனக்கு வருங்காலம் இல்லைனு ஏன் பயப்படறே? எங்களது டிரஸ்ட்டின் மருத்துவமனை தயாரானதும் ஒரு பெரியவர் உதவியால் திறப்பு விழா நடத்தும்போது உன்னை அதன் தலைவியாக அமர்த்தியிருப்பதை எல்லோரும் தெரிஞ்சுக்குவாங்க... ஆமாம்! உன் விருப்பத்தைக் கேட்கலையே! எங்கள் டிரஸ்டின் ஆஸ்பத்திரியில் நீ சேர்ந்து பணி செய்ய ஒப்புக்குவியா?''

''ஆண்டி எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியவில்லே.''

''அதன் தலைவியாக வேலையேற்று சுற்றிலும் உள்ள அடிமட்டத்து மக்களுக்கு வைத்திய உதவி செய்து கொண்டு, ஒரு சமூக சேவகியாக வாழ்கிறேன்னு பளிச்சுனு சொல் போதும்.''

''செய்கிறேன் ஆண்ட்டி. எனக்கேற்பட்ட ஏமாற்றத்தை சேவை செய்யும் ஓர் உற்சாகத்திலே மறக்க முயலுகிறேன்.''

''மக்களுக்குச் செய்யும் சேவை மகேசனுக்கு செய்யும் சேவை என்பார்கள். கவலைப்படாதே சம்யுக்தா, கொஞ்ச காலத்தில் உனக்கு மறுபடி திருமணம் நடந்து விடும்.''



திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள் சம்யுக்தா...

''உலகில் பிறந்த எல்லா பெண்களும் ஒரு ஆண்மகனைத் திருமணம் செய்துகொண்டு... பிள்ளைகள் பெறும் யந்திரமாக வாழவேண்டும் என்கிற நியதி ஏதும் இல்லையே... ஒரு சில பெண்கள்... தாங்கள் செய்யும் தொழிலுக்குத் தங்களை அர்ப்பணம் செய்து கொண்டு... தங்களது உழைப்பால் பலரை வாழ வைக்கலாமே? அப்படிப்பட்ட பெண்கள் தங்கள் தொழிலையே திருமணம் செய்து கொண்டவர்கள்... நீயும் அப்படி விரைவில் எங்கள் மருத்துவமனையின் தலைவியாகி, உன் பேச்சு - மூச்சு - வாழ்வின் ஒவ்வொரு நிமிஷமும் உன் தொழிலுக்கும் - நோயாளிகளுக்கும் என்ற நினைவில் வாழப் போகிறாய். ஒரு வகையில் உன் தொழிலை நீ திருமணம் செய்து கொள்ளப் போகிறாய்.''

கண்கள் பணிக்க... கனிவுடன் சிவகாமியைப் பார்த்த சம்யுக்தா சட்டென்று அவளை நெருங்கி அவளை ஆரத்தழுவிக் கொண்டாள்.

''நன்றி ஆண்ட்டி. அந்த நன்னாளை எதிர் நோக்கிக் கொண்டு காத்திருப்பேன்'' என்று கூறிவிட்டு அவள் அளித்த காப்பி, டிபனைச் சாப்பிட்டுவிட்டு பஸ் நிலையத்தில் அவளுடன் ஜோடியாக நடந்து பஸ்ஸை பிடித்து ஏறி உட்கார்ந்தபோது... அவள் மனம் மிகவும் லேசாகி விட்டிருந்தது. அதில், சமீபத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியின் பாதிப்பு ஒரு துளியும் இருக்கவில்லை. அதற்குப் பதில் புதியதொரு திருப்பம் தன்வாழ்வில் அமையப் போகிறது என்கிற மகிழ்ச்சியில் - உற்சாகத்தில் மனம் பொங்கிப் பூரித்தது. அதற்குப் பின்னர் அவள் வேலைக்குப் போவதும் வீடு திரும்புவதுமாக நாட்களை

ஒட்டிக் கொண்டிருந்தாள். அவள் வீட்டில் யாரிடமும் அதிகம் பேசுவதை நிறுத்திக் கொண்டிருந்தாள்.

மகளிடம் காணப்பட்ட மௌனம் அம்மாவுக்கு சங்கடமாகத்தானிருந்தது. ஆனால் அவள் மறுபடி கல்யாணப் பேச்சை துவங்காதிருந்ததைப் பற்றி ஓரளவு உள்ளூர திருப்தியடைந்துவிட்டிருந்தாள்.

## 7

இரண்டு மாதங்கள் ஓடிச் சென்றன. அன்று காலை வந்த பத்திரிகையைப் புரட்டிக் கொண்டபடி பல் துலக்கிக் கொண்டு நின்ற அண்ணன் சந்திரன் 'சம்யுக்தா!' என்று கூவிவிட்டு, வாயை சீக்கிரம் கொப்பளித்துவிட்டு வந்து 'இதைப் பார்த்தியா?' என்று நீட்டிய பத்திரிகையை அசட்டையோடு வாங்கிக் கொண்டாள்.

''நான் அப்பவே நினைச்சேன். இத்தனை பெரிய பிள்ளை நம் வீட்டில் நடந்த அந்தச் சங்கதி தெரிஞ்சும் நம் வீட்டுப் பெண்ணை வரதட்சிணை - சீர் எதுவும் இல்லாமல் கட்டிக்க ஒப்புக் கொள்வானா? இது நடக்கிற சங்கதியான்னு சந்தேகப்பட்டேன் - அது சரியாப் போச்சு'' அண்ணனின் வார்த்தைகளில் அலாதியான கடுமை தொனித்தது. முகத்திலே விஷமமானதொரு புன்னகை படர்ந்திருந்தது.

''என்ன சொல்றீங்க?'' அண்ணி நர்மதா ஆவலுடன் காப்பி பலகாரத் தட்டுடன் உள்ளேயிருந்து வந்தாள்.

தன் முன் நீட்டப்பட்ட பத்திரிகையைப் பட்டும் படாமலும் பார்த்தாள். 'பிரபல ஜீவன்தாஸ் பிரதர்ஸ்



நிறுவனத்தின் தலைமை என்ஜினியர் திரு. ரங்கராஜன் அவர்களுக்கு கந்தசாமி பிளாஸ்டிக் வொர்க்ஸின் தலைவர் திரு. கந்தசாமியின் மகள்' அதற்கு மேல் படிக்காது பத்திரிகையை மேஜைமீது வைத்தாள் சம்யுக்தா.

கழுத்தில் மாலையுடன், தன் மனைவியுடன் தென்பட்ட ரங்கராஜனது படத்தையோ, அருகில் மாலையுடன் மகிழ்ச்சி பொங்க புகைப்படத்தில் தெரிந்த அவன் மனைவியையோ பார்க்கவோ விவரம் தெரிந்து கொள்ளவோ அவள் விரும்பவில்லை.

வேண்டுமென்றே அண்ணன் அவள் ஏமாற்றப் பட்டதை சுட்டிக்காட்டி ஏளனம் செய்ததையும் அவளால் ஏற்க முடியவில்லை.

''பேப்பரில் என்ன விஷயம்... கொஞ்சம் சொல்லிவிட்டுதான் சிரியுங்களேன்'' நர்மதா காப்பி, பலகாரத்தட்டுகளை மேஜைமீது பரப்பினாள்.

''கொஞ்ச நாளைக்கு முன்னாடி நம்ப சம்யுக்தா வீட்டிலே வந்து குழப்பம் செய்தாளே ஞாபகம் இருக்கா?''

''ஜீவன்தாஸ் நிறுவனத்தில் வேலை பார்க்கிற என்ஜினியர் ரங்கராஜனைத் தான் கட்டிக்கப் போகிறதாக சொன்னாளே! அந்த இன்ஜினியர் சம்யுக்தாவுக்கு டாட்டா காட்டிவிட்டு பிரபல தொழிலதிபர் மகளைக் கட்டிக் கொண்டிருக்கிறான். கல்யாணம் நேத்து நடந்ததாம். அதற்கு ஊரில் உள்ள பிரமுகர்கள் எல்லாம் வந்திருந்தாங்களாம்.''

கோபத்திலே முகம் அனலாகப் பற்றி எரிய சம்யுக்தா உள்ளே சென்று விட்டாள்.

அவள் வாழ்க்கையில் மறுபடியும் ஏமாற்றப் பட்டாள் என்பதைப் பற்றி இந்த அண்ணனுக்குத்தான் இப்படி ஒரு மகிழ்ச்சியா? சே! இதே துயரம் இவர் பெற்ற மகளுக்கு ஏற்பட்டிருந்தால்? அண்ணன் - தங்கை, அவர்களிடையே பிரிக்க முடியாத பாசம் இதெல்லாம் சினிமாவுடன் - சரி... வாழ்க்கையில் இவர்கள் எல்லாம் சுயநலத்தின் உருவங்கள் என்று உள்ளூர வெகுண்டவளாக காப்பி, பலகாரத்தை விரைவில் முடித்துக்கொண்டு - வேலைக்குக் கிளம்பிவிட்டாள்.

இன்னும் சில மாதங்கள் சென்றன. சிவகாமி டிரஸ்ட் கட்ட ஆரம்பித்த ஆஸ்பத்திரி முடிவடைந்து போனது. தேவைப்பட்ட சாமான்களைப் போட்டு ஆட் படைகளையும் சேகரித்து விட்டனர் டிரஸ்ட்டின் நிர்வாகிகள். திறப்பு விழாவன்றே வந்து வேலையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று தனக்கு வந்த கடிதத்தைக் கண்டதும் சம்யுக்தா மகிழ்ச்சியில் திளைத்துப் போனாள்.

மூன்று வருஷ முடிவிற்குப் பின்தான் டாக்டர் பரமசிவம் தமது மருத்துவமனை வைத்தியர்களை நிரந்தர வைத்தியராக ஆக்கி சம்பளத்தைக் கூடுதல் செய்வது வழக்கம். அதற்கு முன்னர் விலக விரும்பிய வைத்தியர்கள் ஒரு வார கால முன்னறிக்கை தந்தால் போதும் என்ற விதிமுறையை அனுசரித்தார்.

ஒரு வார காலத்திற்கு முன்னதாகவே அவள் தன் வேலையை ராஜினாமா செய்துவிடப் போவதாக அறிக்கை கொடுத்துவிட்டாள். தனக்குச் சேரவேண்டிய ஓய்வு நாட்களாக சிலவற்றை அந்தக் கடைசி வாரத்தில் தனக்களிக்கப்பட செய்ய வேண்டுமென்று கோரி



வேலைக்குப் போகாது வீட்டிலேயே தங்கிக் கொண்டாள்.

விடிந்ததும் விடியாததுமாக அவசரப்படும் தங்கை பத்திரிகையைப் புரட்டிக்கொண்டு நிதானமாக உட்கார்ந் திருப்பதைக் கண்டு அண்ணன் சந்திரன் அசந்து போனார்.

''வேலைக்கு இன்னிக்கு லீவா? மணியாகலையா? குளிக்காம கொள்ளாம உட்கார்ந்திருக்கியே!'' அதட்ட லுடன் கேட்டபோது, சடக்கென்று நிமிர்ந்தாள் சம்யுக்தா.

இனியும் இவள் அண்ணனது அதிகாரத்தைத் தாங்கிக் கொண்டு மௌனமாக இருப்பதில் பயன் இல்லை. மேற்கொண்டு அவள் எடுத்திருக்கும் முடிவைச் சொல்லிவிட வேண்டும் என்ற எரிச்சலுடன் பேசினாள்.

''நான் வேலையை ராஜினாமா செய்து விட்டேன். அதனால் நிம்மதியா இருக்கேன்.''

திடுக்கிட்டுப் போனார் அண்ணா! அம்மாவும், அப்பாவும், அண்ணியும் திகைத்துப் போய் அங்கே வந்தனர். இந்தப் பெண் இப்படி ஏதாவது ஒரு வெடி குண்டை தூக்கி போட்டுக் கொண்டே இருக்காளே, என்ன செய்வோம்?'' கைகளைப் பிசைந்து கொண்டு அம்மா சுவர் ஓரமாக நின்றாள்.

'தோளுக்கு மிஞ்சி வளர்ந்துவிட்ட பெண் - அவளை அதிகாரம் செய்து அடக்கி ஆள என்ன உரிமை இருக்கு' என்று எண்ணிய அப்பா... தமது மூக்கின் மேல் நழுவிய மூக்குக் கண்ணாடியை சரி செய்தபடி விழித்தார்.

''யாரைக் கேட்டுக் கொண்டு ராஜினாமா செய்தியாம். வீட்டிலே சும்மா வந்து உட்கார்ந்து கொண்டு வெட்டிப் பொழுதைப் போக்கவா உன்னை இவ்வளவு தூரம் படிக்க வச்சார் அண்ணா.''

''என் வாழ்க்கையைப் பாழாக்கி... சின்ன வயதிலேயே விதவை என்கிற பட்டத்தை வாங்கித் தந்துவிட்டோமே என்ற பரிதாபத்தில் அப்பாவும் நீங்களும் என்னைப் படிக்க வச்சீங்க... நீங்க செலவழிச்ச பணத்துக்கு ஈடான தொகையை இந்த இரண்டு வருஷ சம்பாத்தியத்திலே ஓரளவு நான் திருப்பிக் கொடுத்திட்டேன். பாக்கி ஏதாவது உண்டுன்னு சொல்லுங்க, என் நகைகளை வித்து அந்தக் கடனை அடைச்சுடறேன்.''

''ரொம்பவே நீ வாயாடறே! வேலையை விட்டுட்டு வெட்டியா இங்கே வந்து உட்கார்ந்து கொண்டதுமில்லாம ரொம்ப பெரிய பேச்செல்லாம் பேசறியா?''

''நான் இங்கே வெட்டியா உங்களுக்குப் பாரமா இருக்கப் போவதில்லை. இன்னும் நாலு நாளில் என் பொட்டி சாமான்களுடன் என் பெற்றோரைத் துணையாக அழைச்சுக்கிட்டு வெளியே போயிடப் போறேன்.''

''என்ன சொல்றே?''

''வேற ஒரு வேலை எனக்குக் கிடைச்சிருக்கு - அந்த ஆஸ்பத்திரியில் எனக்குத் தங்க சிறு வீடு கொடுத்து உதவப் போறாங்க. அப்பாவும் அம்மாவும் இனி ஏன் உங்களுக்குப் பாரமா இருக்கனும்? என்னோட அழைச்சிக்கிட்டு போகப் போறேன்.''

''என்னை விட்டு அவங்க வரமாட்டேன்னு சொன்னா?''

நீங்களே கேட்டுப் பாருங்க. ஒரு விதவைப் பெண்ணுக்குப் பாதுகாப்பா கூட வந்து பெற்றோர்கள் தங்குவது நியாயந்தானே! இல்லேன்னு சொல்லட்டும்.''



''சந்திரன்! கோபிக்காதேயப்பா. அவ பேச்சிலும் நியாயம் இருக்கு... அவளுக்குத் துணையா நான் கூடப் போகப் போகிறேன். அறியாத வயசிலே அவசரப்பட்டு அவளுக்கு ஒரு தீங்கு செய்துட்டோம். அதுக்கு ஈடா இப்போ அவகூட துணையாக இருக்கப் போவதுதான் நியாயம். உன் அப்பா என்ன செய்வாரோ தெரியாது. நான் பெத்தவ; என் பெண்ணோட அவ போற இடத்துக்குக் கிளம்பத் தயார்.''

திடீரென்று ஆவேசம் வந்தவள் போலப் பேசிவிட்டு அம்மா அழுகையில் குலுங்கினாள்.

''என்னத்துக்கு அழறே. சம்யுக்தாவுக்கு நீ துணை போனா எனக்கு மட்டும் இங்கே என்ன வேலை? கடைசிக் காலத்திலே உன் பக்கத்திலே வாழ வேண்டியது என் கடமை. நானும் வந்திடுவேன் - கவலைப்படாதே'' அப்பா மனைவியை சமாதானம் செய்தார்.

''போங்கோ! எல்லாரும் புறப்பட்டு ஒழிஞ்சு போங்கோ'' அண்ணா கோபத்துடன் கத்திவிட்டு தன் அறைக்குள் சென்று கதவை ஓங்கி அறைந்து சாத்திக் கொண்டார். அண்ணி நர்மதாவின் முகத்திலே நிம்மதி தெரிந்தது. போகட்டும். குழந்தையும் தன் வீடுமாக அவள் இனியாவது நிம்மதியாக இருக்கலாமே என்ற திருப்தி அவளுக்கு.

அந்த வாரத்தின் இறுதியில் அவள் தன் பெற்றோர்களுடன், சிவகாமி டிரஸ்ட் ஆரம்பித்த சிவகாமி மருத்துவமனையில் டாக்டர் தங்க கட்டப்பட்டிருந்த சிறு வீட்டுக்குள் குடியேறி விட்டாள்.

மருத்துவமனை திறப்பு விழா விமரிசையாக நடந்தது. அவள் அந்த மருத்துவமனையின் தலைவியாக

நியமிக்கப்பட்டிருப்பதைச் சொல்லி தமது பாராட்டுதலைத் தெரித்து வாழ்த்துக் கூறினார் விழாவிற்குத் தலைமை வகித்த பிரமுகர்.

இத்தனை நாளும் அனுபவிக்காத ஓர் அமைதி இப்போது அவள் மனதில் நிறைந்து போனது.

அவளுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை அவள் மகிழ்ச்சியுடன் ஏற்று தன் வேலையை செவ்வனே செய்து வந்தாள்.

அண்ணி நர்மதாவின் அதிகாரத்திற்குப் பயந்து அம்மா அடுப்படியிலேயே பொழுது மட்டும் கிடந்தது போலில்லாது மகளின் வீட்டில் பூரண சுதந்திரத்துடன் வளைய வந்தாள்.

அப்பாவுக்கும் நிறைய வேலைகள் இருந்தன. அவர் மனதிற்குப் பிடித்தமான வேலை... வீட்டைச் சுற்றியிருந்த வெத்து பூமியில் அவர் தமது தோட்டக்கலையைத் துவக்கி விட்டார். அவர்கள் குடியேறிய சில மாதங்களில் வீட்டைச் சுற்றி மெல்ல ஒரு சிறிய தோட்டம் உருவாகிக் கொண்டிருந்தது.

அம்மாவின் பூஜைக்கு வேண்டிய துளசியும் செம்பருத்திப் பூவும் நிறைய கிடைத்தன. கைச் செலவுக்குப் பணம் இல்லையே என்ற கவலையின்றி அம்மா எல்லோருக்கும் பிடித்த வகையில் சமைத்துப் போட்டு வீட்டை மிகவும் மகிழ்ச்சியுடன் நிர்வகித்தாள்.

தோட்டவேலை போக மீதிப் பொழுதில் அப்பா தமக்குப் பிடித்தமான ஆசிரியர்களின் புத்தகங்களை யெல்லாம் அருகிலிருந்த நூல் நிலையத்தினின்று எடுத்து வந்து வாயில் வராந்தாவில் சாய்வு நாற்காலியில்



உட்கார்ந்தபடி நிம்மதியாகப் படித்து மகிழ்ந்தார். அந்தப் பொழுதில் மனைவியும் கணவனும் ஒய்வாகக் கடற்கரை ஓரம் உலாவச் சென்று வந்தனர்.

அப்பாடா! எத்தனை நிம்மதியான வாழ்க்கை! என்று எண்ணிய பெற்றோர்களின் மனம் - அதை அமைத்துக் கொடுத்த பெண்ணை சதா வாழ்த்திக் கொண்டிருந்தது. நாட்கள் நகர்ந்தன. வேலை - வீடு என்று நாளை வேகமாக ஓட்டிவிட்டதை சம்யுக்தா அன்று காலைதான் உணர்ந்தாள்.

சிவகாமி மருத்துவமனை ஆரம்பித்து ஓராண்டு காலம் ஆகிவிட்டது. அதனுடைய முதல் ஆண்டு விழாவைக் கொண்டாட டிரஸ்ட் நிர்வாகிகள் ஏற்பாடு களைச் செய்து கொண்டிருந்தனர். ஒரு வருஷ காலத்தில் எத்தனை நோயாளிகள் அங்கே கவனிக்கப்பட்டனர். எத்தனை பெண்கள் பிரசவத்திற்கு அனுமதிக்கப்பட்டனர் குடும்பநல திட்டம் பற்றி அவர்கள் செய்யும் காரியங்கள், பெண்களுக்குத் தரும் ஆலோசனைகள் - குழந்தைகளின் ஆரோக்கியப் பாதுகாப்புக்கு அவர்கள் எடுத்துக்கொள்ளும் முனைப்பு முறைகள் பலவற்றையும் பற்றி, அவள் புள்ளி விவரம் தயாரித்து விழாவில் அதைப் படிக்க வேண்டி டைப் அடிக்க ஏற்பாடு செய்திருந்தாள்.

''குழந்தைகள் பலர் வருவார்கள் - அவர்களுக்குப் பொம்மைகள் - மிட்டாய்கள் முதலியன வழங்க வேண்டும்... அவைகளை ஆஸ்பத்திரியின் காரில் சென்று கடைத்தெருவிலிருந்து வாங்கிவர முடியுமா?'' சிவகாமி அம்மாள் கேட்டுக் கொண்டதின் நிமித்தம் அன்று காலை அவுட் பேஷண்ட் வேலைகளை முடித்துக்கொண்டு அவள் அண்ணாசாலைக்குக் கிளம்பியிருந்தாள்.

வேண்டியவைகளை வாங்கி முடித்து விட்டாள். அப்பொழுது திடீரென்று நினைப்பு வந்தது.

அன்று அம்மாவின் பிறந்த நாள். அவளை மகிழ்ச்சியுறச் செய்ய என்ன வாங்குவது?

அம்மாவின் நீல காஞ்சிபுரம் நூல் சேலைக்கு ஜோடியாக அணிய ரவிக்கைத்துண்டு ஒன்றை அங்குள்ள துணிக்கடை எதிலாவது வாங்கிக் கொண்டு போனால்?

டிரைவரிடம் சொல்லிவிட்டு அவசரமாக அவள் எதிர்ச் சாரியிலிருந்த அந்தப் பிரபலமான துணிக்கடைக்குள் புகுந்தாள்.

டுபைடுவில் எண்பது செண்டி மீட்டருக்கு ஒரு ரவிக்கைத் துண்டை வாங்கி முடித்துக் கொண்டு, அவள் பனாரஸ் புடவையொன்றை - தொட்டுப் பார்த்துக் கொண்டு வாங்க வேண்டுமென்ற ஆசை. கண்களில் தெரிந்த பெண்ணைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். எங்கேயோ இவளைப் பார்த்திருக்கிறோமே?... என்ற நினைவில் அந்த நீல நைலக்ஸ் புடவைக்காரியைக் காலோடு தலைவரை ஆராய்ந்து ஊன்றிக் கவனித்தாள்.

கழுத்திலே தங்க சரட்டின் நுனியில் தொங்கிய தாலி, மேகப் படலமாக மார்பை மூடி இடது தோள் வழியே சரிந்த புடவைக்குள் பளிச்சிட்டது.

ஆமாம்! சந்தேகமில்லை. இவள் வனிதாதான். இவளுக்குக் கல்யாணமாகி விட்டதா?

''வனிதா - இன்னும் என்ன வாங்கணும்னு நின்னு கிட்டு இருக்கே... குழந்தைக்குப் பசி போலிருக்கு கத்துதே'' அழுது கொண்டிருந்ததொரு சிறு குழந்தையைத் தோள் மீது போட்டு தட்டி சமாதானப்படுத்திக் கொண்டே உள்ளே வந்த ஆளைக் கண்டு அவள் திடுக்கிட்டுப் போனாள்.



ரங்கராஜன்! திருமணத்திற்குப் பின்னர் சற்று ஊதிவிட்டிருந்தான். இருக்காதா? பிரபல தொழிலதிபர் மகளைக் கைப்பிடித்திருக்கிறானே... பணம் - பணத்துடன் சேர்ந்து விட்டதொரு திருமணம் அது - மனைவி தந்த ஊட்டமான சாப்பாடு - அவனது கன்னக் கதுப்புகளை கனக்கச் செய்திருந்தது - லேசாக ஒரு சிறு தொந்தி அவனது ஷர்ட்டின் கீழ்ப் பாகத்தை உப்பச் செய்து விட்டிருந்தது. முன்னைவிட சிவந்து போய் ஆள் பரங்கிக் காயாகத் தெரிந்தான். ஆனால் அவன் கவனமெல்லாம் தன் மனைவி வனிதா மீதுதான் இருந்தது. சட்டென்று கும்பலுக்குள் சம்யுக்தா மறைந்து கொண்டாள். அவளுக்கேற்பட்டதொரு அதிர்ச்சியை மகிழ்ச்சியா கோபமா என்று இனம் காண இயலவில்லை. ரவிக்கைத் துண்டுக்கான தொகையைக் கட்டி பில்லை ஒழுங்கு செய்துவிட்டு அவள் சட்டென்று கடையை விட்டு சாலையை ஒரே மூச்சில் தாண்டிக் காரில் ஏறிக் கொண்டாள்.

டிரைவர் தாகத்திற்குக் கலர் வாங்கிச் சாப்பிடச் சென்று விட்டிருந்தார். அது ஒரு வகையில் அவளுக்கு அனுகூலமாகவே இருந்தது.

காரில் உட்கார்ந்தபடி மெள்ள அவள் கண்களை துணிக்கடைப் பக்கம் ஓட்டினாள். கொஞ்ச நேரத்தில் குழந்தையைத் தோளில் சுமந்தபடி ரங்கராஜன், வனிதா அவனைப் பின்தொடர கடையின் படிகளில் இறங்கி வருவது தெரிந்தது.

வனிதா பார்க்க அழகான பெண் - திருமணமும் - தாயாகிவிட்ட தகுதியும் அவளது அழகைப் பன்மடங் காகப் பெருக்கி விட்டிருந்தன. போதாததற்கு ஒப்பனை வேறு. தூக்கி முடிந்த கொண்டையில் பூச்சரமும் - தாலிச் சரட்டுடன் - பட்டையாகக் கழுத்தைப் பற்றிக் கொண் டிருந்த நீலக்கல் நெக்லசுமாக - அவள் சிங்காரித்துவிட்ட தேர் போல அலங்காரமாகத் தெரிந்தாள். அழகிய மனைவி, பணக்கார இடத்து சம்பந்தம் என்பதின் பெருமை அவனது முகத்தில் வழிந்தது.

மனைவியின் கையில் குழந்தையைக் கொடுத்து விட்டு அவளை முன் ஆசனத்தில் உட்கார வைத்தவன், டிரைவரின் இருக்கையில் ஏறிக்கொண்டு மாமனார் வீட்டு பென்சை மிகவும் மதிப்போடு கிளப்பத் திரும்பினான். அவன் முகம் அவளுக்கு நன்றாகவே தெரிந்தது.

அப்பப்பா! அதில் எத்தனை கர்வம். கண்களில் எத்தனை மிடுக்கு? பணக்கார அழகான பெண் மனைவியாக அமைந்து விட்டாள் என்ற பெருமை.

ஆனால் அவனுக்கு மட்டும் அந்த உண்மை தெரிந்தால்?

காரில் அவள் காத்திருப்பதைக் கண்ட ஆஸ்பத்திரி கார் டிரைவர் ஓடோடி வந்து ஏறிக்கொண்டு அவசரமாக வண்டியைக் கிளப்பினார்.

வழி நெடுகிலும் சம்யுக்தாவின் மனதில் அதே எண்ணந்தான் சுற்றிச் சுற்றி வளைய வந்தது.

ரங்கராஜனுக்கு உண்மை தெரிந்திருக்க நியாய மில்லை. தெரிந்திருந்தால் அவன் ஒப்புக் கொண்டிருக்க மாட்டான்.



இப்போது அதை அவனுக்குத் தெரிய வைத்தால்?

ஆத்திரத்தில் - ஒருவித பொறாமையில் அவள் மனதில் அந்த விசித்திரமான ஆவல் ஏற்பட்டது.

அவள் பரமசிவத்தின் நர்ஸிங்ஹோமில் வேலைக்கு அமர்ந்த புதிதில் நடந்த சங்கதி அது.

பெண்களின் பிரசவ வார்டும் அவளது வசத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

நர்ஸ்களுக்குள் கசமுசவென்று பேச்சு அடிபட்டது. அவள் புதிதாக அவசரக் கேசாக பிரசவ வார்டுக்குள் அனு மதிக்கப்பட்ட அந்த இளம் பெண்ணை சோதிக்க வந்தாள்.

கல்யாணமாகாத பெண் - கல்லூரி மாணவி - காதல் என்று எங்கேயோ யாரிடமோ வசமாக சிக்கிக்கொண்டு கருவுற்றவள். அதைச் சிதைக்க நல்ல மருத்துவ முறையை நாடாது பயிற்சியில்லாத மருத்துவப் பெண்ணின் சிகிச்சைக்கு ஆளாகி - இன்கம்ப்ளீட் அபார்ஷன் அண்ட் செப்சிஸ் என்ற பயங்கர நிலையில் - காய்ச்சலும் இரத்தப் போக்குமாக அபாயகர நிலையில் அனுமதிக்கப் பட்டிருந்தாள்.

பெரிய மனிதர் வீட்டுப் பெண் என்று நர்ஸ்கள் இரகசியமாக முறுவலித்துக் கொண்டனர்.

அவளைப் பிழைக்க வைப்பதற்குள் - அவளுக்கு மேல் வேலை பார்த்த டாக்டர் மாலதியும், அவளும், டாக்டர் பரமசிவமும் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

காய்ச்சலை - முதலில் கவனித்துவிட்டு, நாள் முழுவதும் நோயாளியை குளூகோஸ் ட்ரிப்பில் வைத்திருந்து - கொஞ்சம் குணமானதும் மயக்கம்

கொடுத்து. கருப்பையில் எஞ்சியிருந்த கருவை அவர்கள் அகற்றி முடித்து இரவும் பகலும் அவளைப் பத்திரமாகப் பாதுகாத்தனர். பத்து நாட்கள் அவள் அந்த நர்ஸிங்ஹோமில் தங்கியிருந்தாள். தண்ணீராகப் பணத்தை அவள் தந்தை வாரி இறைத்தார்.

இந்தக் காலத்தில்கூட படித்திருந்தும் பெண்கள் இப்படிப்பட்டதொரு ஆபத்தில் சிக்கிக் கொள்கிறார்களே என்று அதிசயப்பட்டாள் சம்யுக்தா - அப்பொழுதும்.

கல்லூரி நாட்களில் காதல் விளையாட்டில் கருவுற்றுப் பின்னர் அதைச் சிதைத்துக் கொண்டவள் வனிதா எனும் அந்தப் பெண். அவளைத் திருமணம் செய்து கொண்டு விட்டிருக்கிறான் ரங்கராஜன்.

சாதாரணமாக ஒரு கை கடிகாரம் கைமாறியபோது - அதை வெறுத்து ஒதுக்கும் குணமுடையவன் - செகண்ட் ஹாண்ட் காரை வாங்கி உபயோகிப்பதையே விரும்பாதவன் - எந்தப் பொருளும் முதல் முதலாக அவனது கைபட வேண்டும் என்ற தீவிர ஆசையும் - ஒரு தனி ஆவலும் கொண்டவன். அவனுக்குக் கை மாறிப் போன வனிதா மனைவியாகக் கிட்டிவிட்டிருக்கிறாள். இந்த உண்மையை அவள் அவனுக்குச் சொல்லவேண்டும். அவன் வேதனையில் துடிக்கவேண்டும். அவளை அவமானப்படுத்தினானே - இப்போது அவளுக்கு சந்தர்ப்பம் சரியாகக் கிட்டிவிட்டிருக்கிறது. 'கைமாறிய போது - கடிகாரத்தைக் கூட எறிந்துவிடும் பழக்க முடையவராச்சே. இப்போ உங்க மனைவியை என்ன செய்யப்போறீங்க? - தூக்கி குழந்தையுடன் குப்பைத் தொட்டியில் போட்டு விடுவீர்களா?' விவாகரத்து செய்து



விடுவீர்களா? படபடவென்று கேட்கவேண்டும். அவனது உணர்வுகளை அலற அடிக்க வேண்டும்.

மனதிலே வெறுப்பும், பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற வீம்பும் தலைதூக்கின.

ஆஸ்பத்திரியை அடைந்ததும் முதல் வேலையாக அவள் தொலைபேசியில் ஜீவன்தாஸ் நிறுவனத்தை அழைத்தாள்.

''சீஃப் என்ஜினியர் மிஸ்டர் ரங்கராஜன்! ஒரு நிமிஷம் இருங்கோ கனக்ஷன் கொடுக்கிறேன்'' தொலைபேசியை இயக்கிய பெண் பதிலைக் குழைந்தாள்.

''ரங்கராஜன் பேசறது - நீங்க யார்? என்ன வேணும்?''

பழக்கமான அந்தக் குரல் சம்யுக்தாவின் மண்டையில் அடித்தது போல ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தது.

உடல் முழுவதும் நடுங்க - நெற்றியில் வியர்வை வழிய அவள் ஒருவிதக் கலவரத்தில் சட்டென்று போனை வைத்து விட்டாள்.

ரங்கராஜனுடன் தொடர்பு கொண்டு அவள் போனில் பேசி, அந்தக் கடந்த கால சங்கதியைச் சொல்ல முடியும்.

அவனை நிலைகுலையச் செய்து பழிக்குப்பழி தீர்த்துக் கொள்ள இயலும் - ஆனாலும் சமூக சேவையே தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்று வாழ முற்பட்டிருக்கும் அவள் அதைச் செய்வது நியாயமா?

அதன் பயன் என்னவாக இருக்கும்?

சந்தோஷமாகத் தன் கணவனுடன் கடந்த காலத்தில் தான் செய்த தவறை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் வனிதாவின் வாழ்க்கை நாசமாகி விடக்கூடும். கணவன் மனைவியிடம் இப்போது காணப்படும் நேசமும் நெருக்கமும் நொறுங்கி... அவர்களது வாழ்க்கை சின்னா பின்னமாகி விடலாம். அதையே காரணம் காட்டித் தன்னை ஏமாற்றி விட்டாள் என்று அவள் மீது பல பழிகள் சுமத்தி விவாகரத்துக்கு அவன் அடிகோலலாம்.

அவளுடன் சேர்ந்து தொடர்ந்து வாழ மறுக்கலாம். ரங்கராஜன் எதுவும் செய்யக்கூடிய ஆசாமி.

வனிதாவை உதறிவிட்டு... இன்னொரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொள்வது அவனுக்கு மிகவும் எளிது.

விவாகரத்து செய்யப்பட்ட பெண்... கைக் குழந்தைக்காரி என்றதும் மாப்பிள்ளைகள் முகத்தை சுளித்துக் கொண்டு மாயமாகி விடுவார்கள். பணத்தினால் அவள் தந்தை சில காரியங்களைச் சமாளிக்க முடியும். எல்லா சங்கதிகளையும் எப்பொழுதும் சாதிக்க இயலாதே. சே! பாவம் இந்தப் பெண் வனிதா. அவள் சம்யுக்தாவுக்கு என்ன தீங்கு செய்தாள்?

அந்த உண்மையை அவள் ரங்கராஜனுக்கு தெரியப்படுத்தினால் பழி வாங்கப்படப் போவது வனிதா... அவன் அல்ல. அவன்தான் ஓர் ஆண் பிள்ளையாச்சே - என்ன வேணுமானாலும் செய்து விட்டு, எங்கு வேணுமானாலும் சுற்றி விட்டுக் காலைக் கழுவிக் கொண்டு வீட்டுக்குள் புகுந்ததும் புனிதனாகி விடுவானே!



பெண்ணுக்கு அந்த யோக்கியதை சமூகத்தில் தரப்படுவதில்லையே - அப்படியிருக்கையில் ஒரு பெண் இன்னொரு பெண்ணின் வாழ்க்கைக்கு எதிரியாக அமைவது நியாயமா? தன் மனச்சாட்சி எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் கொடுக்க இயலாது அவள் திணறிப் போனாள்.

அன்று மாலை ஓய்வாக அவள் சிவகாமி அம்மாளுடன் கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்த போது, கடைத் தெருவில் கண்ட காட்சியையும்... வனிதாவைப் பற்றிய உண்மையையும் அவளிடம் தெரிவித்தாள்.

''வைத்தியர் ஒருவர் தமது நோயாளியைப் பற்றிய விவரத்தை யாரிடமும் தெரிவிக்கக் கூடாது. அது முறையல்ல. வனிதாவைப் பற்றிய விவரத்தை உங்களிடம் சொன்னதற்குக் காரணம் உங்களுக்கே தெரியும். நான் ஒரு பெரிய பிசகு செய்ய இருந்தேன் ஆண்ட்டி. அதனால் உணர்ச்சி வசத்தில்...'' சம்யுக்தாவின் குரல் தழதழத்தது.

பரிவுடன் அவள் கையைப் பற்றிக் கொண்டாள் சிவகாமி. ''உன் மனசாட்சி உன்னை முடிவில் காப்பாற்றி விட்டது. நீ எடுத்த முடிவு சரியானது. எனக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது... ரங்கராஜனைப் போன்ற ஆண்கள் தம்மையறியாமலேயே தமது தவறுகளுக்கு தண்டனை அடைந்து விடுகிறார்கள். ''ஆக்ஷன் அண்ட் ரியாக்ஷன் ஆர் ஆப்போசிட் அண்ட் ஈக்வல்'' என்பது பௌதிகத்தில் ஒரு விதி - அவரவர் செய்கின்ற தவறுகளுக்குத் தண்டனையை அதே அளவில் இயற்கையே விரைவில் தந்து விடுகின்றது.

''கைமாறியவள் என்று உன்னை உதாசீனப்படுத்தி
ஒதுக்கி உன் மனதை ஒடித்த ரங்கராஜனுக்கு, இப்போது
கிடைத்திருப்பவள் ஒரு செகண்ட் ஹாண்ட் மனைவி. ஒரு
கை மாறியவளோ பல கை மாறியவளோ அவளுக்குத்
தான் அந்த இரகசியம் தெரியும்... இதைவிட அவனுக்கு
வேறு தண்டனை அவசியமல்ல. தனக்களிக்கப்
பட்டிருக்கும் இந்த அவமானத்தை அறியாது ஏமாந்த
சோணகிரியாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறானே -
இதைவிட அவனுக்கு வேறு சரிவு வேண்டுமா?''
சிவகாமி சிரித்தாள். கடல் அலைகள் சிரிப்பது போலப்
புரண்டு, மணல் மீது மோதிச் சுருண்டு ஓடுவதை
வேடிக்கை பார்த்தபடி - சம்யுக்தாவும் மெல்ல சிரித்தபடி
ஈர மண்மீது மென்மையான அடிகளை வைத்துக்
கொண்டு அமைதியுடன் நடந்தாள்.

''ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண் தீங்கு செய்ய
நினைப்பது முறையல்ல. ஒரு பெண்ணை இன்னொரு
பெண் ஆதரித்து உதவ வேண்டும். அப்பொழுதுதான்
ஆண்பிள்ளைத்தனமான உணர்விலே அகந்தையோடு
உலவுகின்ற இந்தச் சில ஆண்கள் வழிக்கு வருவார்கள்.''
காதோடு அந்த அலைகள் பேசியது போன்ற பிரமிப்பிலே
சம்யுக்தா சமாதானமடைந்த மனநிலையில் அமைதியாக
நடந்து கொண்டிருந்தாள்.

★ ★ ★